# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLI
6 - MAY
MADR



அப்பர் சுவாமிகள்,
[redacted] திருவாமூர்.

மாலே 10] கீலக - சித்திரை - மே, 1968 [மணி 8

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.



நமது அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன், எம்.ஏ.,பி.எல்., அவர்கள், பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயிலைச் சேர்ந்த முடிக் காணிக்கை மண்டபத் திறப்பு விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தல். *(29—3—68)*

## பொருளடக்கம்


1. சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்
2. வேதாந்த தேசிகர்
3. திருநாவுக்கரசர் மாட்சி
4. திருப்பாவைச் செழும் பொருள்
5. மகாபாரதம்
6. "இல் என வேண்டா"
7. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாகம்
8. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
9. சீவ—சிவ ரகசியம்
10. மதிப்புரைகள்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

6 - MAY 1968




மாலை 10] பிலவங்க - சித்திரை - மே, 1968 [மணி 8

# "சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்"

**முன்னுரை :**

தமிழகம் கவிதைகளுக்கும், கவிஞர் களுக்கும் மிகவும் புகழ் பெற்றது. வாழை யடி வாழையாகத் தமிழகத்தில் தொன்று தொட்டுத் தோன்றியருளியுள்ள சிறந்த பெருங் கவிஞர்களின் வரிசையில், சேக் கிழார் பெருமானுக்குத் தனிப்பெரும் சிறப் பிடம் உண்டு.

இங்கிலாந்து நாட்டின் வாழ்க்கை நெறிப் பண்பாடுகளை விளக்கவல்ல மாபெருங் கவிஞர்களாக ஷேக்ஸ்பியரும், மில்ட்டனும் பெரிதும் போற்றி மதிக்கப் பெறுதல் போல, நமது தமிழகத்தின் உயர்வற உயர்ந்த சிறந்த நாகரிகப்பண்பாட்டு நெறி முறை நலங்களை விளக்கும் இணையற்ற இருபேரிலக்கியங்களை இயற்றியளித்தரு ளியவர்கள், திருவள்ளுவரும் சேக்கிழா ருமே யாவர் எனலாம்.

திருவள்ளுவர் மக்கள் வாழ்வாங்கு வாழும் நெறிமுறைகளை வகுத்துப் போந் தார்; சேக்கிழார் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய மாட்சிமை மிக்க சான்றோர்களின் அருள் வரலாறுகளை விரித்துரைத்தருளி னார். திருவள்ளுவரின் திருக்குறள் 'வாழ்க்கைக்கு இலக்கணம்' என்றால், சேக் கிழார் பெருமானின் திருத்தொண்டர் புரா ணம், அவ்விலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்ற 'இலக்கியம்' என லாம்.

'தண்டமிழின் மேலாந் தரம்' எனப் போற்றத்தக்க தலைசிறந்த தமிழ் இலக் கியங்களின் வரிசையில், சேக்கிழார் அரு ளிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம், முதன்மையும் சிறப்பும் மிக்கதாகத் திகழ்கின்றது.

**இலக்கியச் சுவைகள் :**

பண்டைத் தமிழ்ப்பெருஞ் சான்றோர்கள், இலக்கியங்களிற் காணப்படும் சுவைத் திறன்களைப் பொதுவாக ஒன்பது வகை யாகப் பாகுபாடு செய்து உணர்த்தியரு ளினர்.

> "நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்று
> அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

என்பது தொல்காப்பிய நூற்பா. நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்னும் எட்டுச் சுவைகளுடன், நடுவுநிலை (சாந்தம், சமநிலை) என்னும் ஒரு சுவையையும் கூட்டி, இலக்கியச் சுவைகள் ஒன்பது என்று கூறுவர் அறிஞர்.

**தெய்வ நலச் சுவை :**

அவ்வொன்பான் சுவைகளோடு தெய்வ நலம் சான்ற பக்திச் சுவை என்னும் மிக மேலான பெருஞ்சுவையினையும், பத்தாம் சுவையாகக் கண்டு பாங்குற அமைத்துச் சேக்கிழார் தமது பெரிய புராணத்தினைப் பாடியருளினார்.

'பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப்
பாடிய கவி வலவ'

எனப் பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடுதற்கு ஏற்ப, சேக்கிழார் பெருமானின் செய்யுட்களில் பக்திச் சுவை என்னும் தெய்வநலப் பண்பு பெரிதும் செறிந்து விளங்குகின்றது.

"பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர்
பரமே பார்த்திருப்பர்;
பதார்த்தங்கள் பாரார்"

எனச் சிவஞான சித்தியார் செப்புதல் போல, தெய்வ அருள் நலத்தில் தோய்ந்து திளைத்த சிந்தை வாய்ந்த சேக்கிழார் பெருமான், எந்த எளிய ஒரு பொருளையும் தெய்வநலம் சான்றதாகவே காண்கின்றார்; எதனைப் பற்றிக் கூற முற்பட்டாலும், அதனைத் தெய்வநல இயல்புடன் சேர்த்தியைத்து வைத்தே சிந்தை களிக்கப் பாடுகின்றார்.

**கயிலை மலை :**

(1) பனிமால் வரையின் பாலதாக உள்ள கயிலை மலையைப் பற்றிக் குறிப்பிடுங்கால், கண்கவரும் அதன் அளவற்ற பேரொளியும் வெண்ணிறமும் தெய்வநலச் சிறப்பும், சேக்கிழார்க்குச் சிவநெறியின் சிறப்படையாளமாகத் திகழும் திருநீற்றினையே நினைப்பிக்கின்றன; அப்பெருமலையின் அளப்பரும் அழகுக் காட்சியுணர்வு புண்ணியம் எல்லாம் ஒருங்கே திரண்டு பொலிந்து விளங்கினாற்போலவே, அவர்தம் மனக் கண்ணுக்குப் புலனாகின்றது.

"பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது,
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை!"

"அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல கும்,நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்யவந் தெய்திய
புண்ணி யம்திரண் டுள்ளது போல்வது!"

**காவிரியாறு :**

இங்ஙனமே சோழ நாட்டிற் பாய்ந்து வளம்பெருகும் காவிரியாற்றைக் குறித்துச் சேக்கிழார் பாட முற்படுகின்றார். காவிரி யாறு வெறும் நீர்ப் பெருக்காக, அவர்தம் தெய்வநலங் கெழுமிய திருவுளத்திற்குத் தோன்றுகின்றிலது. காவிரியாற்றினைத் தெய்வநல இயல்புகள் பலவும் கலந்து செறிந்து திகழ்வதாகவே, அவர் காண்கின்றார்! பிரமதேவனைப் போலவும், கங்கைமா நதியைப் போலவும், அம்பிகையைப் போலவும், அடியார்களைப் போலவும், கவின்மிக்க இயலும் செயலும் வாய்ந்தே காவிரியாறு திகழ்வதாகச், சேக்கிழார் பெருமான் பாடுகின்றார்!

**காவிரியும் பிரமனும் :**

(1) காவிரி யாறு ஒரு வகையில் பிரமதேவனைப் போன்றதாக விளங்குகின்றது. பிரமதேவன் திருமாலின் உந்திச் சுழியிலுள்ள தாமரை மலரின் மேல் வீற்றிருக்கின்றான்; பல உயிர்களையும் படைத்தருள்கின்றான்; தனது கையில் குண்டிகை என்னும் நீர்க்கரகம் ஏந்தியுள்ளான். அவ்வாறே காவிரி யாற்றிலும் உந்தியைப் போன்ற சுழிகள் ஆங்காங்கே மலர்கின்றன; தனது நீர்ப் பெருக்கால் பல உயிர்களுக்கும் அது பெரிதும் நலம் விளைக்கின்றது; அதனது தூய இனிய நீரை அனைவரும் பாத்திரங்களில் முகந்து செல்லுகின்றனர். இவ்வாற்றால், காவிரியாறு பிரமதேவனைப் போலத் திகழ்கின்றது.

மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வரும்
சால்பினால், பல்லுயிர் தருதல் மாண்பினால்,
கோலநற் குண்டிகை தாங்கும் கொள்கையால்,
போலும்நான் முகனையும், பொன்னி மாநதி.

**காவிரியும் கங்கையும் :**

(2) காவிரி ஆறு, ஒரு வகையில் கங்கைமா நதியை ஒத்துக் காணப்படுகின்

றது. கங்கை நதி, சிவபிரானின் திங்கள் சூடிய சடைமுடியின் சிகரத்து உச்சியிலுள்ளது. அதன் அருகில், இறைவனின் சடைமுடியிலுள்ள வெண்தலை விளங்குகின்றது; அதன்கண் அலைகள் மிகுந்து, நுரைபெருகிப் பொருகின்றன. அங்ஙனமே காவிரி யாற்றின் அலைகளும் வானளாவ மிக உயர்ந்து, திங்கள் சூடிய முடிச் சிகரத்து உச்சியை உடையதாய்ப் பொங்கியெழுந்து, பெருகும் தன் அலைகளில் வெண்மையான நுரையைப் பரப்பிக் கொண்டு, வேகமாக மோதிப் பாய்ந்து செல்கின்றது. இவ்வாற்றால், 'பொன்னியாம் கன்னி' ஆகிய காவிரியின் வெள்ளம், சிவபிரானின் சடைமுடியிலிருந்து பெருகும் கங்கையாறு எனத் தோன்றுகின்றது.

> திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்
> பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்,
> எங்கள்நா யகன்முடி மிசைநின் றேயிழி
> கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே.

**காவிரியும் காமாட்சியும் :**

(3) அழகிய நீண்ட மலையிற் பிறந்து வளர்ந்து வரும் மேன்மையாலும், தமிழகத்திற் பாய்ந்து நாட்டை வளப்படுத்திப் பல அறங்களும் வளரும்படி செய்து வரும் மாட்சிமையினாலும், காவிரி ஆறானது, இமயமலை அரசனின் மகளாகத் தோன்றியவளும், காஞ்சிபுரத்தில் இருநாழி நெற் கொண்டு முப்பத்திரண்டு அறங்களை வளர்த்தவளும் ஆகிய ஸ்ரீகாமாட்சியினுடைய திருவுள்ளத்தினின்று பொங்கி எழும் கருணை வெள்ளத்தைப் போற் பரவிப் பாய்ந்து நலம் விளைவிக்கின்றது.

> "வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
> எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
> அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
> உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது."

**காவிரியும் அடியாரும் :**

மணம் மிகுந்த மலர்களை வாரிக் கொணர்ந்து தூவியும், தனது பெரிய அலைகளால் நீரைச் சொரிந்தும், கரையிலுள்ள எண்ணில்லாத பல சிவாலயங்களிலுள்ள இறைவனை வழிபட்டுச் செல்லும் திறனால், காவிரி யாறானது இறைவனுக்கு நீர் சொரிந்து மலர் சூட்டிப் பணிந்து வழிபடுகின்ற சிவனடியார்களைப் போன்ற சிறந்த செயலுடையதாகத் திகழ்கின்றது.

> "வம்பு லாம்மலர் நீரால் வழிபட்டுச்
> செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்து
> எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
> உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்!"

**நெற்பயிர் :**

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்னும்படி திகழ்வது சோழநாடு. சோழ நாட்டிற் கண்கொண்டு காணுமிடம் எல்லாம் பச்சைப்பசேல் என்று, வயல்களில் நெற்பயிர்கள் செழித்தோங்கி நிற்கும். சேக்கிழார் பெருமான் 'திருநாட்டுச் சிறப்பு' என்னும் பகுதியில், அது பற்றிப் பாடத் தொடங்குகின்றார். வயல்களில் நெற்பயிர் வளரும் காட்சியை நாமும் பல்கால் கண்டு மகிழ்ந்திருக்கின்றோம். நம்மனோர்க்கு அது வெறும் காட்சியாகவே அமைந்தொழிகின்றது; ஆனால், சிவனடியார்களின் திருவருட் சிறப்பிலேயே ஈடுபட்டுத் திளைத்து நிற்கும் சேக்கிழார் பெருமானுக்கு, வயல்களில் வளரும் நெற்பயிர்க் காட்சி தானும், சிவனடியார்களின் சிறந்த பல பண்புகளையே நினைவூட்டி மகிழ்ச்சியை விளைவிக்கின்றது.

நெற்பயிர்கள் செழித்தோங்கி வளர்கின்றன; தமக்கு ஒப்பு இன்றி நெருக்கமாகத் தூறு படர்ந்து எழுகின்றன; தூய்மையும் வெண்மையும் வாய்ந்து, உள்ளே பதர்த் தன்மை படியாமல், நெல் முகிழ்த்தற்குப் பால் ஊறி நிற்கின்றன; நெற்கரு முதிர்ந்து பசுமையுடையனவாகின்றன; சுருண்டு பிணைந்திருந்த கதிர்கள் வெளிப்பட்டு விரிகின்றன; நெல்மணிகள் நிரம்பிக் கதிர்களின் சுமையினால் ஒன்றோடொன்று தலை சாய்ந்து நிற்கின்றன.

அரனுக்கு அன்பர் ஆகிய அடியார்களும், உயரிய நோக்கங்களையுடைய சிந்தையினராய் ஓங்கி நிற்கின்றனர்; குண

நலங்களால் தமக்கு ஒப்பு இல்லாமல் திகழ் கின்றனர்; வெண்மையான தூய உள்ளத் தினராய் விளங்குகின்றனர்; அன்பு முதிர்ச் சியினுல் அவர்களது திருமேனியின் நிறம் வேறுபடுகின்றது; அவர்களின் அறிவு வளர்ந்து விரிவடைந்து மாட்சிமை மிக வெளிப்பட்டு விளங்குகின்றது; ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, அன்பும் பண்பும் தோன்ற, அவர்கள் தம் தலை வணங்கி மகிழ்கின்றனர்.

இங்ஙனம் நெற்பயிர் விளைவிற்கும், சிவ னடியார்களின் சிந்தைக்கும் இடையே ஒப்புமைப் பண்புகள் பல கண்டு, சிலேடை யுவமை பாடிக் காட்டி, நம்மை மகிழ்விக் கின்றார் சேக்கிழார் பெருமான் !

" சாலிநீள் வயலின் ஓங்கித்
தந்நிகர் இன்றி மிக்கு,
வாலிதாம் வெண்மை யுண்மைக்
கருவினும் வளத்த வாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு,
சுருள்விரித்து அரனுக்கு அன்பர்
ஆலின சிந்தை போல,
அலர்ந்தன கதிர்கள் எல்லாம்"

" பக்தியின் பாலர் ஆகிப்
பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள்
தலையினால் வணங்கு மாபோல்,
மொய்த்தநீள் பத்தி யின்பால்
முதிர்தலை வணங்கி, மற்றவ்
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி எல்லாம் "

சேக்கிழார் பெருமானின் திருவுள்ளம், இறைவனின் திருவருட் சூழலிலேயே திளைத்து நிற்பது; 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் இயல்புடையது; அஃது எந்தப் பொருளையும் இறையருள் மயமாகவே கண்டு இன்புறும் பண்பு வாய்ந் தது ! ஆதலின் வண்டுகள் மரங்கள் மலர்கள் முதலிய எளிய பொருள்களை யும் கூட, அவர் புனைந்துரைத்துப் பாடும் திறம் வியந்து மகிழத் தகுவதாக உள் ளது.

**வண்டுகளும் தொண்டர்களும் :**

சுந்தரர் திருவதிகையினின்று தில்லைக் குச் செல்கின்றார். செல்லும் வழியில் அவர் பற்பல இனிய காட்சிகளைச் காண் கின்றார். தில்லையைச் சுற்றியுள்ள மதி லின் புறத்தேயுள்ள அகழிகளில், வண்டு கள் இங்கு அங்குமாகப் பறந்து சென்று கொண்டிருக்கின்றன. அவ் வண்டுகள் சிவனடியாரைப் போல விளங்குகின்றன என்கிறார் சேக்கிழார் ! அடியவர்கள் தம் உடம்பெல்லாம் திருநீறு பூசியிருப்பார்கள்; இறைவனின் அருட்புகழை இடையறாது எப்பொழுதும் பாடித் துதிப்பார்கள்; அவ் வாற்றால் "இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை" எனும்படி மகிழ்ச்சியுற்றுக் களித் திருப்பார்கள்.

அம்முறையில், நெய்தற்றிணைக் கருப் பொருள்களுள் ஒன்று ஆகிய தாழை மலர்களின், வெண்மை மிக்க மகரந்தத் துகளினைத் திருநீறு போல, வண்டுகள் தம் உடம்பெல்லாம் அளைந்து பூசிக் கொண்டுள்ளன; அவைகளின் இனிய மெல்லிய இசை முரற்சி, அடியவர்கள் பாடும் துதிப்பாடல்களைப் போல உள்ளது. அடியவர்கள் சிவானந்தம் ஆகிய தேனைப் பருகி இன்புற்றுச் செம்மாந்திருத்தல்போல, வண்டுகளும் மலர்களில் உள்ள தேனை மாந்திக் களித்து இங்கும் அங்கும் பறந்து களிநடம் புரிகின்றன,

" மன்றுள் ஆடும்மது வின்நசை யாலே
மறைச் சுரும்பு அறை புறத்தின் மருங்கே,
குன்று போலும் அணி மாமதில் சூழும்
குண்டு அகழ்க் கமல வண்டு, அலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய ஆகித்
தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச்
சென்று சென்று முரல்கின்றன கண்டு
சிந்தை அன்பொடு திளைத்து எதிர்சென்றார் "

**மாமரங்களின் வேள்வி :**

திருஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழிப் பதியின் சிறப்பினை விவரித்துப் பாட முற் படுகின்றார் சேக்கிழார் ! சீர்காழிப்பதி மருதத்திணையைச் சேர்ந்தது. அதனால் அங்கு மாமரங்களும், தாமரை மலர்களும்,

எம்மருங்கும் நிரம்பிக் காணப்படுகின்றன. திருஞான சம்பந்தர் வேதவேள்விகள் தழைக்கும்படி செய்யத் தோன்றியருளியவர். ஆதலின் சேக்கிழார், மாமரங்களுங் கூட, சீர்காழிப்பதியில் 'ஆகுதி வேட்கும்' தகைமையனவாக விளங்குகின்றன என்கின்ருர். மேலும், திருஞானசம்பந்தர் சீர்காழிப் பதியில் அந்தணர் குலத்து உதித்தவர் ஆதலின், அங்குள்ள தாமரை மலர்களும் அந்தணரின் இயல்புகளைப் பெற்றுள்ளன என்று, சுவைமிக விளக்குகின்ருர் சேக்கிழார் !

சீர்காழியில் உள்ள வயல்கள், யாக குண்டங்களாகவும்; வயல்களில் பூத்துள்ள செந்தாமரை மலர்கள், யாகத் தீயாகவும்; அவ்வயல்களின் வரப்புகளில் வளர்ந்துள்ள மாமரங்களின் இனிய பழங்கள் கனிந்து முதிர்ந்து பொழியும் தேனனது நெய்யாகவும்; அது மா இலைகளின் நுனி வழியாக வழிந்து செந்தாமரை மலர்களில் விழுதல், யாக குண்டங்களில் மாவிலையினுற் செய்த சுருக்கும் சுருவமும் கொண்டு நெய் சொரியப் பெறுதலாகவும் அமைய, மாமரங்கள் அந்தணர்களைப்போல ஆகுதி வேட்கின்றன.

> " பரந்தவிளை வயற்செய்ய
> பங்கயமாம் பொங்கெரியில்
> வரம்பில்வளர் தேமாவின்
> கனிகிழிந்த மதுநறுநெய்
> நிரந்தரம்நீள் இலைக்கடையால்
> ஒழுகுதலால், நெடிதுஅவ்வூர்
> மரங்களும் ஆகுதிவேட்கும்
> தகையஎன மணந்துளதால் "

**அந்தணரும் தாமரையும் :**

அந்தணர்கள் தமது தோற்றத்தில் தெய்வ ஒளியும் மணமும் பெற்றுத் திகழ்வர்; கையில் தருப்பையாகிய புல்லும், மார்பில் பூணூலும் தாங்கியிருப்பர்; தூய்மை பொருந்திய நுண்ணிய திருநீற்றுப் பொடியை அணிந்திருப்பர்; இறைவனைச் சாம வேதம் பாடித் துதிப்பர்; ஆனந்தக் கண்ணீர் ததும்பி நிற்பர்.

அந்தணர்க்குரிய இவ்வியல்புகள் அனைத்தையும், செந்தாமரை மலர்களும் பெற்றுத் திகழ்கின்றன. மென்மையான புற இதழ்கள் உடையனவாய், நாளத்தினுள்ளே மெல்லிய நூலைக் கொண்டுள்ளன. மகரந்தமாகிய திருநீற்றுத் துகளை அணிந்திருக்கின்றன. தம்மிடம் வந்து மொய்க்கும் வண்டுகள் மிழற்றும் இன்னிசையால், சாமவேதம் ஓதுகின்றன. தேன் துளிகள் ஆகிய கள்நீர் ததும்பி விளங்குகின்றன.

> " காமர்திருப் பதியதன்கண்
> வேதியர்போற், கடிகமழும்
> தாமரையும், புல்லிதழும்
> தயங்கிய நூலும் தாங்கித்,
> தூமருநுண் துகள் அணிந்து,
> துளிவரு கண்ணீர் ததும்பித்,
> தேமருமென் சுரும்பிசையால்
> செழுஞ்சாமம் பாடுமால் "

**திருப்புகலூரும், திருவாரூரும் :**

சேக்கிழார் பெருமான் தேவாரத் திருமுறைகளில் மிக்வும் ஈடுபாடுடையவர்; அதனை அழுந்தி அறிந்து ஆராய்ந்துணர்ந்து அனுபவித்துத் திளைத்து நின்றவர். தேவாரத் தமிழிசையைப் பலகாலும் கேட்டுக் கேட்டு உளம் கசிந்துருகி உவகை உற்றவர் ! திருமுறைகளின் செழும்பொருளையும், சிறந்த இசையையும் ஆழ்ந்து அனுபவித்து ஆரா இன்பம் அடைந்தவர்களில், சேக்கிழாரே தலைசிறந்தவராவர். ஆதலின், அவர்தம் அரிய அனுபவ நலங்கள், அவருடைய கவிதைகளில் பலவிடங்களில் தாமே அழகுற வெளிப்படுகின்றன.

திருநாவுக்கரசர் வாழ்ந்த திருப்புகலூரையும், நம்பியாரூரர் வாழ்ந்த திருவாரூரையும் பற்றி எண்ணும் போதே, சேக்கிழார் பெருமானுக்கு அப்பெருமக்கள் அருளிச் செய்த தேவாரத்திருப்பாடல்களின் சிறப்பும் உருக்கமும் தெய்விகநலமும் முதலியன பற்றி, அவர் தம் திருவுள்ளத்திற் பலதிற நினைவுகள், கடல் எனப் பொங்கி எழுந்து அலைகொழிக்கின்றன.

"வண்டு பாடப் புனற்றடத்து
மலர்ந்து கண்ணீர் அரும்புவன,
கொண்ட வாச முகையவிழ்ந்த
குளிர்பங் கயங்களே அல்ல;
அண்டர் பெருமான் திருப்பாட்டின்
அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும்
துளித்த கண்ணீர் அரும்புமால்"

"உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள், பைங்
கிள்ளை பாடுவ, கேட்பன பூவைகள்!"

திருப்புகலூரில் உள்ள நீர் நிலைகளில் எல்லாம், தாமரைப் பூக்கள் நிரம்பியிருக்கின்றன. மணம் கமழ்ந்து, முகையவிழ்ந்து, குளிர்ச்சியும் மிக்க அத்தாமரை மலர்கள், வண்டுகள் இசை பாடுதலைக் கேட்டு மகிழ்ந்து மலர்ச்சி யுறுகின்றன; கள்நீர் ஆகிய தேன் துளிக்கின்றன. இது மட்டுமோ? இத்தாமரை மலர்களைப் போலவே, கண்ணீர் அரும்புகின்ற வேறு சில தாமரைகளும் அங்கே யுள்ளன. அன்பு நிரம்பிப், பக்குவம் எய்திச், சாந்தம் ததும்பும் அடியார்களின் திருமுகம் ஆகிய தாமரை மலர்களும் கூட, அங்கே சிவ பெருமானின் அருள்நலம் பரவும் தேவாரத் திருப்பாடல்களின் அமுத இசை நலத்தினைச் செவிமடுத்து, ஆனந்தக் கண்ணீரைச் சொரிகின்றன.

திருவாரூரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் எல்லாம், தெளிந்த ஓசைநலம் மிகுந்த தேவாரத் திருப்பதிகங்களைக் கிளிகள் பாடுகின்றன; அவற்றை நாகணவாய்ப் பறவைகள் கேட்டு மகிழ்கின்றன. தேவாரத் திருப்பாடல்களின் தெய்விக இசைநலனைக் கேட்டு, உள்ளம் உருகாதவர்கள் யாவர்? என்கின்றார் சேக்கிழார்!

## இருளின் இயல்பு :

இரவிற் பரவும் இருளையும், அதனைப் போக்கி ஒளிதரும் நிலவையும், நாம் நன்கு கண்டறிந்துள்ளோம். இருளையும் நிலவையும் பற்றி எத்தனையோ பல கவிஞர்கள் எவ்வெவ்வாறோ பாடியிருக்கின்றனர். சேக்கிழார்க்கும் அவற்றைப் பற்றி ஓரிடத்தே பாட வேண்டிய வாய்ப்பு நேர்கின்றது. அவர் இவற்றைப் பாடியருளும் திறம், ஒரு பெரும் தனிச் சிறப்பு வாய்ந்து மிளிர்கின்றது. இவற்றையும் கூட, அவர் தம்முடைய இறையுணர்வு நலம் பெரிதும் கலந்து பிறங்கும் வண்ணமே பாடி யருள்கின்றார்!

மாலை நேரத்தில் சூரியன் மறைந்து, இருள் பரவத் தொடங்குகின்றது. அவ்விருள் பெரிதும் அடர்ந்து, மிகவும் கருமை நிறம் படர்ந்து, அச்சம் விளைக்கும் நிலையில் எங்கும் பரவுகின்றது. கரிய அவ்விருளின் கொடிய தன்மை, விலைமகளிரின் மாசுபடிந்த மனத்தையும், கொலை களவு வஞ்சகம் ஆகியனவற்றையே செய்துழலும் கொடியவர்களின் தீவினைகளையும், சிவ பெருமானின் 'நமசிவய' என்னும் திருவைந்தெழுத்தினை உணர்ந்து ஓதித் தியானிக்கும் அறிவு பெறாதவர்களின் நெஞ்சத்தைதையும், போன்று இருந்தது.

"பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்,
வஞ்ச மாக்கள்தம் வல்வினையும், பரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும், என்ன இருண்டது நீண்டவான்"

## திருநீறும் நிலாவும் :

மாலையில் முன்நேரத்தில் பரவிய இருள் நீங்கி மறையும்படி, இரவிற் பின்நேரத்தில் நிலாத் தோன்றுவதாயிற்று. நிலவு தோன்றிய தன்மை, திருநீற்றின் தன்மைகளோடு பெரிதும் ஒத்திருந்தது, எனச் சேக்கிழார் பெருமான் தம் தெய்விக உளநிலைச்சால்பு தோன்றக் குறிப்பிடுகின்றார். நிலவு வெண்ணிறம் உடையது; திருநீறும் வெண்மை நிறம் வாய்ந்தது. நிலவு தூய்மையும் தண்மையும் கொண்டது, அங்ஙனமே திருநீறும் தூய்மை மிகுந்து, தன்னை அணிந்து கொள்வோர்க்கு மனஅமைதியாகிய தண்

மையை அளிப்பது. நிலவினைப் போலவே திருநீறும்ஒளிபயக்கவல்ல மாண்புடையது. நிலவின் ஒளி உலகெங்கும் பரவுதலைப் போல, திருநீற்றின் பெருமையும் உலகர் அனைவரும் போற்றத்தக்க பொதுமைநலம் பொருந்தியது. நிலவின் ஒளி, மன்னுயிர் கட்கெல்லாம் இன்பம் பெருக விளைவிக்கும் ஏற்றம் மிக்கது; அது போலத் திருநீறும், அன்பும் நம்பிக்கையும் கொண்டு அணி பவர் அனைவர்க்கும், இன்பம் அளிக்கும் பண்பில் இணையற்றது. தூய்மை, ஒளி யுடைமை, வெண்மை, தண்மை, இன்ப மளிக்கும் தகைமை என்பவற்றால், திரு நீறும் நிலவும் பெரிதும் ஒப்புமையுடையன, எனச் சேக்கிழார் விளக்கியருள்கின்றார். இத்தகைய தெய்வநலச் செய்யுட்டிறனைப் பிற கவிஞர்கள்பால் நாம் காண்டல் பெரி தும் அரிதாகும்.

“ தோற்றும் மன்னுயிர் கட்கெலாம் தூய்மையே
சாற்றும்இன்பமும் தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டம் எலாம்பரந்து, அண்ணல் வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா ”

முடிவுரை :

தமிழகம் தெய்வ நலச் சிறப்பிலும், பக்தி யுணர்வொழுக்கப் பண்பாட்டிலும், உலக நாடுகள் பலவற்றுள்ளும் ஒப்புயர்வற்றுத் தலைசிறந்து விளங்குவது. பக்தி இயக்கம், நமது தென்னகத்திலேயே முதன்முதலில் தோன்றி, பின்னர் இந்திய நாடெங்கணும் பரவித் தழைத்து வளர்வதாயிற்று. ஞானம் வைராக்கியம் என்னும் இரு பண்புகளும், அவற்றுக்குத் தாய்போன்ற பக்தியுணர் வும், தமிழகத்திலேயே ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும், தோன்றிப் பரவி வள ரத் தலைப்பட்டது. தமிழகத்திலிருந்தே பக்தி இயக்கம், கருநாடகம் மகாராட்டிரம் கூர்ச் சரம் முதலிய நாடுகளிலும் பரவி வளர்ந் தது என, ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.(*)

தமிழகமே பக்தியியக்கத்தின் தாயகம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் நாடெங் கும் பக்தியுணர்வைநலமுறப் பரப்பி யருளி னர். அவர்களின் வழிநின்று தெய்வநலத் தினையும், பக்தியுணர்வொழுக்கப் பண்பாடு களையும்பெரிதும்வளர்த்துப்போற்றியபெரு மைக்குரியவர் சேக்கிழார் பெருமான்! தமிழ்நலம் போற்றும் சிறந்த தகவுடைய அன்பர்கள் அனைவரும் சேக்கிழாரின் சிறப் பறிந்து போற்றக் கடமைப்பட்டுள்ளனர்! ஆதலின், நம்மனோர் அனைவரும் சேக்கிழா ரின் சிறப்புக்களை யுணர்ந்து, அவர் அரு ளிச் செய்த திருத்தொண்டர் புராணத் தினை அன்புடன் ஓதிப் பயின்று, நல்லற வாழ்வு நடாத்தி, நலம் பலவும் எய்த முயலு வோமாக!

[காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயி லில், பங்குனி யுத்திரப் பெருவிழாவில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவி எழுதியது (4—4—68).

—ஆசிரியர்.]

---

(*) “In the Bhagavata Mahatmiyam, we find a parable in which **Bhakti** is described as a distressed woman who was born in the Dravida country, had attained her womanhood in the Carnatic and Maharashtra, and had travelled in great misery through Guzarat and North India with her two sons **Gnana** and **Vairagya** to Brindaban, and that owing to the hard conditions through which she had to pass her two sons had died.

This shows that atleast according to the traditions of the Bhagavata Purana, Southern India was regarded as a great stronghold of Bhakti Cult”

—*Prof.* **DAS GUPTA,**
*History of Indian Philosophy.*

# வேதாந்த தேசிகர்

மாமலர் மன்னிய மங்கை
மகிழ்ந்துறை மார்பினன்தாள்
தூமலர் சூடிய தொல்லருள்
மாறன் துணையடிக்கீழ்
வாழ்வை யுகக்கும் இராமானுச
முனி வண்மைபோற்றும்
சீர்மையன் எங்கள் தூப்புற்பிள்ளை
பாதம்என் சென்னியதே.

வேதாந்த தேசிகர் என்னும் வைஷ்ணவப் பேராசிரியர், காஞ்சிபுரத்தில் திருத்தண்கா என வழங்கப்பெறும் விளக்கொளிப்பெருமாள் கோயிலின் சூழலில் தோன்றியவராவர்.

அவர் தோன்றியருளிய தலத்தினைத் தூப்புல் என வழங்குவர். தூப்புல் என்பது தூய்மை வாய்ந்த தருப்பைப்புல்லைக் குறிக்கும். வேதநெறி ஒழுகும் வைதிகர்களாகிய அந்தணப் பெருமக்கள், தருப்பைப் புல்லை 'விசுவாமித்திரம்' என வழங்குவது உண்டு. ஆதலின், விசுவாமித்திர முனிவரின் கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணர் குலத்தவர்கள் வாழ்ந்து வந்த இடம், என்னும் காரணம்பற்றி, அத்தலம் தூப்புல் என்னும் பெயர் பெற்றது என்று பெரியோர்கள் கூறுவர். தூய்மை வாய்ந்த இடம் என்னும் பொருளில் 'தூப்பில்' (தூப்பு + இல்) எனப் பெயர் அமைந்தது என்றும் கூறுவர் சிலர்.

வேதாந்த தேசிகரின் தந்தையார் அநந்த சோமயாஜிகள், தாயார் தோதாத்திரியம்மை. ஆசிரியர் தாய்மாமனாகிய இராமானுசப் பிள்ளான் என்னும் கிடாம்பி அப்புள்ளார். திருப்புதல்வர் வரதாசாரியார்.

வேதாந்த தேசிகர் தோன்றியருளிய காலம், சாலிவாகன சகம் 1191 (கி. பி. 1268) என்பர். இவர் திருவேங்கட முடையானுடைய திருமணியின் அவதாரம் என்று பெரியோர்கள் புகழ்ந்து போற்றுவர். திருவேங்கட முடையானுடைய பெருவிழா முடிந்து நீராடும் திருநாள் (அவபிருத தினம்) ஆகிய புரட்டாசித் திருவோணத் திருநாளன்று இவர் திருவவதரித்தார். ஆதலின் இவருக்கு வேங்கடநாத சர்மா என்னும் பெயரிடப் பெற்றது. வேதாந்தாசாரியார் என்னும் திருப்பெயர் இவர்தம் பட்டப் பெயராகும்.

இளமையில் இருபது ஆண்டுக்குள்ளாகவே, இவர் உபய வேதாந்த ரகசியார்த்த சம்ப்ரதாயங்களையெல்லாம் முறையே கற்றுத் துறைபோயினர். வைநதேய மந்திர உபதேசமும் பெற்று நிகரற்ற நிபுணராக விளங்கினர். உரிய காலத்தில் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையை ஏற்றுக் காஞ்சிபுரத்திலேயே சமய நூல் விளக்க விரிவுரைச் சொற்பொழிவுகள் (பிரவசனங்கள்) ஆற்றிவந்தார். இவர் சிலகாலம் தென்திசைத் திருப்பதிகளைத் தரிசித்து மகிழத் திருவுளம் கொண்டு, கருடநதியின் கரையில் உள்ள திருவஹீந்திரபுரம் சென்றார். அங்குள்ள தெய்வநாயகனுடைய சந்நிதியில் சிலகாலம் வசிக்கத் திருவுளம் கொண்டார். அதுபோது தமது மாதுலர் ஆகிய ஆசாரியரின்பால் அருளுபதேசம் பெற்றிருந்த வைநதேய

மந்திரத்தை முறைப்படி அன்புடன் ஓதிக் கணித்துக் கொண்டிருந்தார். அதன் பயனாகக் கருடாழ்வாராகிய பெரிய திருவடியின் தரிசனம் கிடைக்கப் பெற்று, அவரால் ஸ்ரீஅயக்கிரீவ மந்திர உபதேசமும் அடைந்தார். அதனை அங்குள்ள அழகிய சிங்கர் திருமுன்பு, நெடுநாள் பக்தியுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார். அதன் பயனாக, வெள்ளைப் பரிமுகராகிய அயக்ரீவ மூர்த்திகள் அவர்க்குக் காட்சிதந்தருளி, அமுதமயமான வாக்கு வல்லமையை அளித்து மறைந்தருளினர்.

பின்னர், இவர் திருவகீந்திரபுரம் தெய்வ நாயகப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு, திருக்கோவலூர் சென்று, ஆயனாரைத் தொழுதுகொண்டு சில காலம் வாழ்ந்து வந்தார். பின்னர் மீண்டும் காஞ்சிபுரம் எழுந்தருளிப் பெருந்தேவித் தாயாரையும் பேரருளாளனையும் தொழுதுகொண்டு சமய நூல்களும் சொற்பொழிவுகளும் செய்து வாழ்ந்து கொண்டிருந்தார்.

வேதாந்ததேசிகர் அளப்பருங் கல்வியாற்றலும், அரும்பெருங்கவித் திறனும், மெய்யுணர்வும் வாய்க்கப் பெற்றவராயினும், உலகியற் செய்திகளிற் பற்றற்று இருந்தார். ஸ்ரீகூரத்தாழ்வான் போல, உஞ்சவிருத்தி செய்தே, இவர் பெருமாளுக்குத் திருவாராதனம் செய்து வந்தார்.

இவர்தம் சமகாலத்தவராய், விசயநகர மன்னர்களின் அவைக்களத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற்று விளங்கியிருந்த **ஸ்ரீவித்யாரண்ய சுவாமிகள்,** இவரைச் செல்வ வளம் மிக்க பெருவாழ்வில் அமர்த்த வேண்டும் என விரும்பி, இவரை விசயநகரப் பேரரசரிடம் வந்து பரிசில் பெற்றுச் செல்லவேண்டும் என்று, அன்புடன் பல்காற் பலகடிதங்கள் எழுதி வேண்டிக் கொண்டார். ஆயினும், நமது சுவாமிகள் அங்ஙனம் செய்ய விருப்பம் இன்றி, **வைராக்கிய பஞ்சகம்** என்னும் சிறந்த நூலை இயற்றியருளினர்.

ஒரு சமயம் ஸ்ரீ வேதாந்த தேசிகர், வறுமையில் வாடி வருந்திய பிரமசாரி ஒருவனது வறுமையைத் தீர்க்க **ஸ்ரீஸ்துதி** என்னும் நூலை அருளிச் செய்தார். அவ்வளவில் காஞ்சிபுரம் தேவப் பெருமாள் கோயிலில் தாயார் சந்நிதியின் முன்பு பொன்மழை பொழிந்தது. அனைவரும் கண்டு அதிசயித்தனர். அந்தப் பிரமசாரியும் தன் வறுமை தீர்ந்து நலம் பெற்றுச் சென்றுன்

ஸ்ரீ வேதாந்த தேசிகர்க்குப் பற்பல சிறப்புப் பெயர்களும் விருதுகளும் வழங்கும். வேதாந்தாசாரியர், கவிதார்க்கிக கேசரி, சர்வ தந்திர சுவதந்திரர், சமஸ்யா சஹஸ்ரீ என்பன அவைகளுட் சில. இவற்றுள் **'வேதாந்தாசாரியர்'** என்னும் விருது, ஸ்ரீரங்கநாதனுல் அளிக்கப்பட்டது. **'சர்வதந்த்ர ஸ்வதந்திரர்'** என்கிற விருது, ஸ்ரீரங்க நாச்சியாரால் அளிக்கப்பெற்றது. ஏனைய சிறப்பியற் பெயர்கள், அவ்வப்போது அக்காலத்தில் விளங்கிய அறிஞர் பெருமக்களால், பெரிதும் அன்புடன் வணங்கி வழங்கப் பெற்றனவாகும்.

கவிஞர்கள் கவிதை இயற்றித் தம் திறமையைக் காட்டுதற் பொருட்டுக் கொடுக்கப்பெறும் 'சமஸ்யை' என்னும் கவிதைக் குறிப்புகள் கொடுப்பதிலும், பிறர் கொடுக்கும் சமஸ்யைகளை அமைத்துக் கவிதைகள் இயற்றி நிறைவு செய்வதிலும், வேதாந்த தேசிகர் மிகவும் வல்லமை பெற்று விளங்கியிருந்தார். அதுபற்றியே **'சமஸ்யா ஸஹஸ்ரீ'** என்னும் சிறப்புப் பெயர் இவருக்கு அமைந்தது.

எல்லாக் கலைகளிலும் வல்லவர் என்னும் பொருளுடைய 'சர்வதந்திர சுதந்திரர்' என்னும் இவர்தம் சிறப்பியற் பெயரைக் குறித்துப், பொருமைகொண்ட கொத்தன் ஒருவன் இவர்பால் வந்து, 'உமக்குக் கிணறு வெட்டத் தெரியுமோ?' என வினவினன். அது கேட்டுப் புன்முறுவல் பூத்து, அவன் முன்னிலையிலேயே ஸ்ரீ தேசிகர் ஒரு கிணற்றை வெட்டி அமைத்து, அவனது செருக்கை அடக்கினர். இந்தக் கிணறு திருவகீந்திர புரத்தில், இன்றும் நாம் கண்டு மகிழ்ந்து வியக்கும் நிலையில் விளங்கி வருகின்றது. இங்ஙனமே சிற்பி ஒருவனின் செருக்கை அடக்குதற்காகத் தேசிகர் தம்முடைய திருவுருவத்தை ஒரு

விக்கிரகமாகச் செய்தார். தேசிகரால் செய்யப்பெற்ற இவ்விக்கிரகமும், திருவகீந்திர புரத்தில் தேவநாதப் பெருமாள் நியமனத்தின்படி, அக்காலத்திலேயே பிரதிட்டை செய்து நிறுவப்பெற்று, இன்றும் சந்நிதியில் பக்தர்களால் தரிசனம் செய்யப் பெற்று வருகிறது.

இங்ஙனமே மற்ருெருகால் ஒரு பாம்பாட்டி, சில பாம்புகளைக் கொணர்ந்து செருக்குடன் திறந்து விட்டபோது கருட மந்திர ஜெபம் செய்து, அவனது பாம்புகளைக் கருடன் கவ்விப் பற்றிக்கொண்டு செல்லுமாறு செய்து, அவனது செருக்கை அடக்கினர்.

இங்ஙனம் பல அரும்பெரும் அற்புத அருட்செயல்களைச் செய்தருளிய தேசிகர், திருவரங்கத்திலும் பலகாலம் வாழ்ந்திருந்தார். இவர் இராமானுசர் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யத்தை முப்பது முறை பிரவசனம் செய்து முடித்து மகிழ்ச்சியுற்ருர் என்பர்.

ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நான்கு வகைக் கவிதைகளிலும், ஒப்பற்ற தேர்ச்சிமிக்குக் '**கவிதார்க்கிக கேசரி**' என்னும் புகழ் பெற்று விளங்கிய தேசிகர் அவர்கள், தென்சொற்கடல்கடந்து வடசொற்கு எல்லை தேர்ந்து, அருளிச் செய்த நூல்கள் மிகப்பல.

1. அயக்கிரீவ ஸ்தோத்திரம்
2. கருட பஞ்சாசத்
3. தேவநாயக பஞ்சாசத்
4. அச்சுத சதகம்
5. கோபால விம்சதி
6. ரகுவீர கத்யம்
7. தேகளீசஸ்துதி
8. வரதராஜ பஞ்சாசத்
9. அர்த்த பஞ்சகம்
10. ஸ்ரீவைஷ்ணவ தினசரி
11. அத்திகிரி மகாத்மியம்
12. வேகாசேது ஸ்தோத்திரம்
13. அஷ்டபுஜாஷ்டகம்
14. சரணுகதி தீபிகை
15. காமாஸிகாஷ்டகம்
16. பரமார்த்த ஸ்துதி
17. அபீதிஸ்தவம்
18. சங்கல்ப சூரியோதயம்
19. மும்மணிக்கோவை
20. நவரத்தினமாலை
21. பந்துப்பா
22. சுழற்பா
23. ஊசற்பா
24. ஏசற்பா
25. அம்மானைப்பா
26. திருச்சின்னமாலை
27. பாதுகாசகஸ்ரம் (முதலியன.)

இவற்றுள் **அபீதிஸ்தவம்** என்பது ஒரு சமயம் வேற்றுச் சமயத்தாரின்படையெடுப்பால், திருவரங்கம் கோயிலிலிருந்து ஸ்ரீவைஷ்ணவர்கள் பலரும், பெருமாளுக்குச் சேமக்காப்புச் செய்து விட்டுப், பல திசைகளிலும் சிதறி ஓட நேர்ந்தபொழுது, சத்தியமங்கலம் முதலான இடங்களில் தங்கித் திருநாராயணபுரம் சென்று சேர்ந்து, திருவரங்கம் பெரிய கோயில் இடர்ப்பாடின்றி எப்போதும்போலச் சிறந்து விளங்க வேண்டும் என்று வேண்டித் துதித்து, ஸ்ரீதேசிகரால் இயற்றப் பெற்றதாகும்.

இங்ஙனமே **கிருஷ்ணமிஸ்ரர்** என்னும் அத்வைதப் புலவர் ஒருவர், இயற்றியிருந்த '**பிரபோத சந்திரோதயம்**' என்னும் நாடக நூலை, அப்புலவரின் கொள்கையை உடையார் சிலர் திருவரங்கத்திற் கொணர்ந்து பிரசாரம் செய்து, கலாம் பல விளைத்தபோது 'இந்நூலுக்கு எதிராக ஓர் நூலுளதே! அதனைக் காணலாகாதோ?' எனப் புன்முறுவலோடு பணித்து, 'அங்ஙனம் இந்நூலுக்கு எதிராக ஒரு நாடக நூலும் உண்டோ' என வினவினேர் வியப்படையுமபடி, அற்றை மறுநாட்காலைக்குள் தேசிகர் இயற்றிக் காட்டிய சிறந்த நூலே '**ஸங்கல்ப சூர்யோதயம்**' என்னும் நாடகம் ஆகும்.

இவ்வாறே திருவரங்கம் அழகிய மணவாளப் பெருமாளுடைய திருவடி நிலையை, ஆயிரம் சுலோகங்களால் மிகவும் அழ

குறப் புனைந்து பாடித் துதிக்கும் நூலே 'பாதுகா ஸஹஸ்ரம்' என்பதாகும்.

வேதாந்ததேசிகர்வடமொழிப் பாற்கடலைத் தம்மதியெனும் கோல்கொண்டு திறம்படக் கடைந்தவர். வடமொழிப் பெருங்கடலின் நிலைகண்டு அளந்துணர்ந்து தேர்ந்தவர். எனினும், வடமொழி வேதங்களை எவ்வளவு தான் ஆழ்ந்து நுணுகிக் கற்றாலும் கலங்கிய ஞானமே உண்டாகும் என்றும், வேதங்களிற் புலப்படாத பொருள்நலங்களைத் தெளிவு படுத்தி உணர்ந்துகொள்ளச் செந்தமிழிலுள்ள ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தங்களே இன்றியமையாத பெருந்துணையாகும் என்றும், கருதும் கொள்கையுடையவராகத் தேசிகர் விளங்கினார்.

"பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார், தண்
பொருநல் வருங் குருகேசன் விட்டு சித்தன்
துய்ய குலசேகரன் நம் பாணநாதன்
தொண்டரடிப்பொடி மழிசை வந்தசோதி
வையமெல்லாம் மறைவிளங்க வாள்
வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து
பாடும்
செய்யதமிழ் மாலைகள் நாம்தெளிய வோதித்
தெளியாத மறை நிலங்கள்
தெளிகின் றோமே.

வேதாந்த தேசிகர்க்கு ஸ்ரீநம்மாழ்வார் பக்கலில் இருந்த அன்பும் மதிப்பும் அளவற்றனவாகும்.

"அந்தமிலாப் பேரின்பம் அருந்த வேட்கும்
அடியோமை அறிவுடனே என்றுங் காத்து
முந்தைவினை நிரைவழியிலொழுகா தெம்மை
முன்னிலையாம் தேசிகர்தம் முன்னே சேர்த்து,
மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி
வழிப்படுத்தி வானேற்றி யடிமைகொள்ளத்
தந்தையென நின்ற தனித்திருமால் தாளில்
தலைவைத்தோம் சடகோபன் அருளினாலே"

எனத் தேசிகர், நம்மாழ்வாரின் சிறப்பைத் தமது பாடல் ஒன்றில் புலப்படுத்தியிருத்தல் காணலாம். இவர்க்கு இராமானுசர் பக்கல் இருந்த அன்பும் பக்தியும் நம்மனோர் அளவிட முடியாதனவாகும். இவர் இராமானுசரைப் பல சுலோகங்களாலும் பாடல்களாலும் துதித்துப் புகழ்ந்துள்ளார். இராமானுசர் இயற்றியுள்ள ஸ்ரீபாஷ்யத்திற்குக் காப்பாகப் பல சிறந்த விளக்க நூல்களை அருளிச் செய்துள்ளார். விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நிலைநாட்டி வலுப்படுத்துதற்காகப், பலதுறைகளில் வடமொழியிலும் தென்மொழியிலும், பற்பல தோத்திர நூல்களும் சாத்திர நூல்களும் செய்தருளினார். ஸ்ரீதேசிகப்பிரபந்தம் என்று போற்றப் பெறும் தமிழ் நூல், மிகவும் சிறந்த அருட்கலைக் கருவூலமாக விளங்கி, நம்மனோரை வாழ்வித்து வருகின்றது.

இராமனுச தரிசனம் என்னும் வைஷ்ணவ சமயத்தையும், அதன் தத்துவக் கொள்கை நலங்களையும் நூல்களையும் வளர்த்துப் பரப்பியருளிய ஆசாரியர்களில், ஸ்ரீமந்நிகமாந்த மகா தேசிகர் என்னும் இப்பெருஞ் சான்றோர், மிகவும் உயர்ந்த சிறப்பிடம் பெறுபவர். இவர் கி. பி. 1369 சௌமிய ஆண்டு கார்த்திகைப் பௌர்ணமி நன்னாளில், இவ் இருள்தரு மாஞாலத்தை விட்டகன்று, தெளிவிசும்பு திருநாடேற எழுந்தருளினார்.

இவ்வாண்டில் (1968), இவர்க்கு நாடெங்கணும், எழுநூறாம் ஆண்டு நிறைவு விழா (1268-1968) மிகவும் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

—ஆசிரியர்.

# திருநாவுக்கரசர் மாட்சி

முன்னுரை :

சைவ சமய ஆசிரியர்கள் ஆகிய நால்வர் பெருமக்களுள், திருநாவுக்கரசர் ஒருவர்! அலகில் கலைத்துறை தழைப்பவும், அருந் தவத்தோர் நெறிவாழவும், உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல வந்து, திருவவதாரம் செய்தவர் திருநாவுக் கரசர்! அவர் திருவவதரித்த தலம் திரு வாமூர். இதனைச் ''சிவம் பெருக்கும் திரு ஆமூர் திருவாமூர்'' எனப் புகழ்ந்து போற்றுகின்றார் சேக்கிழார்.

திருநாவுக்கரசர் வேளாளர் குலத்தவர்; குறுக்கையர் குடியைச் சேர்ந்தவர். அவர் தம் தந்தையார் புகழனார்; தாயார் மாதினி யார்; தமக்கையார் திலகவதியார். இவ ருடைய இயற்பெயர் மருள் நீக்கியார். இவருக்குச் சிவபெருமானால் திருநாவுக் கரசர் என்னும் சிறப்புப் பெயர் அளிக்கப் பெற்றது. அப்பர் என்னும் பெயரை இவருக்கு வழங்கியருளியவர் திருஞான சம்பந்தர்.

வரலாற்றுப் பெருந்தலைவர் :

திருநாவுக்கரசர், ஒரு சிறந்த சமயா சிரியர் மட்டும் அல்லர்; தமிழகத்தின் மிகவும் புகழ் பெற்ற ஒரு பெரும் வர லாற்றுத் தலைவரும், அருள் நெறிச் சான் றோரும் ஆவர்.

—

அப் பெருந்தகையார், பல்லவர் குலப் பேரரசன் ஆகிய முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600—638) காலத்தில் வாழ்ந்தவர். மகேந்திரவர்மன் வடமொழியிற் சிறந்த புலமையுடையவன். ''மத்த விலாசப் பிரக சனம்'' என்னும் வடமொழி நாடக நூலை இயற்றியவன். இசைக் கலையில் வல்லவன். சிற்பம், ஓவியம், நடனம் முதலிய கலை களிற் பெரிதும் பயிற்சியும், ஈடுபாடும் மிக்கவன். போர்த்திறனிற் சிறந்தவன். பகாப்பிடுகு, லளிதாங்குரன், சத்ருமல்லன், சேத்தகாரி, அவனிபாஜனன், குணபரன் முதலிய சிறப்புப் பெயர்கள் பெற்றவன். வட இந்தியப் பெருவேந்தன் ஆகிய ஹர்ஷவர்த்தனன் (606—647) என்பவனைப் போரில் வெற்றிகொண்ட இரண்டாம் புலிகேசி (கி. பி. 608—642) என்னும் சாளுக்கிய மன்னனைத் தோற்கடித்த பெரு வீரன்.

மகேந்திரவர்மன் :

இத்தகைய புகழோங்கிய பேரரசனின் அவையிலேயே, தருமசேனர் என்னும் சிறப்புப் பட்டம் பெற்றுச் சமண சமயத் தலைவராக விளங்கி யிருந்தார் திருநாவுக் கரசர்! பின்னர் அவர் இறையருளாற் சமண சமயத்தினின்று நீங்கிச் சைவ சமயம் சார்ந்தார். அதன் விளைவாக மகேந்திரவர்மன், தானும் சமண சமயம் விடுத்துச் சைவனாக மாறினான்.

''இலிங்கத்தை வழிபடும் குணபரன் என் னும் மன்னனாகிய யான், புறச் சமயத்தில் (விபட்ச விருத்தியில்) இருந்து, திரும்பிய தனால் பெற்ற ஞானப் பேரொளியானது, இந்த இலிங்கத்தின் வாயிலாக, நெடுங் காலம் இவ்வுலகில் நின்று நிலவுவதாக'' என்று மகேந்திரவர்மனுடைய திருச்சிராப் பள்ளிக் கல்வெட்டு, இது பற்றிக் குறிப் பிட்டிருத்தல் காணலாம்.

மகேந்திரவர்மன் என்னும் பல்லவ மன்னன், திருநாவுக்கரசர் பெருமானால் சிவநெறியாளனாக மாறிய மாபெருஞ் சிறப்பு நிகழ்ச்சி, தமிழக வரலாற்றிலும்,

சைவ சமய வரலாற்றிலும், ஒப்புயர்வற்ற புகழ்மிக்க தனிப்பெரு முதன்மை வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

திருநாவுக்கரசரால் மனமாற்றம் பெற்றுச், சிவ நெறியாளனாக மாறிய மகேந்திர வர்ம பல்லவன், சீயமங்கலம் பல்லாவரம் வல்லம் தளவானூர் திருக்கழுக்குன்றம் திருச்சிராப்பள்ளி திருமயம் என்னும் இடங்களில் மலைகளை வெட்டிக் குடைந்து, சிவபிரானுக்குக் கோயில்கள் எடுப்பித்தான்.

பழங்காலத்தில் மண் மரம் செங்கல் சுண்ணாம்பு முதலியவற்றினால்தான், தமிழ்நாட்டுக் கோயில்கள் கட்டப் பெற்று வந்தன. முதன் முதலிற் கருங்கற்களினாற் கோயில்கள் கட்டத் தொடங்கிய பெருமை, மகேந்திரவர்ம பல்லவனையே சாரும்.

''செங்கல் சுண்ணாம்பு மரம் உலோகம் என்பன இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திர சித்தன் அமைத்த கருங்கற் கோயில் இது''

எனவரும் மண்டகப்பட்டுக் கல்வெட்டினால், இவ்வுண்மை இனிது புலப்படும். இங்ஙனம் மகேந்திரவர்மனை மனமாற்றம் அடையும்படி செய்து, அவனைச் சிவநெறியாளனாக ஆக்கி ஆட்கொண்டு, அவன் பற்பல கருங்கற் கோயில்களை எடுப்பிப்பதற்குக் காரணராக விளங்கிய பெருமை, திருநாவுக்கரசர்க்கே உரியதாகும்,

நரசிம்மவர்மன் :

திருநாவுக்கரசர் எண்பத்தோராண்டுகள் இந்நிலவுலகத்தில் வாழ்ந்திருந்தாராதலின், அவர் மகேந்திரவர்ம பல்லவ மன்னனின் மகனாகிய, முதலாம் நரசிம்ம வர்ம பல்லவன் (கி. பி. 630—668) காலத்திலும், வாழ்ந்திருந்த மாட்சிமையுடையவர் என்பதும், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற்கு உரியது.

இன்று சிற்பக் கலைத்திறனுக்கு உலகப் புகழ் பெற்ற மாமல்லபுரம் (மகாபலிபுரம்), 'மாமல்லன்' என்னும் சிறப்புப் பெயர் கொண்டிருந்த நரசிம்மவர்ம பல்லவ மன்னனால் அமைக்கப்பெற்றதே ஆகும்.

அருள்நெறிச் சான்றோர் :

அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவரான பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்டநாயனார், இம்முதலாம் நரசிம்ம வர்ம பல்லவனின் படைத்தலைவராக விளங்கி யிருந்தவர். இச்சிறுத்தொண்ட நாயனார்தாம், இரண்டாம் புலிகேசி என்னும் மேலைச் சாளுக்கிய மன்னனைப் பம்பாய் மாகாணத்தில் உள்ள, 'பாதாமி' என வழங்கும் வாதாபி என்னும் இடத்தில் நிகழ்ந்த கடும்போரில் (கி.பி. 642) வெற்றி பெற்ற பெருவீரர் ஆவார்.

''மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார்''

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் சிறுத்தொண்டர் திருநீலநக்கர் ஆகியவர்கள் திருப்புகலூரில் முருகநாயனாரோடு, அவர்தம் திருமடத்தில் அடியார்கள் பலருடன் ஒன்று சேர்ந்து சிலகாலம் தங்கியிருந்து ''உடனுறைவின் பயன்பெற்றார்'' எனப் பெரிய புராணம் கூறுகின்றது. இவற்றாலெல்லாம் இவர்கள் அனைவரும் சமகாலத்தவர்கள் என்னும் உண்மை தெரிவதுடன், திருநாவுக்கரசர் ஒரு சிறந்த புகழமைந்த வரலாற்றுப் பெருந்தலைவர் (Historical Personage), அருள்நெறிச் சான்றோர் என்னும் செய்தியும் தெளியப்படுகின்றது.

'தேசம் உய்ய வந்தவர்' :

திருநாவுக்கரசர் சைவ சமய ஆசிரியர் மட்டுமே யன்றித் தமிழ்நாட்டின் மிகச் சிறந்த பெருந்தலைவர் (National Leader) எனவும் விளங்கியிருந்தார். சேக்கிழார் சுவாமிகள்,

''தேசம் உய்ய வந்தவர்''
''தமிழ் மொழித் தலைவர்''
''தமிழ் வேந்தர்''
''இன்றமிழ் ஈசர்''
''இன்றமிழ்க்கு மன்''
''தலைநின்று உயர் தமிழிறையோர்''

என்றெல்லாம், திருநாவுக்கரசரைச் சிறப்பித்துக் கூறியிருத்தல், இவ்வுண்மையினைச் செவ்விதின் விளக்கும்.

ஞானத் தவமுனிவர் :

செந்தமிழ் மொழிக்கும் சிவநெறிக்கும் பல்லாற்றானும் மாறுபட்டு நின்ற பல்லவ மன்னர்களைத் தமிழ் மொழியிலும் சிவ நெறியிலும் மிகவும் ஈடுபாடு கொண்டு இன்புறுமாறு "செயல் நன்றாகத் திருத்திப் பணிகொண்டு" அருளிய பெருஞ் சிறப்புக்கு உரியவர், திருநாவுக்கரசரே யாவர் எனின், அவர்தம் அருமை பெருமைகளை நம்மனோர் அனைவரும் கருதியுணரலாம்.

"நாமார்க்கும் குடியல்லோம்!
நமனை அஞ்சோம்!"

என ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னரே, வீர முழக்கம் செய்தருளிய சிறப்புக்கு உரியவர் திருநாவுக்கரசர் அல்லரோ?

"தொண்டலால் துணையும் இல்லை"
"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்னும் உயர்வற உயர்ந்த உறுதி மொழிகளை, முதன் முதலாக மொழிந்தருளியவர் திருநாவுக்கரசரே அன்றோ?

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும்கொண்டு என் செய்வீர்"
"அங்கம் எலாம் குறைந்து
அழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு
அன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும்
கடவுளாரே"

என்பனபோன்று, பொருள் பொதிந்த பல அருளுபதேசங்களை எத்துணையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, நம்மனோர்க்கு நன்கினிது அறிவுறுத்தியருளிய திருநாவுக்கரசரின் சிறப்பு, நம் ஒரு நாவாற் கூறல் ஒண்ணுமோ?

முடிவுரை :

எல்லாம் வல்ல இறைவனையே "தமிழன் கண்டாய்" எனத் தமிழ் வடிவினனாகவும்-தமிழனாகவும் கண்டு, வழிபட்டுத் தமிழ்நலம் பரப்பியருளிய 'ஞானத் தவமுனிவர்' ஆகிய திருநாவுக்கரசரின் மாட்சிமையினை, தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் தகவுறப் போற்றித் துதித்து, நலம்பலவும் அடைய முற்படுவோமாக! —ஆசிரியர்.

"சூலைநோய் தலைக்கீ டாகத்
தொல்சிவ நெறிக்கு மீண்டு
மூலையும் முடுக்கர் தோறும்
முத்தமிழ் முழங்கும வண்ணம்
சாலநற் புரட்சி செய்த
தமிழ்நாட்டுத் தந்தை யாகும்
சீலமார் அப்பர் பெம்மான்
சிறப்பெலாம் போற்றி உய்வாம்!"

இந்நாளில் நாம்காண இனியநல்ல
காந்தியண்ணல் உலகம் எல்லாம்
என்னேமற் றிவர்பெருமை எனவியப்ப
வாழ்ந்திருந்தார்! இனிதி வர்போல்
அந்நாளில் ஆயிரத்து முந்நூறும்
ஆண்டுகளின்முன் அப்பர் என்னும்
நம்நாவுக் கரசர்பிரான் நனிவாழ்ந்தார்!
இவர்களைநாம் நயந்து வாழ்வோம்!

—ஆசிரியர்

## செய்திச் சுருக்கம்

### சதசண்டி யக்ஞம்

தருமையாதீனத்தில் ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவனதுர்க்காதேவிக்கு 29-3-68 முதல் 9-4-68 வரை வசந்த நவராத்திரி சதசண்டியக்ஞம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், மிகவும் சிறப்புற நடைபெற்றது. நாள்தோறும் மாலையில் அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

—ஆசிரியர்.

# திருப்பாவைச் செழும்பொருள்

(முற்றொடர்ச்சி)

அங்கண்மா ஞாலத்(து)
அரசர் அபிமான
பங்கமாய் வந்துநின்
பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல்
வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணி வாய்ச்செய்த
தாமரைப் பூப்போலச்
செங்கண் சிறுச்சிறிதே
எம்மேல் விழியாவோ ?
திங்களும் ஆதித்
தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டுங்கொண்(டு)
எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம்
இழிந்(து) ஏலோ ரெம்பாவாய் !

**அங்கண் :** அழகிய இடம். பிரம்மாவுக்கும் தன் போக உபகரணங்களோடு அனுபவிக்கலாய் இருக்கை; பிபீலிகை (எறும்பு)க்கும் தன்போக உபகரணங்களோடு அனுபவிக்கலாய் இருக்கை.

**மாஞாலத்து அரசர் :** பெரிய உலகத்தில் உள்ள அரசர்கள்; இப்பரப்பெல்லாம் என்னது என்று எண்ணியிருக்கும் பேரரசர்கள். "யாவையும் யாவரும் தானும் அமைவுடை நாரணன்" என்கின்றதை பௌண்ட்ரக வாசுதேவனைப் போலே அனுகரிக்கிற படி.

**அபிமான பங்கமாய் வந்து :** நமக்கு மேற்பட்டார் இல்லை என்கிற அபிமானம் பங்கப்பட்டு வந்து; தத்தம் நாடுகளையும் அரசாட்சியையும் இழந்து எளிவரவுபட்டு வந்து.

**நின்பள்ளிக்கட்டிற் கீழே :** அந்த நாடும் அரசாட்சியும் கொடுத்துப் போய்வாருங்கள் என்றாலும்பழையஎளிவரவைநினைத்து அவை வேண்டா என்று உன் சிம்மாசனத்தின் கீழே.

**சங்கம் இருப்பார் போல் :** திரள இருந்து அணுக்க ஓலக்கமாகி இருக்குமவர்களைப் போலே. அவர்கள் போக்கற்றுப் புகுந்தார்கள்; இவர்கள் கைங்கர்யம் செய்யப் புகுந்தார்கள். இளையபெருமாளைப் போலே இவர்களையும் கிருஷ்ண குணம் தோற்பித்து அடிமையிலே மூட்டிற்று.

**வந்து தலைப்பெய்தோம் :** அந்த அரசர்கள் தங்கள் தங்கள் அபிமானங்களைவிட்டு நாடும் அரசும் இழந்து அம்புக்குத் தோற்று உன் கட்டிற் காலிலே படுகாடு கிடக்குமா போலே, நாங்களும் எங்களுடைய பெண்மை அபிமானத்தை விட்டு, வேறுண்டான போகங்களையும் விட்டு, உன்னுடைய குணங்களுக்குத் தோற்று வந்தோம். அந்த அரசர்களைப் போலே நாங்களும் அநாதிகாலம் பண்ணிப்போந்த தேகாத்ம அபிமானத்தைவிட்டு, தேகாத் பரனான ஆத்மாவின் பக்கல், சுவாதந்த்ரியத்தையும் விட்டு, அநந்யப்பிரயோஜனராய் வந்தோம்.

**கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே :** ஆதித்தியனைக் கண்டால் அலரக்கடவ தாமரைப் பூப்போலே, அலருமவையிறே அவை; அன்பர்களைக் கண்டால் அலருமவையிறே இந்தத் தாமரைப் பூக்கள்.

**செங்கண் :** வாத்சல்யத்தாலே சிவந்து இருக்கும் கண்கள். உபமானம் நேர் நில்லாமையாலே உபமேயம் தன்னையே சொல்லுகிறதாகவுமாம்.

**சிறுச்சிறிதே :** ஒரு நீர்ச்சாவியிலே வெள்ளம் ஆகாமை; சாத்மிக்க சாத்மிக்க (பொறுக்க பொறுக்க) என்கை. தொடக்கமே தொட்டு அலரும் பொழுதைய அளவுகளெல்லாம் காணத் தாம் ஆசைப்படுகிறார்கள்.

**எம்மேல் விழியாவோ :** கோடை ஓடிய பயிரிலே ஒரு பாட்டம் மழை பொழியாதோ என்னுமா போலே, எங்கள் மேல் தங்கள் கண் பார்வை படாதோ என்கிறார்கள். சாதகங்கள் (வானம்பாடிப் பறவைகள்), மழைத்துளிகளை எதிர்நோக்கிக் காத்திருக்குமாறு போலே, நின் கண்ணின் கடைப் பார்வையே தாரகமாகக் கொண்டு, எதிர் நோக்கிக் காத்துக்கிடக்கும் எங்கள்மேல், அவை படலாகாதோ என்கிறார்கள்.

**திங்களும் ஆதித்தியனும் போல் :** அன்பர்களுக்குத் தண்ணளிமிக்கும், அன்பிலாதார்க்கு அணுகவொண்ணாமலும் இருத்தலினால், சந்திரனையும்சூரியனையும் போன்று இரணியன் பக்கல் சீற்றம் பொங்கி நிற்க, பிரகலாதன் பக்கல் தண்ணளி பொழிந்த கண்கள் அன்றோ? "சிம்மம் ஆனையோடே பொருநின்றாலும் குட்டிக்கு முலைகொடுக்குமாறுபோலே'' என்பர் பட்டர். விரகதாபம் போக்குகையும், கிடைக்காமற் போகுமோ என்னும் அச்சத்தால் வந்த அறியாமை இருள் போக்குகையும், குறித்துக் கண்களுக்குச் சந்திரனையும் சூரியனையும் உபமானம் கூறினார்கள்.

**அங்கண் :** திருக்கண்களுக்குச் சந்திர சூரியர்கள் உபமானமாக மாட்டாராய் இருந்தபடி. சந்திர சூரியர்கள் தட்பவெப்பம் உடையராதல் இவனுடைய தொடர்பினாலே யன்றோ?

**இரண்டும் கொண்டு :** முழு நோக்குப் பொறுக்கும் அளவானவாறே 'இரண்டும்' என்று சொல்லுகின்றார்கள்.

**எங்கள்மேல் நோக்குதியேல் :** உன்னுடைய கடைக்கண் நோக்கம், பெருமையாலே வருந்திய எங்கள் மீது நின் திருப் பார்வையைச் செலுத்துவாய் ஆயின்.

'விழியாவோ' என்றது தங்கள் மனோரதம்; இங்கு 'நோக்குதியேல்' என்ற இடம் முன்னிலை.

**எங்கள்மேல் சாபம் இழிந்து:** பிறருடைய சாபம் உன்னுடைய அருளாலே தீரும். எங்களுடைய சாபம் நீ போக்குதல், அல்லது யாங்கள் அனுபவித்து விடுதல் செய்யும் அத்தனை.

இங்குச் 'சாபம்' என்றது விச்லேஷ விசனத்தை (பிரிவாற்றாமைக் கவலையை). அநுபவித்தே தீர்க்க வேண்டியிருத்தலின், பிரிவுத்துன்பத்தினைச் 'சாபம்' என்றார்கள்.

பிரம்ம சாபம் மார்பில் வேர்ப்பாலே போக்கலாம்; துர்வாச முனிவரின் சாபம் மார்பில் இருப்பவளின் அருளாற் போக்கலாம்; கௌதம சாபம் காலிற் பொடியாலே போக்கலாம்; தட்ச சாபம் ஒரு தடாகத்தில் முழுக்கிட்டுப் போக்கலாம். எங்கள் சாபம் போக்குகைக்காக இத்தனையும் வேணும்.

விஷம் தீர்க்க வல்ல மந்திரக்காரனின் பார்வையாலே விஷம் தீருமாபோலே, கண்ணபிரானின் நோக்காலே ஸம்ஸாரம் ஆகிய உலகியல் வாழ்வின் மயக்கம் தீரும். ஆதலால் "அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல் எங்கள்மேல் சாபம் இழியும்'' என்கிறார்கள். (22)

மாரி மலைமுழைஞ்சில்
மன்னிக் கிடந்(து) உறங்கும்
சீரிய சிங்கம்
அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க
எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து
முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ
பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின்(று) இங்ஙனே
போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா
சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்(து)
அருள்ஏலோ ரெம்பாவாய்!

மாரி : பிரிந்தோர் கூடும் காலம், கூடி ஞர் இன்பச்சுவை அநுபவிக்குங் காலம், கூடினுர் கைநெகிழில் உடம்பு வெளுத்து அணையுங் காலம்; பெண்களோடு மேகம் அறைகூவல் இடும் காலம், பிரிந்தார் கொடுமை குழறும் காலம், கலந்தார் வரவு எதிர் கொள்ளும் காலம், பெண்ணீர்மை ஈடழிக்குங்காலம்.

மலைமுழைஞ்சில் : மழைக் காலத்தில் அரசர்கள் படைவீடு விட்டுப் புறப்படாமை போல, சிங்கமும் மழைக்காலத்தில் மலைக் குகைகளை விட்டுப் புறப்படாது.

மன்னிக் கிடந்து : மிடுக்காலே ஒருவர்க் கும் அஞ்ச வேண்டாமையாலே மலைக்குவடு போலே பொருந்தி வீசுவில்லிட்டு எழுப்பி ஞலும், எழும்பாமல் ஒட்டிக்கொண்டு கிடக்கை.

உறங்கும் சீரிய சிங்கம் : உறங்கா நிற் கச் செய்யவும் ஏனைய மிருகங்கள் கிட்ட மாட்டாமல், கண்ட காட்சியிலேயே மண் ணுண்ணும்படி வீரத்திருவை உடைய சிங்கம்.

சீரிய சிங்கம் : 'மிருகேந்திரன்' என்றும் 'மிருகராஜன்' என்றும் ஒருத்தர் முடிசூட்ட வேண்டாதே, பிறப்பே நிரங்குசமான வைபவமுண்டாகை. நரசிம்ஹம் போலே கலந்து கட்டியாய்ச் சீர்மை கெட்டிராதே சிற்றுயர் சிங்கத்துக்கு.

அறிவுற்று : பூ அலர்ந்தாற்போலே காலம் உணர்த்த உணருகை. சம்சாரிகள் காலம் உணர்த்த உணர்வார்கள். இவன் ஆச்ரிதர் ஆர்த்தி உணர உணரும்.

தீவிழித்து : நம் எல்லைக்குள் புகுந்தார் யார் என்னுமா போலே, பார்க்கும் பார்வை யிலுள்ள வெம்மை; சர்வ காலமும் அணை யும் பேடைக்கும் குட்டிகளுக்கும் கூட அணைய ஒண்ணுமல் இருக்கை.

வேரிமயிர் பொங்க : பரிமளத்தை உடைய பிடரிமயிர்கள் சிலும்ப.

எப்பாடும் பேர்ந்துதறி : ஒரு காரியப் பாடு இல்லாமையாலே நாலு பக்கங்களி லும் உலாவி, அவயவங்களைத் தனித் தனியே உதறித் திமிர்ப்பைப் போக்கி.

மூரி நிமிர்ந்து : உலாவுகைக்குச் சரீரம் விதேயம் ஆகைக்காகக் அவயவியான உடலை ஒன்றுக நிமிர்த்து.

முழங்கி : ஏனைய கொடிய விலங்குகள் கிடந்த இடத்திலே முழுக்காயாக அவிந்து கிடக்கும்படி கர்ச்சித்து.

புறப்பட்டுப் போதருமாபோலே : மலைக் குகையை விட்டு வெளியே கிளம்பி வரு மாறு போலே.

பூவைப் பூவண்ணு நீ : வடிவழகையும் நிறத்தையும் உன்னைப்போலே பண்ணப் போமோ ! பூவைப் பூவின் நிறம் உனக்கு ஒப்பாகுமோ ? எதிரிகளான **சிசுபாலன்** ஆதியோரின் முன்னே நிற்கிலும் இவ்வழகு குலையாமே நிற்குமவன் அல்லையோ நீ. உன்வடிவுக்குப் பூவைப் பூவை, எடுத்துக் காட்டு அளவுக்கு மட்டுமே ஒருபோலி யாகச் சொன்னேம், இத்தனையன்றே !

உன்கோயில் நின்று : முன்னே, 'நந்த கோபனுடைய கோயில்' என்றுர்கள். இங்கே 'உன்கோயில்' என்கிறுர்கள். வாச பூமி ஒன்றுய், அது இருவர்க்கும் பொது வாய் ஆய்த்திருப்பது.

இவன் வர்த்திக்கும் கோயிலுக்கு சேஷ சேஷிகளுடைய முதன்மை கொள்ளக் கடவதிறே, ப்ரணவம்போலவும், ஹ்ருதய கமலம் போலவும்; 'திருவரங்கம் நம்மூர்' 'எம்பெருமான் கோயிலென்றேற்கு இது வன்றே எழிலாலி' என்னக் கடவதிறே.

இங்ஙனே போந்தருளி : இராமபிரான், திருமாளிகையில் நின்றும், சுமந்திரனின் கையைப் பிடித்துக் கொண்டு, பிராட்டி பின்தொடரப் புறப்பட்டாற் போலே, எழுந் தருளவேணும்.

போந்தருளி : நால்வகை நடையிறே; நடையிலே காளையினுடைய செருக்கும், மதயானையினுடைய மதிப்பும், புலியி னுடைய சிவிட்கும், சிம்மத்தினுடைய கம் பீரமும் பகையடக்கும் ஆற்றலும், தோன் றும்படி நடையிட்டருளி ! நமக்கு இவை யெல்லாம் நம்பெருமாள் நடையழகிலே காணலாம்.

**கோப்புடைய :** சராசரங்களும் உபய விபூதியும் தொழிலாக வகுப்புண்டிருக்கை.

**சீரிய சிங்காசனம் :** சிறந்த சிங்கத்துக்குத் தகுதியுடைய ஆசனம். சீர்மையுடைய சிங்காசனம் எனினுமாம். ஆசனத்துக்குச் சீர்மையாவது, கடற்கரை வெளியிலே வானரக் கூட்டத்தில் வார்த்தை போலேயும், பூசற்களரியில் தேர்த்தட்டில் வார்த்தை போலேயும், பெண்கள் திரளிலே திவ்ய சிம்மாசனத்திலேயிருந்த பொய்ங்நம்பியான கிருஷ்ணன் சொன்னதேயாகிலும், ஆசன விசேடத்தாலே பழுது போகாதபடியாய் இருக்கும். தர்மாசனத்திலே இருந்தால் தோற்றிற்றுச் சொல்ல வொண்ணாதிறே! இது தான் தர்மாதி பீடமிறே.

நம்பெருமாள், கோயில் ஆழ்வாரில் நின்றும் புறப்பட்டருளி, பெரிய திருமண்டபத்திலே, சேர பாண்டியனிலே நாச்சிமாரோடே கூட இருந்து நினைப்பிட்டது என்றால், தப்பாதாற் போலே.

**யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள் :** அநந்ய ப்ரயோஜனர்கள் ஆன நாங்கள் வந்த காரியம் ஆராய்ந்தருள வேணும் என்கிறார்கள்.

நப்பின்னைப்பிராட்டி பரிக்ரகமாய் இருக்க "சங்கம் இருப்பார் போலே வந்து தலைப் பெய்தோம்" என்று அநந்ய கதிகளாகச் சொல்லுவதே என்று பொறுத்திலன்.

அழகர் கிடாம்பியாச்சானை அருள்பாடிட்டு ஒன்று சொல்லிக் காண் என்று பணிக்க, அவர் 'அகதிம் சரணாகதம்' என்ன, அழகர் "நம் இராமாநுசனை உடையையாய் இருந்து வைத்து 'அகதிம்' என்னப் பெறாய்" என்று அருளிச் செய்தார்.

**காரியம் :** இன்ன காரியம் என்று குறிப்பிடாமல் விடுகிறார்கள். தகுந்த சமயத்திலே சொல்ல வேணும் என்று நினைத்து.

ஸ்ரீபரதாழ்வான் தம்மோடு ஒக்க ஆர்த்தரானார் எல்லாரையும் திரட்டிக் கொண்டு சென்று திருவடிகளிலே விழ இரங்குவர் என்று வர, அவன் நினைத்து வந்ததற்குத் தகுந்த சமயம் இல்லாமையாலே அணுக ஒண்ணாதபடி யிருந்து திருவடி நிலைகளைக் கொடுத்துவிடும் சுவதந்திரனாகையாலே, இப்போது சொல்லுவோம் அல்லோம், இன்னும் இரண்டடி புக்கு நின்ற அளவில் "உற்றோமே யாவோம்" என்கிறோம் என்று காரியம் இன்னது என்னும் இடத்தைச் "சிற்றஞ் சிறு காலைக்கு" வைக்கிறார்கள்.

**ஆராய்ந்தருள் :** நீங்கள் என்பட்டீர்கள்? யாது செய்தீர்கள்! என்கை. அதாவது பெண்களை, எழுப்புவது வாசல் காப்பானை எழுப்புவது, ஸ்ரீநந்தகோபர் உள்ளிட்டாரை எழுப்புவது, நம்மை எழுப்புவதாய், மிகவும் விசனப்பட்டு விட்டீர்களே! என்கை. எதிர் சூழல் புக்குத் திரியுமவனுக்கு இவையெல்லாம் தன் குறையாகத் தோற்றுமிறே.

(தொடரும்)

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

### வாரவழிபாட்டுக் கழக ஆண்டுவிழா

**மயிலம் :** சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில், மயிலம் செந்தமிழ்க் கழகத்தின் சார்பில் நடைபெற்றுவரும் வார வழிபாட்டுக் கழகத்தின் 15-ஆம் ஆண்டுவிழா சிறப்புற நடைபெற்றது. மயிலம் பொம்மபுர ஆதீனம் 19-ஆம் பட்டத்து மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கியருளினார்கள். பூம்புகார் மேலையூர்ச் சிவராஜயோக மடம் தவத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் அவர்கள் தலைமை ஏற்றருளினார்கள். 'திருக்கோயில்' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், M. A., M. O. L., அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். மயிலம் தமிழ்க்கல்லூரி மாணவர் திரு. கு. கிருட்டிணன் அவர்கள் நன்றியுரை நவில, விழா இறைவணக்கத்துடன் இனிது நிறைவேறியது. (29-3-68).

# மகாபாரதம்

அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

ஆயிரபாதன் என்ற அவர், ருருவைப் பார்த்து, "அந்தண முனிவரே! உயிர்க்கொலை கொடியது. முனிவர் மனத்தினாலும் கூடச் செய்யக்கூடாதது. கொல்லாமையும், பொய்யாமையும், அந்தணனுக்கு இருகண்போன்ற அறங்கள். தண்டிப்பதும், காப்பதும் மன்னவருடைய அறம்.

இனி சர்ப்பங்கட்கு அவைகளின் தாய் கத்ருவினால் "ஜனமேஜயன் செய்யும் சர்ப்ப யாகத்தில் அழிவு வரும்" என்று சாபம் நேர்ந்துள்ளது. ஆதலால் நீர் ஓய்வு பெற்றுத் தவஞ் செய்யும் என்று கூறிவிட்டுச் சென்றார். அதன் பிறகு ருரு தவநெறியில் நின்றார். என்று இந்தக் கதையை உதங்கர் ஜனமேஜயருக்குக் கூறினார். ஜனமேஜயர், "ஐயனே! நாகங்களின் தாய் நாகங்கட்கு ஏன் சாபந் தந்தாள்? அதனைக் கூறும்" என்று வினவினார். உதங்கர் கூறுவாராயினார்.

**கருடர் :**

காசிப முனிவருடைய மனைவியர் வினதை, கத்துரு என்பர். இவ்விரு பெண்மணிகளும் தட்சப்பிரஜாபதியின் புதல்வியர். இவ்விரு பத்தினிகளும் கணவனார் மனங் களிக்க ஒழுகினார்கள். காசிபர் அவர்களது தவவொழுக்கத்தால் மகிழ்ந்து, "உமக்கு என்ன வரம் வேண்டும்? கேளுங்கள் தருகின்றேன்" என்றார்.

கத்துரு என்பவள் "ஒரே வடிவமுள்ள ஆயிரம் நாகர்கள் பிறக்க வேண்டும்" என்றாள். வினதை "உலகம் எல்லாம் வெல்லக் கூடிய பெரிய வலிமையுள்ள இரு புதல்வர்கள் வேண்டும்" என்றாள்.

இருவரும் கருக் கொண்டார்கள். வினதை இரு பெரிய முட்டைகளை யிட்டாள். கத்துரு ஆயிரம் முட்டைகளை யிட்டாள். அம்முட்டைகளைச் சூடுள்ள இடத்தில் வைத்து ஐந்நூறு ஆண்டுகள் பாதுகாத்தார்கள். கத்துருவின் முட்டைகள் உடைந்து, ஆயிரம் மகாநாகர்கள் பிறந்தார்கள். ஆதிசேடன் வாசுகி தட்சகன் முதலிய நாகர்கள் இனிது வளர்ந்து கல்வி கேள்விகளிற் சிறந்து, ஆடுவதும் பாடுவதுமாக இருந்தார்கள்.

வினதைக்குச் சிறிது பொறுமை யேற்பட்டது. தான் இட்ட இரு முட்டைகளில் ஒன்றை அவசரத்தால் உடைத்து விட்டாள். சிவந்த ஒளியுள்ள ஒரு குமாரன் வெளிவந்தான். அவனுக்கு இடைவரை உருவம் நன்கு வளர்ந்திருந்தது. இடைக்குக்கீழ் கால்கள் தோல்போல் அசைந்தன. "அம்மா! உன்னால் நான் முடவன் ஆனேன். ஏன் இந்த அவசரம் உனக்கு? உன் தங்கைக்கு நீ ஐந்நூறு ஆண்டுகள் அடிமையாவாய்" என்று சபித்தான். மீளவும் அக்குமாரன் தாயின் துயரத்தைப் பார்த்து இரக்கமுற்று, "தாயே! வருந்தாதே. இதோ இங்கிருக்கின்ற மற்றொரு முட்டையையாவது உடைக்காமல் காப்பாற்று! என் தம்பி ஐந்நூறு ஆண்டுகள் வளர்ந்து பிறப்பான். அவனால் அடிமை அகலும்" என்று கூறினான்.

அருணன் என்ற பேருள்ள அந்த ஒளி நிறைந்த குமாரன், சூரிய பகவானுக்குத் தேர்ச் சாரதியாக ஆனான்.

**பாற்கடல் கடைதல் :**

ஒருசமயம் தேவர்கள் மரணத்தைத் தவிர்க்க வேண்டும் என்று கருதினார்கள். நாராயணர் கூறியபடி பாற்கடலைக் கடைய நினைத்தார்கள். மந்தர மலையை எடுக்கும் ஆற்றல் ஒருவருக்கும் அமையவில்லை. ஆயிரம் முடியுடைய ஆதிசேடன், அதனை ஒருவனாகவே எடுத்து வந்து கடலில் இட்டான். திருமால் கூர்மமாகி அதனைத் தாங்கினார். வாசுகி என்ற

நாக மன்னன் தாம்புக் கயிருக ஆனுன். வாற் புறத்தில் தேவர்களும், தலைப்புறத்தில் அசுரர் களும் பிடித்துப் பலகாலம் கடைந்தார்கள். அப்போது உலகமே சுழன்றது. பேர் இரைச் சல் உண்டாயிற்று.

அதன் துன்பத்தைத் தாங்கமாட்டாமல், வாசுகி நஞ்சினைக் கக்கினுன். அது நீரில் கலந்தது. கடைந்த வேகத்தால் ஆலகாலம் என்ற மிகப்பெரிய நஞ்சு தோன்றியது. அதனைக் கண்டு சகல தேவர்களும் ஓடினுர் கள். சிவபெருமானைத் துதி செய்தார்கள். சிவபெருமான் தேவர்களின் முறையீட்டுக்கு இரங்கி அக்கொடிய விடத்தையுண்டு, தம் கண்டத்தில் தரித்தார். அதனுல் நீலகண்டர் ஆனுர். அமரர்களின் துயரைத் தீர்த்தார்.

பின்னர் எல்லோருஞ் சேர்ந்து விடாமுயற்சி யுடன் பாற்கடலைக் கடைந்தார்கள். கருமை யான உருவுடன் மூதேவி யுதித்தாள். குளிர்ந்த ஒளியுடன் சந்திரன் தோன்றினுன். பின்னே வரிசையாக இலக்குமி, சுராதேவி, காமதேனு, கற்பகம், சிந்தாமணி, அப்ஸரசுகள், உச்சை ஸ்வரியம் என்ற குதிரைஇவைகள் தோன்றின. முடிவில் அழகிய தன்வந்தரி யென்னும் தேவதை ஒரு குடத்தில் அமுதத்துடன் தோன்றினுள்.

அமுதத்தைக் கண்டு அமரர்களும் அசுரர் களும் ஆனந்தம் அடைந்தார்கள். அசுரர்கள் அமுதம் எமக்கே என்று கூச்சலிட்டார்கள். திருமால், மோகினி யுருவில் வந்து அமரர்களை யும் அசுரர்களையும் அமரச்செய்து, அமரர் கட்கு அமிர்தம் வழங்கினுர். அசுரர்கள் மோகினியின்மீது மையல்கொண்டு, அவளைப் பார்த்துக்கொண்டு நின்ருர்கள். இராகு என்ற அசுரன் அமரர் உருவங்கொண்டு, அமுதத்தை யுண்டான். சூரிய சந்திரர் அதனை அறிவித் தார்கள். திருமால் சக்கரத்தால் அந்த இராகு வின் தலையை அரிந்தார். அமுதம் கழுத்து வரை சென்றபடியால் தலை அழியாது நின்றது.

பிறகு தேவர்கட்கும் அசுரர்கட்கும் பெரும் போர் நடைபெற்றது. ஆயுதங்களை எறிந்து கடுமையாகத் தாக்கினுர்கள். நாராயணர் சக்கராயுதத்தால் அசுரர்களை அழித்தார்,

மந்தர மலையை முன்னிருந்த இடத்தில் வைத்து அதனை வணங்கினுர்கள். மிகுதி யுள்ள அமுதத்தைக் காவலில் வைத்தார்கள்.

அமுதத்துடன் பிறந்த உச்சைஸ்வரியம் என்ற அழகிய வெண்புரவி கடற்கரையில் காணப் பட்டது. அதனை வினதையும் கத்துருவுங் கண்டார்கள். வினதை கத்துருவைப் பார்த்து "அம்மா! இது பாற்கடலில் பிறந்தது. தூய வெண்மையானது" என்ருள். கத்துரு வேண்டும் என்றே, "இல்லை. வாற்புறத்தே கருமையுளது" என்ருள்.

இப்படி இருவருக்கும் வாக்குவாதம் உண்டா யிற்று. தோற்றவர்கள் அடிமையாவது என்று பந்தயம் போட்டுக் கொண்டார்கள். "நாளை காலை பார்ப்போம்" என்று சொன்னுள் கத்துரு.

அன்றிரவு கத்துரு தன் மைந்தர்களை யழைத்து, "மக்களே வினதைக்கும், எனக்கும் உச்சைஸ்வரியத்தைப் பற்றி வாதம் நடந்தது. அவள் வெண்மையென்ருள், நான் வால்புறம் கருமையென்றேன். தோற்றவர் கள் அடிமையாவது என்று பந்தயம் அமைத் தோம். ஆதலால் நீங்கள் சென்று வால்புறம் கரிய மயிர்களாக உருவம் எடுத்துக்கொண்டு இருங்கள். அதனுல் நான் வெற்றி பெறு வேன்" என்ருள்.

ஆதிசேடன் முதலியோர்கள், "அம்மா! அமுதத்துடன் பிறந்த உயர்ந்த வெண் குதிரையைக் கருமையாக்குவதா? அன்றியும் பெரியன்னை கூறியது உண்மை. உண்மைக்கு மாருக நீ கருமை யென்று சொன்னது பிழை யல்லவா? நீ பொய் கூறினுய். பொய்க்கு நாங்கள் துணை செய்வதா? அங்ஙனம் செய்யின், பெரியம்மைக்குப் பிழை செய்த தாக முடியும். ஆதலால் இதற்கு உடன் படோம்" என்ருர்கள்.

விதியினுல் தூண்டப்பட்ட கத்துரு வெகுளி யினுல் மூடப்பட்டாள். பிள்ளைகள் என்ற கருணை அவள்பால் அகன்றது. "மூடர்களே! தாய் சொல்லைத் தள்ளியபடியால் ஜனமே ஜயன் செய்கின்ற சர்ப்பயாகத்தில் நீங்கள் அழியக்கடவது" என்று கொடிய சாபத்தைக் கொடுத்தாள்.

இச்சாபத்தைப் பிரமதேவர் கேட்டு "இது இப்படியாகட்டும், மக்களை நஞ்சால் கொல்லு கின்ற அரவங்கள் எங்கும் இருந்து இடர்புரி கின்றன. மக்களின் நலம் குறித்தே சத் துருவை விதி தூண்டிச் சாபந் தரச் செய் தது" என்று தேவர்களிடம் கூறினுர். பிறகு பிரமதேவர் காசிபமுனிவரைக் கண்டு "கத்துரு தந்த சாபம் உலகத்துக்கு நன்மைதரும். நச் சரவங்களை நீ உண்டாக்கினுய். அதற்கு ஒரு வகை முடிவு வருவது நல்லது. நீ கோபிக்

காதே'' என்று கூறி, விஷ நீக்க மந்திரத்தையும் உபதேசித்தார்.

கார்க்கோடகன் என்ற நாகன் நடுங்கித் தாயை நோக்கி, நான் சென்று வாலில் கரும் மயிராகியிருப்பேன் என்று சொல்லி, அவன் அப்புரவியின் வாலில் கருமயிராகி அதன் நிறத்தை மாற்றினான். மறுநாள் காலை கத்துருவும், வினதையும் கடலிடம் போய்த் தூய பால்போன்றதும், பளிங்கு போன்றதும், ஆகிய உச்சைஸ்வரியத்தைக் கண்டார்கள். வாற்புறம் கருமையிருந்தது. அதனால் வினதை தோற்று அடிமையானாள். வினதை நாள்தோறும் கத்துருவுக்கும், நாகர்களுக்கும் வருத்தமுற்றுத் தொண்டுகள் புரிந்தாள்.

ஐந்நூறு ஆண்டுகள் கழிந்தன. மற்றொரு முட்டை யவிழ்ந்து பேராற்றலும் பேரொளியும் படைத்த கருடர் தோன்றினார். இரண்டாவது வடவைத் தீயைப்போல் காட்சியளித்தார்; விண்ணிற் பறந்தார்.

தேவர்கள் அஞ்சி நடுங்கி அக்கினி பகவானைச் சரண் அடைந்து, "அக்கினி தேவனே! நீ ஏன் சினந்து எங்களை அழிக்கின்றாய்?'' என்று வினவினார்கள். அக்கினி "அமரர்களே! இந்தப் பெரிய உருவம் நீங்கள் நினைக்கின்றபடி என்னுடைய உருவம் அன்று. இது கருடனுடைய உருவம். இவன் தேவர்கட்கும், வினதைக்கும் நன்மை புரிகின்றவன். அசுரர்கட்கும், நாகர்கட்கும் நாசத்தையுண்டாக்குபவன். சமானம் இல்லாத வலிமை படைத்தவன். நீங்கள் அஞ்சவேண்டாம்'' என்றான். முனிவர்களும், தேவர்களும் கருடனிடம் போய்த் தொழுது துதி செய்தார்கள். கருடர் தேவர்களின் துதியைக் கேட்டுத் தம் ஒளியை அடக்கிக்கொண்டார். எல்லா உலகத்திலும் சென்றுவரும் ஆற்றலும், நினைத்த உருவை எடுக்கும் பெற்றியும், சமானமில்லாத வலிமையும் படைத்த அவர், தாயாரைத் தொழுதார். கருடனைக் கண்டு நாகங்கள் நடுங்கின. எனினும், அடிமையின் மகன் என்று கருதித் தருக்குடன், "அடே கருடா! எங்களையும் எங்கள் தாயாரையும் எடுத்துக்கொண்டு ரமணீயகத் தீவுக்குச் சுமந்து செல்'' என்றார்கள்.

"அம்மா! நான் அடிமையா?'' என்று தாயாரைக் கேட்டார் கருடர். "ஆம் மகனே!'' என்றாள் அன்னை. கத்துருவை வினதை எடுத்துக் கொண்டாள். நாகர்களைக் கருடர் முதுகில் ஏற்றிக்கொண்டு விண்வழியே உயரத்தில் பறந்தார்.

கதிரவனுடைய கொடிய வெப்பம் பட்டு நாகர்கள் கரிந்து சுருண்டுவிட்டனர். கருடர் அவர்களை ரமணீயகத் தீவில் இறக்கினார். பிள்ளைகளின் துன்பத்தைக் கண்ட கத்துரு, இந்திரனைத் துதித்தாள். இந்திரன் மழை பொழிவித்தான். நாகங்கள் உய்வு பெற்றன. இப்படிப் பலப்பல தீவுகட்கு நாகர்கள் கருடனை வாகனமாகக் கொண்டு சென்று கண்டு களித்தார்கள். கத்துருவுக்குப் பலகாலும் தொண்டு செய்து தனது தாய் இளைப்புறுவதைக் கண்டு கருடர் மனம் நொந்தார்.

தாயின் அடிமைத்தனத்தை நீக்கவேண்டும் என்று கருதினார். நாகங்களை நோக்கி "என் அன்னையின் அடிமை நீங்க நான் உங்கட்கு எதைத் தரவேணும்? ஆராய்ந்து சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

நாகங்கள் தங்களுக்குள் பேசித் தாயின் சாபம் எதிரில் பயங்கரமாக இருக்கின்றது; ஆதலால் மரண பயத்தைத் தவிர்க்க நாம் அமுதம் உண்ண வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்கள். கருடனைப் பார்த்து "கருடா! அமுதங் கொணர்ந்து தந்தால் அடிமைத் தளை நீங்கும்'' என்றார்கள்.

கருடர் "நன்று'' என்று கூறி, அமுதத்தைக் கொணரும் பொருட்டுப் புறப்பட்டார். தாயிருக்குமிடம் போய்த் தாயை வணங்கி "அம்மா! நான் அமுதங் கொணரப் போகின்றேன். எனக்குப் பசி. எந்த உணவை எங்கு உண்ணட்டும்?'' என்று கேட்டார். வினதை "மகனே! கடல் நடுவில் ஒரு தீவில் கொடிய வேடச்சேரி யிருக்கின்றது. அவ்வேடர்கள் சதா கொடுமையைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை நீ விழுங்கக்கடவாய். அதில் ஒரு பிராம்மணன் இருக்கின்றான். உண்ணும்போது நெஞ்சில் சுடும். அவனை நீ விழுங்காதே. உன்னைத் தருமங் காக்க; உன் இரு சிறகுகளையும் வாயுதேவன் காக்க. சூரியனும் சந்திரனும் எட்டு வசுக்களும் திருமாலும் உன்னைக் காக்கக்கடவர். நீ முயலும் மிகப் பெரிய கருமம் உனக்கு எளிதாக முற்றுக. உனக்காக நான் இங்கு தெய்வத்தைத் தியானித்துக்கொண்டிருப்பேன். வழியில் தீங்கில்லாமல் செல்வாயாக'' என்று ஆசி கூறினாள்.

கருடர் வேடச்சேரிக்குச் சென்று, வேடர்களை ஆயிரக்கணக்காக விழுங்கினார். நெஞ்சில் அழற்சி யுண்டானவுடன்'' ஏ, பிராம்மணனே! நீ வெளியில் வா'' என்றார். அவன் "என் மனைவியும் பிழைக்கவேணும்'' என்றான். இருவரையும் விழுங்காமல் விட்டுவிட்டார்.

இவ்வாறு அத்தனை வேடர்களையும் விழுங்கி விட்டு, மலைகள் நடுங்குமாறு வானில் பறந்து, தந்தையாகிய காசிபமுனிவர்பால் சென்று வணங்கினார்.

புத்திரனே! உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாகட்டும். "உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?" கேள் என்றார்.

"அப்பா! என் தாயின் அடிமைத்தளையை நீக்குமாறு அமுதங் கொணரச் செல்கின் றேன். எனக்குப் பசி தணியவில்லை. எனக்கு ஆகாரம் வேண்டும்?" என்றார்.

காசிபர் "மகனே! விபாவசு, சுப்ரதீகன் என்ற இருவர் உடன் பிறந்தோர்கள். பாகப்பிரிவினை யில் அவர்கட்கு விரோதம் உண்டாயிற்று. தமையன் தம்பியைப் பார்த்துப் பிரிவினையை விரும்பி நீ சதா என்னை நச்சரித்தபடியால், ஆறு யோசனை உயரமும் பன்னிரண்டு யோசனை சுற்றளவும் உள்ள யானையாவாய்" என்று சபித்தான். தம்பி "மூன்று யோசனை உயரமும் பத்து யோசனை சுற்றளவும் உள்ள ஆமையாவாய்" என்று தமையனைச் சபித் தான். இப்படி நல்ல தவமுள்ள அவர்கள், கோபத்தால் ஒருவரையொருவர் சபித்து, யானையும் ஆமையும் ஆகி, இதோ இந்த மடுவில் சதா போர் புரிந்துகொண்டிருக்கின் றார்கள். அதனால் நீரிலும் நிலத்திலும் வாழும் உயிர்கள் இடர்ப்படுகின்றன. இந்த இரண் டையும் நீ உண்டு பசியாறி அமுதங் கொள் வாயாக! உனக்கு நன்மையுண்டாகும். போய் வருக" என்று ஆசி கூறினார்.

கருடர் விரைந்து சென்று அந்தப் பெரிய யானையை ஒரு நகத்தாலும், ஆமையை ஒரு நகத்தாலும் இடுக்கிக்கொண்டு விண்ணில் பறந்தார்.

அங்கு அவருடைய காற்றினால் விண்ணும் மண்ணும் அசைந்தன; மரங்கள் ஒடிந்தன. ஒரு புறத்தில் தேவலோகத்து ஆலமரம் ஆயி ரம் யோசனை உயரமாகவளர்ந்திருந்தது. அதில் நூறு சோமனை நீண்டுள்ள கிளையில் கருடர் இருந்தார். உடனே அக்கிளை அவருடைய பாரத்தைத் தாங்கமாட்டாமல் முறிந்தது. அக் கிளையில் வாலகில்ய முனிவர்கள் தலைகீழாகத் தொங்கித் தவம் புரிந்துகொண்டிருந்தார்கள். "கிளை முறிந்து கீழே விழுந்தால் அவர்கள் மரணம் அடைவார்களே" என்று கருடர் அஞ்சி, அக்கிளையை வாயினால் பிடித்துக் கொண்டு கந்தமாதனகிரியை அடைந்து, பிதாவை நோக்கி, "அப்பா! இதோ இந்தக் கிளையில் வாலகில்ய முனிவர்கள் தலைகீழாக நின்று தவஞ் செய்கின்றார்கள். இதை எங்கே எறியட்டும்? இவர்கள் எப்படி இதைவிட்டு நீங்குவார்கள்?" என்று கேட்டார்.

"மகனே! இந்த வாலகில்யர்கள் சூரிய னுடைய வெயிலைப் பருகுகின்றவர்கள். இவர் கள் சினமுற்றால் நீ நீறாகப்போவாய்" என்று கூறிக் காசிப முனிவர் எழுந்து, வாலகில்ய முனிவர்களை வணங்கி "நீங்கள் என் மகனுக்கு அருள் புரியவேண்டும். இவன் ஒரு பெரிய காரியத்தைத் தொடங்கியிருக்கிறான். இவனை வாழ்த்துங்கள்" என்று வேண்டினார். வால கில்யர்கள் கருடனுக்கு ஆசிகூறிக் கிளையை விடுத்து, இமாசலஞ் சென்றார்கள். காசிபர் "பனியினால் மூடப்பட்டதும், மனித சஞ்சார மில்லாத இடமுமான ஒரு மலையைக் காட்டி, இங்கே கிளையைப்போடு" என்று கட்டளையிட் டார். அதுபடியே அப்பெரிய கிளையை அவ் விடத்தில் எறிந்துவிட்டு, கருடர் அம்மலையின் கொடுமுடியில் அமர்ந்து ஆமையையும் யானை யையும் உண்டார். அம்மலை நடுங்கியது. பின்னர் வேகமாக விண்ணிலே பறந்தார்.

**அபசகுனம் :**

கருடர் விண்ணில் பறந்து சென்றபோது, தேவர்கட்குக் கெட்ட சகுனங்கள் உண்டா யின. இந்திரனுடைய வஜ்ராயுதம் நடுங்கி யது. பகலில் விண்ணிலிருந்து புகையோடு எரிகொள்ளி விழுந்தது. பூ மாலைகள் வாடின; புயல் வீசியது; உதிரமழை பொழிந்தது.

இந்திரன் வியாழ பகவானைப் பார்த்து "குரு நாதா! இது என்ன உற்பாதம்? நமக்குப் பகை வர் யாரும் இல்லையே?" என்று கேட்டான். வியாழ பகவான் கூறுகின்றார். "இந்திரனே! நீ மறந்தனைபோலும்! காசிபர் புதல்வர் விரும்பி வேள்வி புரிந்தார். முனிவர்களும், தேவர்களும், கந்தர்வர்களும் அதற்கு உதவி புரிந்தார்கள். அப்போது இந்திரனாகிய நீ, மலை போன்ற சமித்துக்களை ஆயாசம் இன்றிச் சுமந்து கொண்டுவந்தாய். கட்டைவிரலின் நடுரேகை யளவுள்ள சரீரத்துடன்கூடிய வாலகில்யமுனிவர்கள், ஒரு பலாசக் கழியைப் பலர் சேர்ந்து சுமந்தும், அயர்ச்சியுற்றும், மாட்டுக் குளம்படி நீரில் நீந்தியும், வருவதைக் கண்ட நீ, அவர்களை அவமதித்துச் சிரித்தாய்.

வாலகில்யர்கள் அதனையறிந்து சீற்றமுற் றார்கள். அந்த யாகத்தில் உன்னைவிட நூறு மடங்கு சிறந்தவனும், அதிக ஆற்றல் உடை

யவனும், மிகச் சிறந்தவனுமான, இரண்டாவது இந்திரன் உண்டாமாறு மந்திரங்களை உச்சரித்தார்கள். அதனை அறிந்த நீ அஞ்சிக் காசிபரைச் சரண் அடைந்தாய். காசிபர் வாலகில்யர்களைப் பார்த்து "நீங்கள் புதிய இந்திரனை உண்டாக்குவது நன்றன்று. பிரமதேவர் இவனை மூவுலகுக்கும் இந்திரனாக நியமித்துள்ளார். அவருடைய நியமனம் தவறக்கூடாது, உங்கள் முயற்சியும் பொய்யாகக்கூடாது; இந்த மந்திரக்கிரியையால் பறவைகட்கு இந்திரன் உண்டாக அருள்புரியுங்கள்" என்று வேண்டினர். அவர்களும் காசிபருக்கு மரியாதை தந்து தங்கள் மந்திரவலிமையினால் "கருடேந்திரன் பிறப்பான்" என்று கருணை புரிந்தார்கள். அப்போது வினதை புத்திர வரம் வேண்டினர். வலகில்யருடைய மந்திர சக்தியும் வேள்விப்பயனும் ஒன்றுகூட, அவள் கருப்பமுற்று கருடனைப் பெற்றாள். கருடன் உன்னிலும் பன்மடங்கு வலிமையுள்ளவன். அப்போது காசிபர் உன்னைப்பார்த்து "இனி நீ தவசீலர்களை அவமதியாதே" என்று அறவுரை கூறினர். "இந்திரனே! அமுதங்கவர வந்துள்ளான் கருடன்; கருடனை எதிர்க்க முடியாது. அவனால் சாதிக்க முடியாதது இல்லை" என்றார் தேவகுரு.

இந்திரன் தேவர்கள் புடைசூழ வஜ்ராயுதத்துடன் சென்று கருடனை எதிர்த்தான். மின்னலுக்கும், இடிக்கும், நிகரான பௌமன் என்பவன் அமுதத்தைச் காத்துக்கொண்டிருந்தான். கருடருடைய சிறகின் காற்றினால் மலைகள் பறந்தன. எங்குந் தூசிகள் கிளம்பின. கருடர் சிறகினாலும் மூக்கினாலும் தேவர்களைச் சிதறடித்தார். இந்திரன் வாயுவைப் பார்த்து, நீ இந்த மண்மாரியை விலக்கு" என்றான். வாயு ஓங்கி வீசினான். தேவர்கள் வாள் தண்டு சூலம் முதலிய ஆயுதங்களை வீசினார்கள். கருடர் சிறிதும் அஞ்சாது சிறகையசைத்தார். ஆயுதங்கள் இலவம் பஞ்சு போல் துகள்பட்டு ஒழிந்தன. கருடர் தேவர்களின் உடம்பைப் புண்ணாக்கினர். அவருடைய சிறகின் காற்றினால் தேவர்கள் திசைகள் தோறும் ஓடி ஒளிந்தார்கள். இந்திரன் வச்சிரப் படையை விடுத்தான். கருடர் இது ததீசி முனிவருடைய எலும்பினால் செய்தது. அம்முனிவருக்குப் பெருமை தரவேண்டும் என்று அதை மார்பில் ஏற்றார். வச்சிராயுதம் அவருடைய மார்பில் இருந்த ஒரு உரோமத்தை உதிர்த்தது. இப்படி இந்திரனை வென்ற கருடர், அமிர்தம் இருக்கும் இடத்தை யடைந்தார்.

அமிர்தத்தின் அருகில் அணுக விடாமல் நாற்புறத்திலும் தீக் கொழுந்து காற்றுடன் எரிந்துகொண்டிருந்தது. கருடர் எண்ணாயிரத்துநூறு வாய்களை எடுத்துக்கொண்டு மகாநதிகளின் நீரைக் குடித்து அந்த அக்கினியை அவித்தார். அதற்கு அப்பால் கூரிய கத்தி முனையுள்ள சக்கரம் வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. உள்ளே நுழைபவரைக் கொல்லும்பொருட்டுத் தேவர்கள் அதனைச் செய்துவைத்திருந்தார்கள். கருடர் ஒரு நொடியில் தன்னுருவை அணுவாக்கி, அச் சக்கரத்தின் ஆரக்கால்களின் இடையில் நுழைந்து உட்புகுந்தார். அதற்கு அப்பால் இரண்டு கொடிய நாகங்கள் இமைகொட்டாமல் கண்களைத் திறந்து கொண்டிருந்தன. நெருப்புமிழும் அப்பாம்புகளின் பார்வை விழுமாயின் அவர் உடனே வெந்து சாம்பலாகிவிடுவார். கருடர் இவற்றை எவ்வாறு வெல்வது என்று கருதினர். நிரம்ப மணல்களை எடுத்து அதன் கண்களில் தூவி மறைத்தார். பின் அப்பாம்புகளைச் சிறகினால் வெட்டித் துணித்தார். பிறகு அமிர்தத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

இந்திரன் இதனைக் கண்டு வருந்தித் திருமாலைத் துதித்தான். திருமால் கருடர் முன் தோன்றி "உனக்கு வரங் கொடுக்கிறேன். கேள்" என்றார். கருடர் "உமக்கு மேலே நான் இருக்கவேணும். அமுதம் உண்ணாமலேயே கிழத்தனமும் மரணமும் உண்டாகாமல் இருக்கவேணும்" என்றார். திருமால் "அப்படியே ஆகட்டும்" என்றார். கருடர் நாராயணரைப் பார்த்து, "ஐயனே! தங்கட்கு நானும் வரம் தருவேன். தாங்கள் என்னைக் கேளுங்கள்" என்றார். நாராயணர் "கருடனே! நீ எனக்கு வாகனமாக இருக்க வேண்டும்" என்றார். நாராயணர் தந்த வரத்தின்படி தனக்கு மேலே இருக்கும்படி கொடியாகவும் அமைத்தார். கருடனுடைய அழகான சிறகைக் கண்டு "சுபர்ணர்" என்று தேவர்கள் பெயர் சூட்டினார்கள்.

இந்திரன் கருடர் முன்னே வந்து "பறவை வேந்தனே! உன் தந்தை காசிபர். எனக்கும் அவர்தான் தந்தை. ஆதலால், நீ என் தம்பி. நான் உனது நட்பை விரும்புகின்றேன்" என்றான். கருடர் "தேவர்கோமானே! அதுபடியே உனக்கும் எனக்கும் நட்பு உண்டாகட்டும். தன்னைத்தானே புகழக்கூடாது. ஆயினும் அவசியமாயின் சொல்ல வேண்டியுளது. நான் இந்த உலகங்களையும் கடலையும், மலைகளையும் உன்னையும் ஒரு சிறகினால் தூக்கு

வேன். ஆனல் நான் உன்னை அவமதிக்க மாட்டேன் என்ருர்.

தேவேந்திரன் "கருடரே! உமது வலிமையை நான் அறிகின்றேன். இந்த அமுதத்தை நீர் யாருக்குத் தருகின்றீரோ? அவர்கள் எங்களை இடர்ப்படுத்துவார்ாள். ஆதலால் அமுதத்தைத் திரும்ப என்னிடம் தருவீர்" என்ருன். கருடர் "அண்ணே! நான் என் தாயின் அடிமை நீங்க இதனை நாகர்கட்குத் தருவேன்" என்ருன். இந்திரன், "அப்படியாயின் அமுதத்தைத் தந்து நீராடி யுண்ணுங்கள் என்று சொல்லிவிட்டால் போதும். நீ தந்தபின் நான் அமுதத்தைக்கவர்ந்து வந்துவிடுவேன்" என்ருன். "அப்படியே செய்" என்று கூறிவிட்டுக் கருடர் அமுதத்தைக் கொண்டுபோய் நாகர்களிடம் தந்தார். தர்ப்பையில் வைத்தார். இந்தக் கணம் முதல் என் தாயின் அடிமை நீங்கியது. புனிதமான அமுதத்தை, நீராடி நல்ல கருமங்களைச் செய்து, புசியுங்கள்" என்று கூறிவிட்டுத் தாயுடன் சென்ருர்.

நாகங்கள் நீராடச் சென்றன. இந்திரன் மறைந்து வந்து அமுதத்தை எடுத்துக் கொண்டு சென்று சுவர்க்கத்தில் வைத்தான்.

நாகர்கள் நீராடி ஜபங்கள் செய்துவிட்டு மிக்க மகிழ்ச்சியுடன் "நான் முன்னே, நான் முன்னே" என்று முந்திக்கொண்டு வந்தார்கள். தர்ப்பையில் அமிர்தம் இல்லை. முன்பு பெரிய அன்னைக்குச் செய்த மோசத்துக்குப் பிரதி மோசம் நடந்தது என்று கருதி ஏமாந்தார்கள். அமுதம் வைத்த தர்ப்பையை நக்கினுர்கள். அதனல் நாக்குகள் இரண்டாகப் பிளக்கப்பட்டன. அமுதம் பட்டதனுல் தர்ப்பைகள் தூய்மையாயின. தாங்கள் செய்த கொடுமைகளையும் கருடருடைய வலிமையையும் தாயின் சாபத்தையும் நினைத்து துக்கம் அடைந்தன.

கருடரை இந்திரன் சந்தித்து உனக்கு என்ன வரம் வேண்டும்? என்ருன். கருடர் நாகங்கள் எனக்கு உணவாகும் வரவேண்டும் என்ருர்.

---

## குருபூசை விழா

திருவாமூர்த் திருநாவுக்கரசு நாயனர் திருக்கோயிலில், 21, 22, 23—4—68 ஆகிய மூன்று நாட்களும் மிகவும் சிறப்புற நடைபெற்றது. சிவபூசகர் மாநாடு, அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு, பண் ஆராய்ச்சி மாநாடு, கருத்தரங்கு, கவியரங்கு, திருமுறை இசை அரங்கு, சொற்பொழிவுகள் முதலியன, மிகவும் சிறப்புற நடைபெற்றன.

குருபூசை விழாவன்று, பழம்பெரும் ஓதுவா மூர்த்தி ஆகிய திருவீழி மிழலை திரு மு. சா. சோமசுந்தர தேசிகர் அவர்கள் 'திருமுறைக் கலாநிதி' என்னும் சிறப்புப்பட்டம் பொறித்த பொற்பதக்கமும், பணமுடிப்பும் வழங்கிப் பொன்னுடை போர்த்திச் சிறப்பிக்கப்பெற்ருர்கள்.

தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் 81 கார்களில், பெருஞ் செல்வர்களும், உயர் அலுவலர்களும், சிவபூசகர்களும், தமிழறிஞர்களும், ஓதுவா மூர்த்திகளும் மிகப் பலராகத் திரண்டு வந்திருந்தனர்.

நமது அறநிலைய ஆணையர் திரு ஆ. இராதாகிருஷ்ணன், எம். ஏ., பி. எல்., அவர்களும், தஞ்சைத் துணை ஆணையாளர் திரு டி. என். சிங்காரவேலு, பி ஏ., பி.எல்., அவர்களும், குருபூசை விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில், ஆறுபடை வீடுகள்-இமாலய யாத்திரை ஆகிய சமயத் திரைப்படங்கள் அனைவருக்கும் இலவசமாகக் காட்டப்பட்டன.

—ஆசிரியர்.

# "இல் என வேண்டா"

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள்,

தேவகோட்டை.

உலகம் தோன்றிய நாள் தொட்டு இன்று வரை கடவுள் உண்டென்று சொல்லுவாரும், இல்லையென்று சொல்லுவாருமான, இரண்டு வகையினரும் இருந்தே வருகின்றனர். உண்டென்று சொல்லுவாருள், அதற்கு நூல்களை ஆதாரமாகக் குறிப்பவரும், அங்ஙனமின்றி நம்பிக்கையைப் பற்றி நிற்பவருமென இரு திறத்தார் இருப்பதுபோல், இல்லையென்று சொல்லுவாருள்ளும் நூலாதரவுடையார், காட்சியளவையை மட்டும் உடன்படுவார், ஆகிய இருதிறத்தாரும் இருக்கின்றார்கள்.

ஒரு பொருளின் உண்மையை அறிந்து கொள்ளவேண்டுமானால், அதற்குத் துணை செய்கின்ற அளவைகளின் எண்ணிக்கை, பத்தும் அதற்குமேற் சிலவும் என்று, தருக்க நூல்கள் கூறும். அவ்வெல்லா அளவைகளும் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் ஆகிய மூன்றுக்குள் அடங்கும் முறையைச் சைவ சித்தாந்த நூல்கள் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன. புறக்கருவியாகிய கண்ணிந்திரியம் ஆதியவற்றிற்கு நேராகவும், பூதக்கண்ணாடி முதலிய துணைக் கருவிகளின் வாயிலாகவும், புலப்படுகின்ற பருமையும், நுண்மையுமான உருவப்பொருள்கள் ஒருவகை. அகக் கருவியாகிய மனத்துக்குப் புலப்படுகின்ற அருவப் பொருள்கள் இன்னொரு வகை. இவ்விருவகைக் கருவிகளுக்கும் எட்டாது, அப்பாற்பட்டு நூல்களால் அறியப் பெறுகின்ற சிறப்புப் பொருள்கள் இன்னொருவகை. இந்த மூவகைப் பட்ட பொருள்களின் உண்மை, முறையே பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்று சொல்லப் பெறுகின்ற காட்சி கருதல் உரை ஆகிய மூன்றாலும் தெளியப் பெறுவதாகும்.

காட்சியொன்றையே அளவையாகக் கொள்ளுபவர்களைவிடக், கருதலையும் அளவையாகக் கொள்ளுபவர்கள் மேம்பட்டவர்கள். இவையிரண்டுடன் உரையளவையையும் கொள்ளுவோர், எல்லோரினும் மேம்பட்டவராவர். "உயிரறிவு ஒரு எல்லைக்குட்பட்டது" என்பதை உண்மையாக உணர்ந்தவர்கள், அவ்வறிவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நிற்கும்காட்சி கருதல்களை மாத்திரம், முடிந்த அளவைகளாகக் கொள்ள மாட்டார்கள். "உயிரறிவுக்கு எட்டாதனவும் உள்ளன" என்பது அவர்களால் தெளியப்படுவதாதலின், வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட முதல் நூலையே, முடிந்த முடிபான பிரமாணமாகக் கொண்டு, அவர்கள் பயனை அடைவார்கள்.

காட்சி குறிப்பிட்ட பொருளை நேரே கண்டறிவதற்குத் துணை செய்யும், கருதல் ஒரு பொருளுடன் தொடர்பு பெற்ற மற்றொரு பொருளைக் கொண்டு, முன்னைப் பொருளையறிவதற்குச் சாதனமாயிருக்கும். உரை, மேற்கண்ட இருவகையளவைகளுக்கும் எட்டாதனவாயிருக்கும், உண்மைப் பொருள்களை அறிவதற்கு உதவிசெய்யும். குருடனது காட்சிக்கு உருவப்பொருள்கள் எவையும் அகப்படாமை பற்றி அவன் அப்பொருள்களை இல்லையென்பானாயின் அது மற்றையோரால் ஏற்றுக்கொள்ளப் பெறுவதாகுமா? கட்பொறியின்மை, உள்பொருளை இல்பொருளாக

அறிவிப்பதுபோல, அந்தக்கரண வலியின்மை, அருள்வலியின்மை ஆகியவை கருதல், உரையாகிய அளவைகளைக் கொள்ள விடாது தடுத்து, அவற்றாற் காணப்பெறும் பொருள்களை இல்பொருள்களாக்கிவிடும்.

பருமையும் நுண்மையுமாகவுள்ள பொருள்களின் உண்மைகளை, அளவைகள் கருவியாக நின்று உதவி செய்ய அறிந்து கொள்ளலாம். பருமைகள் அனைத்திற்கும் பருமையும், நுண்மைகள் அனைத்திற்கும் நுண்மையுமாயிருக்கும் கடவுட்பொருளை, அங்ஙனம் தருக்க நூல் அளவையினால் மட்டும், அறிந்து கொள்ள முடியாது. அதற்கு அவ்வளவைகள் ஏதோ ஒருவகையில் துணை செய்ய முடியுமேயன்றி, முற்ற முடியத் துணைசெய்ய மாட்டுவனவாகா. அளவைகள் கருவியாக நின்றுதவ, ஒருவாறு உணர்ந்து கொண்ட கடவுளை அக்கடவுளது திருவருளொன்றே முற்றமுடிய உணர்த்தியுதவும்.

"அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே"

என்ற அப்பரடிகள் திருவாக்கும்,

"காட்டும் திருவருளே கண்ணாகக் கண்டுபர
வீட்டின் மெய்ப்பொருளை மேவுநாள் எந்நாளோ"

என்ற தாயுமான அடிகள் திருவாக்கும், இங்கே நினைவு கூர்தற்குரியனவாகும்.

பருப்பொருளை மட்டுமே காட்டுகின்ற பிரத்தியட்சப் பிரமாணத்துக்கும், உயிரறிவின் எல்லைவரை செல்லுகின்ற அநுமானப் பிரமாணத்துக்கும், முழுதும் உணர்த்த மாட்டாத ஆகமப்பிரமாணத்துக்கும், அப்பாற்பட்டுக் கடவுட்பொருளிருப்பதனாலேயே, அப்பொருள் பற்றிய ஐயப்பாடு, பெரும்பாலானவர்களை விட்டு நீங்காமலிருந்து வருகிறது. இவ்வையப்பாட்டைத் தெளிவு செய்து, உண்மையுணர்த்தத் திருவுளங்கொண்ட திருமூலதேவநாயனார், தமது திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்தில் இருபத்து மூன்றாவது திருப்பாடலாக,

"வல்லவன் வன்னிக் கிறைஇடை வாரணம்
நில்என நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்என வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே".

என்பதை அருளித் தந்திருக்கின்றார்.

கடவுளுக்குள்ள எட்டுக்குணங்களுள் "சர்வ வல்லமையுடைமை" என்பதும் ஒன்று. எந்த வேளையிலும் காலம், கருவிகளை வேண்டாது, நினைவு மாத்திரையினாலேயே எதையும் செய்ய வல்ல ஆற்றல், இறைவனுக்குண்டு. எண்ணியவற்றை எண்ணியாங்கு முடித்துக் கொள்ளும் மற்றையோரனைவரும், அவ்வாறு முடிவதற்காக அரும்பாடு படுதலும், அதன் பயனாய் அரிதின் முடித்தலுமே எங்கணும் நிகழ்ந்துவரக் காண்கின்றோம்.

"நரியைக் குதிரை செய்வானும்
நரகரைத் தேவு செய்வானும்
விரதம் கொண்டாட வல்லானும்
விச்சின்றி நாறு செய்வானும்"

என்பது முதலாகிய அருள்வாக்குகள், கடவுளது சர்வவல்லமையை எடுத்து விளக்குகின்றன.

வேறு எவருக்கும் இல்லாத இணையற்ற வல்லமையை யுடையவர் முதற்கடவுள் என்பதைத், தீக்கடவுளைக் கடல் நடுவில் நிலைபெற வைத்திருக்கும் அவர் செயலொன்றினாலேயே நாம் தெரிந்து கொள்ளலாம். நீரும், நெருப்பும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட தன்மைகளையுடையன. நீர், நெருப்பை அவிப்பது; நீரால் அவிவது; அவிகின்ற நெருப்பை, அவிக்கின்ற தண்ணீரின் நடுவில் நிலை நிற்கும்படி கட்டளையிட்டு, அது நிற்கும் நிலையில் எவ்விதக் குறைபாடும் நிகழாமல் வைத்திருக்கும் கடவுளாற்றலை, எவ்வாறு அளவிட்டுரைக்க முடியும்?

"வடவாமுகாக்கினி" என்னும் பெயரையுடையதும், பெண் குதிரையின் முகமுள்ளதுமான நெருப்பு ஒன்று, கடலுக்குள் இருந்து, அதன் நீரைக் கரை கடக்க விடாது காவல் புரிந்து வருகின்றது. அந்த நெருப்பை, அங்கே நிற்குமாறு கட்டளையிட்டவர் கடவுள். நெருப்புக்குச் சூட்டையும், நீருக்குக் குளிர்ச்சியையும் குணங்களாக வழங்கிய கடவுளே, மாறுபட்ட குணங்களையுடைய அவ்விரு பொருள்களையும், உடன்கூடுமாறுவைத்து, அவற்றின் குணமாறுபாடுகள் நிகழாதிருக்கவும் செய்துள்ளார். இது அவரது பெருவல்லமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும் அல்லவா? இதனையே "வல்லவன் வன்னிக்கு இறையிடை வாரணம், நில் என நிற்பித்த நீதியுள் ஈசனை" என்று ஆசிரியர் திருமூலதேவர் அருளிச் செய்தார்.

எவரிடத்தும் விருப்பு வெறுப்பின்றி, அவரவர் செய்திக்குத் தகப் பயன் வழங்குவது ஆண்டவன் செயலாதலின் "நீதியுள் ஈசன்" என்று அவர் குறிக்கப் பெற்றார். கடவுளது வல்லமைச் செயல்களனைத்தும், நீதிநெறியில் நிகழ்வனவென்பதும், கடல் எல்லை கடவாமை முதலியனவும் நீதிநெறியின் பாற்பட்டனவே யென்பதும், உணரத்தக்கனவாம்.

இங்ஙனம் நீதிநெறியில் நிகழும் பேராற்றல் உள்ளமையினாலேயே, அவர் கடவுளருக் கெல்லாம் முதல்வராக விளங்குகின்றார். படைத்தலும், காத்தலுமாகிய தொழில்களைச் செய்யும் கடவுளராகியோர் முதற்பெருங் கடவுளும், சங்கார காரணருமாகிய சிவபெரு மானது ஆணையின் வழியே நிற்பவரென்பதை "மூவர் கோனாய் நின்ற முதல்வன்" என்று திருவாசகம் கூறும். அந்த முழு முதல்வரே இங்கு, "இறையவர் தம்முதல்" என்று குறிக்கப் பெற்றார்.

வல்லவனாகவும், நீதிமானாகவும், கடவுளர் தலைவனாகவும் விளங்குகின்ற சிவபெருமானது திருவருள், சங்காரத்தின் பின்னர் நிகழுவ தாகிய இருட்பொழுதிலும், சிருட்டியின் பின்னர் நிகழுவதாகிய பகற் பொழுதிலும், இடையீடின்றி உயிர்களுக்கு இன்பத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றது. உயிர்களின் வினைநுகர்ச்சிக் காலத்தில் திரோதான சத்தியைக் கொண்டு இன்பதுன்பங்களையும், அருள் நுகர்ச்சிக் காலத்தில் அருட்சத்தியைக் கொண்டு சிவபோகத்தையும் ஊட்டுவது ஆண்டவன் செயல்.

"அவனையகன் றெங்கின்றும்
ஆங்கவனும் எங்கும்
இவனையொழிந் துண்டாதல் இல்"

என்னுந் திருவருட்பயன், உயிர்களின் அறி விச்சை செயல்களுக்கு ஆதாரமாயிருப்பன, இறைவனின் அறிவிச்சை செயல்களே என்பதை உணர்த்துகின்றன. இங்ஙனம், எந்த நாளிலும் உடனிருந்து அருள்புரிகின்ற இறைவனை "இல்லை" என்று சொல்ல வேண்டாம் என்று, இத்திருப்பாடலின் இறுதிப் பகுதியில் ஆசிரியர் அறிவுரை அருளிச் செய்கின்றார்.

நலமே தழைக.

# மதிப்புரை

**ஸ்ரீவீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்யம்:**

இந்நூல், சென்னைக்கு வடமேற்கே 30 கல்தொலைவில் உள்ளதும், திருவள்ளூர் என வழங்குவதுமாகிய திருவுள்ளூர் ஸ்ரீவீரராகவ சுவாமி சந்நிதியின் ஸ்தலபுராணம் கூறுகின்றது. திருவள்ளூர் என வழங்கும் இத்தலம், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்றது. 'எங்கள் அப்பன் எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே' என்றும், 'அந்தரத்தில் வாழும் வானோர் நாயகனாய் அமைந்த இந்திரற்கும் தம்பெருமான் எவ்வுள் கிடந்தானே' என்றும் எல்லாம், திருமங்கையாழ்வார் அங்குள்ள ஸ்ரீவீரராகவப் பெருமாளைப் போற்றியுள்ளார். ஆழ்வார்கள் உவந்தது மட்டுமின்றி, வைணவ சமயப் பூர்வாசாரியர்களும் போற்றி உவக்கும் பெருமை, இத் திருப்பதிக்கு மேலும் சிறப்பைத் தருகின்றது.

மார்க்கண்டேய புராணத்திலுள்ள இத்தலத்தின் வரலாற்றிற்கு, அத்திப்பட்டு ஸ்ரீஅழகிய சிங்கர், மணிப்பிரவாள நடையில் சிறந்ததொரு வியாக்கியானம் அருளிச் செய்துள்ளார். அதனைத்தழுவி, மார்க்கண்டேய புராணத்தின் வடமொழி மூலத்துடன், காலத்திற்கேற்ற முறையில் எளிய நடையில், விரிவும் சுருக்கமும் இன்றி, அனைவரும் உவக்கும்படி உரைவகுத்து, ஸ்ரீபுரிசை நடாதூர் கிருஷ்ணமாசாரிய சுவாமிகள் அவர்கள், இந்தத் தலபுராணத்தினைச் சிறப்புறப் பதிப்பித்திருக்கிறார்கள். இத்தலத்தின் திருப்பதிகத்தையும், சுவாமி ஸ்ரீதேசிகன் அருளிய கிங்க்ருஹேசஸ்துதியையும், உரையுடன் இந்நூலிற் சேர்த்திருப்பது, சாலவும் நன்மை பயக்கும். கண்கவரும் எழில்மிக்க சிறந்த படங்கள் பல இதன்கண் இடம்பெற்று, இந்நூலின் சிறப்பை மிகுதிப்படுத்துகின்றன. இது பக்தர்களுக்கு மிகவும் பயன்படும் நூல்! 200 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 3 00/- கிடைக்குமிடம்: ஸ்ரீ எஸ். கிருஷ்ணசுவாமி, மோதிலால் தெரு, திருவள்ளூர், செங்கற்பட்டு மாவட்டம்.

—ஆசிரியர்.

# ஸ்ரீராமாயண ரஸப்ரவாகம்

(மகாவித்துவான். பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

இராமன் கூறிய சிபிச்சக்ரவர்த்தியின் இதிகாசம் :

அன்றியும், எங்கள் குலத்து இதிகாச மொன்று கேண்மின்; சிபிச்சக்ரவர்த்தி அரசாளுகையில் அவனது மேன்மைக் குணத்தைப் பரிசோதிக்கும் பொருட்டு இந்திரன் பெரும் பருந்தாகவும், யமன் சிறு புருவாகவும் வடிவமெடுத்து, அப் புருவைப் பருந்து துரத்திவர, அது சக்ர வர்த்தியைச் சரணமடைய, அன்னுன் அதற்கு அபயமளிக்க, பின்னே வந்த பருந்து 'என் இரையைக் கொடுத்திடு' என்று கேட்க, மன்னவன் 'அடைக்கலம் புகுந்தவரை ஆதரியாது விடுதல் அதி பாதக மாதலால் இதையன்றி எதைக் கேட்டாலுங் கொடுப்பேன்' என்ன, பருந்து 'இந்தப் புருவின் எடையளவு தசையை உன் உடம்பினின்று அரிந்து கொடு' என்றதற்கு வேந்தன் சம்மதித்து, உடனே தனது உடம்பிலுள்ள உறுப் புக்களை யெல்லாம் ஒவ்வொன்ருக அறுத்து வைத்தும், எடை ஒவ்வாதது கண்டு தானே தராசுத் தட்டிலேறி எடையை நிறைக்க, உடனே அத்தேவர்கள் பிரத் யட்சமாகிச் சக்ரவர்த்தியை மிகக் கொண் டாடி, அவனது உடம்பு முன்போல நிறை வுறும்படி வரமளித்துப் போயினரென்று கேட்டிருந்ததுண்டு;

அன்ன பெருமை வாய்ந்த சக்ரவர்த்தி யின் வமிசத்திற் பிறந்த யான் இப்போது உங்களாலோசனையைக் கேட்டுச் சரணுக தனைக் கைவிடுதல் தகுதியன்று; இவனைச் சேர்த்துக்கொள்வதனுல் எவ்விதமான அனர்த்தம் விளைவதாயினும், அஃதெனக் குப் புகழாகுமே யன்றிப் பழியாகாதாத லால், இவனை நான் கைவிடமாட்டேன்.

இராமபிரான் கூறிய புருவின் கதை :

ஒரு காட்டில் வேடனெருவன் ஒரு பெண் புருவைப் பிடித்துத் தனது கைக்கூட்டி லிட்டுக்கொண்டு திரிகையில், பெருமழை வந்து இருட்டிக்கொள்ள, அப்போது அவ் வேடன் நடுக்கலெடுத்து ஒரு மரத்தின் சார்பில் வருந்தி நிற்க, அச்சமயத்தில் அம்மரத்தின் மேலுள்ள ஆண்புரு தனது பெட்டையின் பிரிவையாற்ருது புலம்ப, அவ்வேடனது கைக்கூட்டில் அகப்பட்டி ருந்த பெண்புரு அப்புலம்பலைக் கேட்டு வருந்தி 'இதோ நான் இவ்வேடனது கைக்கூட்டில் முற்பிறவியின் தீவினைப் பயனுகச் சிறைப்பட்டுக் கிடக்கிறேன்; இதற்காக நீ வருந்தவேண்டா; நமது இருப்பிடம் வந்து வருந்தி நிற்கிற இவ் வேடனுக்குக் குளிர் முதலாகிய துன்பத்தை நீக்கி உதவிபுரிய வேணும்' என்றுகூற, அதுகேட்ட ஆண்புரு அவ்வேடனுக்கு மனப்பூர்வமாக உபசாரஞ் செய்ய விரும்பி, கொள்ளியொன்றை யெடுத்து வந்து சருகு களின் மேல்வைத்து மூட்டி வேடனைக் குளிர்காயுமாறு சொல்லி, பின்பு அவன் பசியால் வருந்துவதைப் பார்த்து 'அப்பா! நான் பறவையாயிருப்பதனுல் உன் பசிக்கு ஏற்ற பொருள் என்னிடமில்லை; துன்பத் திற்கு இடமாய் எதற்கும் உதவாம லிருக்கிற இவ்வுடலைக் கொண்டு உன் ஆத்மாவைத் திருப்தி செய்துகொள்' என்று சொல்லிக் கொண்டே, மூண் டெரிகிற நெருப்பில் ஆனந்தத்தோடு விழுந்து அவனுக்கு உணவாகி முடிந்த தென்கிற கபோதோபாக்கியானம், சுருதி களிலுள்ளது. ஓர் அற்பப் பிராணியாகிய புருவே தன்னிடம் வந்தடைந்தது காரண மாகத் தன் மனைவியைக் கவர்ந்ததையும் பாராட்டாமல், தன்னையும் கவரக்கூடிய வேடனெருவனுக்கு உடலையும் உயிரையுங் கொடுத்து உதவி செய்த தென்ருல், பேரறிவாளரென்று பேர்வைத்துக்கொண் டிருக்கிற நாம், நமக்கு யாதொரு தீங்கு மிழைக்காமல் நம்மைச் சரணமென்றடைந் துள்ள இவனை 'ஒருகால் நமது உயிர்க்கு ஏதேனும் தீங்கு நேருமோ? என்று அஞ்சிக்

காவாது கைவிடுதல் தகுதியோ? தகாது; இவனை எவ்வகையிலும் கைவிடமாட்டேன். ஒருவன் செய்த நன்றியை மறந்த பாவியும், உண்மைப் பரம்பொருளான கடவுளை இல்லையென்று சாதிக்கின்ற நாத்திகனும் போலவே, சரணமடைந்தாரைப் பாதுகாவாதவனும் நரகத்தில் நிச்சயம் வீழ்ந்து வருந்துவானென்பது நூற்கொள்கையாயிருக்க, நானோ இவனைக் கைவிடுவேன்? அரக்கரைக் கொல்வதாக நான் தேவர்கட்கு அபயமளித்தது இராவணன் சீதையைக் கவர்வா னென்பதை முன்னமே அறிந்தன்று; நம்மைச் சரணமடைந்தாரைக் காப்பதே நமது கடமை என்ற கருத்தினுலேயே யாகும்; தண்டகாரணிய வாசிகளான முனிவர்களிடத்து ''அடைக்கலம் புகுந்தவர்களைப் பாதுகாப்பதே எனது கடமை'' என்று அப்போது சொல்லிவிட்டு, இப்போது அதற்கு மாருக அபயம் வேண்டிவந்த இவ்விபீடணனைக் கைவிடுதல் எனக்கு உற்றதாகுமோ? ஆகாது; ஆதலால் இவனை நான் கைவிட கில்லேன்.

வியாக்ர வாநர ஸம்வாதத்தின் அநுவாதம் :

காட்டிலே திரிகின்ற வொரு வேடனைப் புலி துரத்திற்று. அவன் அதற்கு அஞ்சியோடிச்சென்று ஒரு மரத்தின் மீதேறிக் கொள்ள, அங்கிருந்த வொரு பெருங் குரங்கு நல்வரவு கூறி ஆதரித்து வைத்துக் கொண்டது; மரத்தின் மீது ஏறமாட்டாத புலியானது மரத்தடியை விட்டுப் பெயராது நின்றது. நிற்கையில் அவ்வேடனது மடியில் கிடந்து உறங்கிப்போயிற்று குரங்கு; அப்போது புலி வேடனை நோக்கி 'இக்குரங்கை நீ கீழே தள்ளிவிடு, இதைக் கொண்டு என் பசியைத் தீர்த்துக்கொள்வேன்; உன்னை ஒன்றுஞ் செய்யாது விட்டு விடுவேன்' என்றுகூற, வேடன் அப்படியே குரங்கைக் கீழே தள்ளிவிட்டான். புலியானது குரங்கை நோக்கி 'எனக்கு நரமாம்ஸத்தில் தான் அதிக விருப்பமுள்ளது; உன்னைக் கூற்றின்வாய் விழத்தள்ளின வேடனை எனக்கு நீ இரையாக்கி விடுவாயாகில் உனக்கு நான் உயிர்ப்பிச்சை தந்திடுவேன்' என்று சொல்ல, அக்குரங்கும் அங்ஙனமே செய்கிறேனென்றிசைந்து மரத்தின் மீதேறிற்று; வேடன் தன்னுயிர் தொலைந்ததாகவே திண்ணமாக எண்ணி அஞ்சி நடுங்கிக் கிடந்தான்; குரங்கு அவனை நோக்கி 'அஞ்சேல் அஞ்சேல்!' என்று அபயமளித்து, புலியை நோக்கி 'என்னிடம் தேடிவந்தடைந்த சரணுகதனை நானோ விட்டிடுவேன், விடுவேனென்று கனவிலும் நினையாதே' என்று சொல்லி வேடனைக் காப்பாற்றியதென்று கேட்டிருக்கிறோம்; அக்குரங்கிற்குள்ள மதிகூடவா நமக்கில்லாமற் போகவேண்டும்! ஒருகாலும் இவனை நான் கைவிடேனென்று சொல்லித் தன் உறுதியை வெளியிட்டனன் இராமபிரான்.

ஆக, இராமபிரான் அடைக்கலம் புகுந்தவர்களைக் காத்தருளுந்திறத்தில் திடமான விரதமுடையவ னென்பதை, அப்பெருமானுடைய திருமுகப்பாசுரங்களினுலும் சரிதைகளினுலும் நிருபித்தோமாளுேம்.

சாரித்ரேண ச கோ யுக்த : ?

வான்மீகி நாரத ஸம்வாதத்தில் ஆறு வினுக்கள் மேலே விவரிக்கப்பட்டன. இனி சாரித்ரேண ச கோ யுக்த:? என்கிற ஏழாவது வினுவினை விவரணம் செய்வோம்.

சாரித்ரமென்னுஞ் சொல்லின்
பொருள் விளக்கம் :

சாரித்ரமாவது நன்னடத்தை, நல்லொழுக்கம்; அதோடு கூடியவன் யாவன்? என்பது வினு. நல்லொழுக்கமென்பது பொதுப் பெயர். பெரியார்களைப் பணிதல், தந்தை, தாய்பேணுதல், சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை வழுவறச் செய்தல், தெய்வபக்தியுடைமை, பிறரை நலியாமை, பிறர் பொருள்—பிறர் தாரமென்றிவற்றைக் கவர நெஞ்சாலும் நினையாமை என்று, இனையவொழுக்கங்களுக்குப் பொதுப்படையான பெயர் சாரித்ரமென்பது. சரித்ரமென்னுஞ் சொல்லே சாரித்ரமென நீண்டது. இவையெல்லாம் நாம் இராமபிரான் பக்கலில் செவ்வனே குடிகொண்டிருக்கும் அழகை முறையே அநுபவிப்போம்.

பெரியார்களைப் பணிதல் :

உலகிலுள்ள மனிதர்களை நாம் மூன்று வகுப்பாகப் பிரிக்கலாம்; நம்மைவிட மிகப் பெரியார்; நம்மோடொத்தவர், நம்மை விடத் தாழ்ந்தவர்கள் என்று. இம்மூவகுப்பில் நம்மைவிடத் தாழ்ந்திருப்பவர்கள் சிலரோ பலரோ இருப்பதாகக் கொள்ளுவதற்கு நாம் உரிமையுடையோமல்லோம்; ஏனெனில் எல்லாரையுங்

காட்டிலும் நாமே மிகச் சிறியோம் என்று அநுசந்தானம் செய்வதே நமது கடமையாகுமாதலால், நம்மைவிடச் சிறியார் சிலர் பலருளரென்று கொள்ளுதல் தகுதியற்றதேயாம்; ஆயினும், ஸம்ஸார வாழ்க்கையில் நம்முடைய மக்கள், மற்றும் பணிவிடைக்காரர்கள் முதலானோரை நம்மைக் காட்டிலும் பெரியவர்களாகவோ நம்மோடொத்தவர்களாகவோ நாம் நினைப்பதில்லை, நினைப்பது தகுதியுமன்று; ஆகவே நம்மிலுங் கீழ்ப்பட்டவர்கள் என்கிற வொரு வகுப்பு கொள்ளத்தக்கதேயாம். ஆகவே, உயர்ந்தவர்கள் ஒத்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று மூன்று வகுப்புக்கள் உள்ளனவாகக் கொள்வதில் குறையில்லையென்பர்; இராமபிரான் உண்மையில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியாகையாலே, உலகமெல்லாம் அவனுக்கு அடிமைப்பட்டதான முறையில் கீழ்ப்பட்டிருக்குமேயல்லது அவனிலும் மேம்பட்டவரோ அவனோடொத்தவரோ ஒருவருமிருக்க ப்ரஸக்தியில்லை. ஆயினும் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று மானிடவேடம் பூண்டு நடிக்கும் இவ்வவதாரத்தில் தன்னில் மிக்காரையும் தன்னோடொத்தாரையும் திருவுள்ளத்திற் கொண்டிருப்பது காண்கிறோம். பெரியாரைப் பணிதல என்கிற பரமதர்மத்தை யனுட்டித்துக் காட்டுதற்கென்றே இராமபிரானது திருவவதாரமென்று தெரிகிறது. இராமன் செய்திருக்கிற காரியம் எதுவாயினும் பெரியாருடைய நியமனத்தைச் சிரமேற்கொண்டே செய்ததாகக் காண்கிறது. இதற்குச் சார்பாகச் சில விஷயங்களை யீண்டெடுத்துக் காட்டுவோம்;

### இராமன் செய்வனவெல்லாம் பெரியார் சொற்படியே;

இராமன் செய்த செயல்களில் முதற் செயல் தாடகாவதம். பெண் கொலை பெரும் பாதகமென்று உலகம் பகருர். இஃது இராமபிரான் அறியமாட்டாததன்று. அறிந்திருந்தும் இப்பெண் கொலையை ஏன் செய்தனன்? சூர்ப்பணகைக்குச் செய்த அங்கபங்கத்தைத் தாடகைக்குச் செய்துவிட்டு, சூர்ப்பணகையை முடித்திருக்கலாமே; அவளை உயிரோடு விட்டதனுல் அல்லவோ, அவள் இலங்கைக்கேகி இராவணனைத் தூண்டி ஸீதாபஹரணம் முதலிய கஷ்டங்களை விளைத்தனள். அவளுயிரையே மாய்த்திருந்தால் ஒரு வருத்தமுமில்லையே. தாடகையை அங்கபங்கஞ்செய்து துரத்தியிருந்தாலும் விச்வாமித்ர முனிவருடைய வேள்வி இனிது முடிவு பெற்றிருக்குமன்றே! அவளைக் கொலை செய்திருக்கவேண்டிய அவசியமில்லையே. இப்படி, பொருந்தாத செய்கைகளை இராமன் ஏன் செய்தனன்? என்று இத்தகைய கேள்விகளைப் பலர் கேட்பதுண்டு. விச்வாமித்ரமுனிவர் தாடகையைக்காட்டி 'இவளைக் கொலைசெய்' என்று கட்டளையிடவேதான், அது பெண் கொலையென்றும் பாராது செய்தனன். சூர்ப்பணகை வந்தகாலத்து அவளை வதை செய்யுமாறு நியமிக்க அங்கு ஒரு பெரியார் யாருமில்லாமை பற்றியே, அவளைக் கொலை செய்யாது அங்கபங்கத்தோடு நிறுத்தினன். இதனுல், பெரியார்களைப் பணிதலும் அவர்களது கட்டளையின்படி நடத்தலுமே இராமனது விரதம் என்று நாம் நன்கு அறியலாம்.

### இராமனது அருமையான வாய்மொழிகள் இரண்டு காட்டுதல் :

அன்றியும், இராமன் விச்வாமித்ர முனிவரை நோக்கி "இமௌஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்?" என்று கூறியுள்ளதும் குறிக்கொள்ளத் தக்கது: 'முனிவர் கோமானே! நானும் என் தம்பி இலக்குமனும் தேவரீர் ஏவின பணிவிடைகளைச் செய்யக்காத்திருக்கின்ரோம்; நாங்கள் செய்யக்கூடியதைத் திருவுள்ளமானபடி கட்டளையிட்டருளலாம்' என வேண்டுதல் மேலே குறித்த ச்லோகத்திலுள்ளது. இதனுல் பெரியாரைப் பணிதலிலேயே இராகவன் மிகுந்த குதூஹலம் வாய்ந்தவனென்பது நன்கு புலனுகும்.

இங்ஙனமே பாலகாண்ட கதையொன்று காட்டினதுபோல, முடிவான யுத்தகாண்ட கதையொன்றுங் காட்டி நிற்போம். இராவணவதம் முடிந்து அவனுக்கு ஈமக் கடனும் செய்தற்ற பின்பு விபீஷணுழ்வான் இராமனை நோக்கி வேண்டிக்கொண்டான்: "ஸ்வாமி! இலங்கையிற்புகுந்து இனிது வாழ்ந்து நன்னீராடி நல்லுடையுடுத்துச் சிரம பரிஹாரம் செய்வனே செய்து கொண்டு புறப்படலாம்; இவ்வளவு அனுக்கிரகம் செய்தருளவேணும்" என்ருன்; அதற்கு இராமன்,

"ந மே ஸ்நாநம் பஹு மதம்
வஸ்த்ராணி ஆபரணநி ச,
தம் விநா கைகயீபுத்ரம்
பரதம் தர்மசாரிணம்"

(தம்பி பரதன் துடித்துக்கொண்டிருக்க எனக்கு இங்கு நீராட்டமோ, பீதாம்பரம் அணிதலோ, திருவாபரணம் பூணுதலோ, எதுவும் எனக்கு ருசிக்கமாட்டாது) என்று சொல்லி, பரதனுக்குக் கெடுவிட்டுக் கொடுத்திருந்தபடி பதினன்கு வருடம் பூர்த்தியானதையுங் கொண்டு உடனே அயோத்திக்குப் புறப்பட்டேயாக வேணு மென்று சொல்லி விபீடணன் கொணர்ந்த புஷ்பக விமானத்திலேறி, அயோத்திக்குச் செல்லுகையில் பரத்வாஜ முனிவரின் ஆச்சிரமத்தில் அவரைக் காணநேரிட்டது; அப்போது அம்முனிவர் இராமனை நோக்கி, 'இன்று நீ இங்கு நான் செய்கிற ஆராதனையை ஏற்றுக்கொண்டு நாளைக்குத்தான் அயோத்தி செல்லவேண்டும்' என்று கட்டளையிட, அதனை மீற மாட்டாது அதற்குக் குறுக்காக ஒரு பேச்சும் பேசாமல் அங்ஙனமே இசைந்திருந்தனன் என்பது யுத்த காண்டம் நூற்றிருபத்தேழாவது ஸர்க்கத்தில் பேசப்பட்டுள்ளது. "பரத்வாஜஸ்ய சாஸநாத்" என்று, அப்பெரியாருடைய கட்டளை இராமனுக்கு மீறவொண்ணுத தாயிருந்தது. இப்படி ஸ்ரீராமாயணத்தில் "பிதுர்வசந நிர்தேசாத்" என்றும், "விச்வாமித்ரஸ்ய வசநாத்" என்றும், "அகஸ்த்ய வசநாச்சைவ" என்றும், "பரத்வாஜஸ்ய சாஸநாத்" என்றும், பல பிரமாணங்களினுல் இராமனது செயல்களுக்கெல்லாம் பெரியார்களின் நியமனமே காரணமாகக் காட்டப் பட்டுள்ளது காண்க.

இராமனது நடத்தையில் சங்காபரிஹாரம் :

இதற்குமேல் ஒரு சிறு கேள்வி தோன்றும்; இராமன் இப்படி பெரியார்களின் சொல் தவருது நடப்பவனுயின் சித்திர கூடத்திற்கு வந்துசேர்ந்த வஸிஷ்டபகவான் ஜாபாலிமுனிவர் முதலான பெரியோர்கள் அயோத்திக்கு மீண்டுவரும்படி வன்மையாகக் கட்டளையிட்டும் இராமன் அதற்கு உடன்படாதது ஏன்? என்று. இதற்குக் கேண்மின். பெரியார்களில் தலைவரான தந்தையார் கட்டளையினுலல்லவோ இராமன் வனவாசம் புறப்பட்டது;

"ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீ போய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியப் புனல்களாடி
ஏழிரண் டாண்டின் வாவென்று"

அவர்களிட்ட கட்டளையை நிறைவேற்றியாகவேண்டியது ப்ராப்தம். இதற்கு மாருக வேறு பெரியார் வேறு கட்டளையிட்டால் அதனையும் நிறைவேற்றுவது நியாயமாகாது.

அப்படியானுல், வஸிஷ்டர் ஜாபாலி முதலான பெரியாருடைய பேச்சுக்கிணங்கி அயோத்திக்குத் திரும்புதலும், அயோத்தி சேர்ந்தபின் மற்றுஞ் சில பெரியார் வந்து 'இராமா! இப்படி நீ திரும்பிவந்தது தகுதியன்றே, தந்தை தாயர் கட்டளையை முற்றும் நிறைவேற்ருது மீண்டு வந்துவிடலாமா? திரும்பவும் கானகமே செல்வாயாக' என்று கூறினுல் அப்பெரியாரது வார்த்தைக்கிணங்கி மறுபடியும் கானகம் புறப்படுதலும், மீண்டும் அங்குச் சில பெரியார்வந்து வேண்ட (அல்லது) நியமிக்க அயோத்திக்குத் திரும்புதலுமாய் ஒரு வியவஸ்தையில்லை யாகுமன்ருே! ஆகவே கீழே செய்த ஆக்ஷேபம் யுக்தமன்று.

இராமபிரானது மாத்ருபக்தி :

சாரித்ர மென்பதற்குப் பொருளாக நாம் கூறியவற்றில் முதற்பொருளை இவ்வளவாக விவரித்தோம். இனி இரண்டாவது பொருளான தந்தை தாய்ப் பேணுதல் என்பது தனிப்பட விவரிக்க வேண்டாததாயினும் சிறிதே விவரிப்போம். இராமனுக்குத் தந்தையாரிடத்துப் பக்தி அபரிமிதமானது. உபநிஷத்தில் "மாத்ரு தேவோ பவ" என்று சொல்லிப் பிறகே "பித்ருதேவோபவ" என்று சொல்லியிருத்தலால் பித்ரு பக்தியிற் காட்டிலும் மாத்ருபக்தியே மிகச் சிறந்து விளங்கும் இராமன் பக்கலில். அதிலும் பெற்ற தாயான கௌஸல்யையிலும் மாற்றுத் தாயான கைகேயி இடத்தில் அதிக பக்திவாய்ந்தவன். இஃது எங்ஙனே தெரிகின்றதென்னில், வநவாஸஞ் செய்துகொண்டிருக்கையில் இளையோன் அடிக்கடி கைகேயியைக் கடிந்து பேசுவன். பரதாழ்வானுடைய ப்ரசம்ஸையை இராமபிரான் செய்யுமளவில்

''இப்படி மஹாகுணசாலியான பரதனுக்குக் கொடிய பாதகியான கைகேயி எங்ஙனம் மாதாவாய் வாய்த்தாளோ? என்று பேசத் தொடங்கி அந்த பரத ப்ரசம்ஸையைக் கைகேயி நிந்தனையில் கொண்டு முடிப்பது லக்ஷ்மணனது வழக்கம். அப்போது இராமன் சொல்லும் வார்த்தை யாதெனில்,

''ந தேம்பா மத்யமா தாத!
கர்ஹிதவ்யா கதஞ்சந,
தாமேவ இக்ஷ்வாகு நாதஸ்ய
பரதஸ்ய கதாம் குரு''

என்றே சொல்லுவது. ''லக்ஷ்மணா! நீயோ ஒரு விதத்திலும் கைகேயியை நிந்திக்கலாகாது; இக்ஷ்வாகு குலதிலகனான நம் தம்பி பரதனுடைய கதையை நீ எவ்வளவு சொன்னாலும் அவ்வமுதத்தையே செவியாரப் பருகுவேன்'' என்பது மேலெடுத்த சுலோகத்தின் கருத்து. இதனால் மாத்ரு பக்தி நன்கு விளங்கும்.

சாரித்ரமாவது தெய்வபக்தியுடைமை :

இனி, தெய்வ பக்தியுடைமையாகிற சாரித்ரம் விவரிக்கப்படுகிறது. ஸ்ரீமந் நாராயணமூர்த்தியாகிற பரதெய்வமே இராமனாக அவதரித்திருக்கச் செய்தேயும் லோகஸங்க்ரஹத்தை யுத்தேசித்து இராமன் தேவதாராதனம் செய்துகொண்டிருந்தது ஸ்ரீராமாயண ப்ரஸித்தம். இக்ஷ்வாகுவம்சத்தில் அநாதி காலமாக ஸ்ரீரங்கநாதனுடைய திருவாராதனம் நடந்துவந்து அந்தத் திருவாராதனத்தை இராமபிரானும் குறையற நடத்திவந்து, பட்டாபிஷேக ஸமயத்தில் பலர்க்கும் பரிசளிக்கும்போது அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தை விபீஷணாழ்வானுக்குப் பரிசளித்ததாக ஸ்ரீராமாயணத்தினால் நன்கு தெரியவருகிறது. அயோத்யாகாண்டத்தில் (6—1) ''ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்'' என்றுள்ளது. யுவராஜ பட்டாபிஷேகத்திற்கு உறுப்பாக ஸ்ரீராமனும் ஸீதையும் நாராயணனைத் தொழுததாகச் சொல்லிற்று. அடுத்தபடியாக ''த்யாயந் நாராயணம் தேவம்'' என்றும் சொல்லிற்று. இங்கு நாராயணனென்றது தனக்கு ஆராத்ய தேவதையான ஸ்ரீரங்கநாதனையே யென்பர் பூருவர்.

பிறரை நலியாமையாகிற சாரித்ரத்தின் விவரணம் :

இனி, பிறரை நலியாமையாகிற சாரித்ரம் கேண்மின்; இளம் பிராயம் பிடித்துத் தாடகாதாடகேய கரதூஷண லங்கேச்வராதி நிரஸனங்களை அபரிமிதமாகச் செய்திருக்கின்ற இராமபிரானிடத்தில் பிறரை நலியாமையென்னுங் குணம் நிரூபிக்க முடியுமோவென்று சிலர் நினைக்கக்கூடும். தண்டிக்கத்தக்க குற்றவாளர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்ற அரசனையும், நோய் தீர்வதற்காக நோயாளிகளை சஸ்த்ரக்ஷாரஅக்னிகருமங்களினால் துன்புறுத்துகின்ற மருத்துவனையும், பரஹிம்ஸா சீலர்களாகச் சொல்லுவார் யாருமில்லையன்றோ. அப்படியே ''விநாசாய சதுஷ்க்ருதாம்'' என்றும், ''மண்ணின் பாரம் நீக்குதற்கே'' என்றும் சொல்லுகிறபடியே, துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்கென்றே திருவவதாரம் செய்தருளின பெருமான் பிறரை நலிவது குற்றத்தின்பாற்படாது. காரணமின்றிப் பரஹிம்ஸை செய்வதே பிரபல தோஷமாகக் கருதப்படுகின்றது. ''வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித:'' என்று அயோத்யாநகர வாஸிகள் ஒரு மிடறாகக் கொண்டாடினபடி, பிறர் துயருறக்கண்டு ஐயோவென்றிரங்கு மியல்வினனான இராமனுக்குப் பிறரைத் துயருறச் செய்வதாகிற குற்றம் வந்துபுக ப்ரஸக்தியேயில்லை.

சுகனென்னும் அரக்கன் கடற்கரையிலே ராமஸைன்யத்தில் வந்துபுகுந்து சில விஷமங்கள் செய்ய, வானரமுதலிகள் அவனை வதைக்கப்புக, கருணாமூர்த்தியான இராமபிரான் அவனை விடுவித்தருளினது யுத்த காண்டம் இருபதாவது ஸர்க்கத்தில் விசதம்.

இராமனுடைய ஏகதாரவ்ரதமாகிற சாரித்ரத்தின் சிறப்பு :

இனி, பிறர்பொருள் தார மென்றி வற்றை நெஞ்சாலும் நினையாமை யென்னும் சாரித்ரத்தை இராமனிடத்து நாம் விவரிக்க வேணுமோ? வான்மீகி ராமாயணம் ஆரணிய காண்டத்தில் ஒன்பதாவது ஸர்க்கம் முழுதும், இராமபிரானை நோக்கிப் பிராட்டி கூறும் வார்த்தைகள் மலிந்தது. அதில் இராமபிரானுடைய பிரமசரியமெனும் விரதத்தைப்பற்றி (அதாவது ஏகதாரவிரதத்தைப் பற்றி)ப் பிராட்டியே மிகமிகக் கொண்டாடிக் கூறுகின்ருள். உலகில் பொய் சொல்லுகை, பிறரை நலிகை, பிறர்பெண்டிரைக் காதலிக்கை என்னும் இம் மூன்று குற்றங்களுக்குத் தப்பிப் பிழைப்பது அரிதென்றும், பொய் சொல்லுகையும், பிறர் பெண்டிரைக் காதலிக்கையும் இராமனிடத்துச் சிறிதும் கிடையாதென்றும் உகந்து கூறுகின்ருள் ஸீதை. விசேஷித்துப் பிறர் பெண்டிரைக் காதலிக்கை சிறிதும் கிடையாதென்பதை நாலைந்து சுலோகங்களினுல் அடுத்தடுத்துச் சொல்லியுள்ளாள். இராமனுடைய ஜிதேந்த்ரியத்வத்தை மற்றையோர் சொல்லுவது கிடக்க; பிராட்டி திருவாக்கினுல் இப்படிக் கொண்டாடிக் கூறியிருப்பதுதான் விசேஷம்.

(தொடரும்)

## சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி வகுப்பு

திருத்தவத்துறை, (லால்குடி).

சமய நெறி பரப்பும் நன்னேக்குடன் சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி வகுப்பு, லால்குடி தம்பாச்சியாப்பிள்ளை சத்திரத்தில், 19—5—68ம் தேதி முதல் 8—6—68ம் தேதி முடிய, 21 நாட்களுக்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நாள்தோறும் சைவ சித்தாந்த சாத்திர விளக்கமும், சைவத் திருமுறை விளக்கமும் நிகழும். 'சித்தாந்தக் கலைச்செல்வர்' காஞ்சிபுரம் திரு க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த சிவஞான சித்தியார் என்னும் சாத்திரப் பகுதிக்கு விளக்கம் காலையிலும், தருமபுரம் மகா வித்துவான் திரு சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் ஆளுடைய பிள்ளையார் அருள் வரலாறு குறித்த தோத்திரப் பகுதிக்கு விளக்கம் மாலையிலும் அளிப்பதற்கு, அன்புடன் இசைந்துள்ளார்கள்.

தமிழ் வித்துவான் புலவர் பட்டம் பெற்றவர்களும், தமிழ் எம். ஏ., பட்டம் பெற்றவர்களும், இப்பயிற்சியில் கலந்து கொள்ளத் தகுதியுடையவராவர். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோருக்கு உறையுளும், இருவேளை உண்டியும் கட்டணமின்றி அளிக்கப்படும்.

தகுதியுடையோர், விரைவில் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்க !

திரு ஜி. வரதராஜ பிள்ளை, பி. ஏ.,
எண். 7, வடக்கு வீதி, லால்குடி,
திருச்சி மாவட்டம்.

—ஆசிரியர்

# மதிப்புரைகள்

(1) **சித்தாந்தத் தெளிவியல் ;** இந்நூல் தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி மகாவித்வான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களால் எழுதப்பெற்று, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்ரமண்ய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின், 'திருக்கை வழக்கம்' ஆக, சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கில் வழங்கப்பெற்றதாகும்.

தமிழகத்திற்குச் சிறப்பாக உரிய சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினை இந்நூல் எளிய இனிய நடையில், தெளிவான முறையில் விளக்கி உணர்த்துகின்றது. பொது இயல் பதியியல் பசுஇயல் பாசஇயல் சாதனஇயல் பயனியல் என்னும் தலைப்புக்களில் பலபகுதிகளாக அமைந்துள்ளது. கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள்களைப்பற்றிப் பல்வேறு மதங்கள் கூறும் கொள்கைகளையும் அவைபற்றிய சைவசித்தாந்தக்கொள்கைகளையும் தடைவிடைகளுடன் இந்நூல் செவ்விதின் உணர்த்துகின்றது. நல்ல தூய செந்தமிழ் நடையில், குறியீட்டுச் சொற்களும் சொற்றொடர்களும் விரவாமல், இந்நூலை இயற்றியிருப்பது மிகவும் போற்றுதற்குரியது. இடையிடையே சிறந்த இனிய மேற்கோட்பாடல்கள் பல, இன்றியமையாது வேண்டப்படும் அளவுக்கு மட்டும் தேர்ந்தெடுத்துப் பொருத்தமாகக் காட்டப்பெற்றுள்ளன.

மிகவும் கடினமான பொருளை எத்துணை அளவுக்குச் சுவையும் தெளிவும் எளிமையும் அமைய ஆக்கித்தர முடியுமோ, அத்துணை அளவுக்கு ஆசிரியர் ஆக்கித் தந்துள்ளார். வாழ்நாள் முழுதும் சைவசித்தாந்த நூல்களை ஆராய்ந்தும் சிந்தித்தும் பேசியும் எழுதியும் ஈடுபட்டு அனுபவித்தும் திளைத்தவர்க்கன்றி, ஏனையோர்க்கு இங்ஙனம் எளிய இனிய தெளிவான நூலை எழுதுதல் இயல்வதன்று.

இச்சிறந்த நூலைத் தம் நுண்மாண் நுழைபுலனால் எழுதியளித்த ஆசிரியருக்கும், இதனை வெளியிட்டருளிய தருமையாதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்களுக்கும் தமிழகம் பெரிதும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. —ஆசிரியர்.

(2) **சைவசித்தாந்தம் :** இந்நூல் 'சித்தாந்தக் கலைச்செல்வர்' திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி., அவர்களால் எழுதப் பெற்று, தருமையாதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருக்கை வழக்கமாக, சென்னையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டு ஆராய்ச்சிக் கருத்தரங்கிற் கலந்துகொண்ட அறிஞர் பெருமக்களுக்கு வழங்குதற்காக, வெளியிடப்பெற்ற ஆங்கிலக் கட்டுரை நூலாகும்.

சைவசித்தாந்தம் என்பது என்ன ? அப்பெயரின் பொருட்குறிப்பு அதன் அடிப்படைக் கொள்கைகள் - மூவகைப் பாசங்கள் - முப்பொருள்களும் அவற்றின் தொடர்புகளும் - திருமந்திரமும் சைவசித்தாந்தமும்-வாழ்க்கையின் உயர்குறிக்கோள்-ஞானம்பெறும் நெறி-வரலாற்றுப் பின்னணியும் மூலங்களும்-சங்க காலமும் அதற்கு முன்பும்–பக்திப் பாடல்களின் தேவையும் அதன் நிறைவும்-சைவத்தின் பொற்காலம்-சைவசித்தாந்தக் கொள்கைகளின் தொகுப்பும் உறுதிப்பாடும்-சைவசித்தாந்தத்திற்கு அடிப்படையான வடமொழி மூலம்-கடவுள் இயல்-அவதாரம்பற்றிய கொள்கை - கடவுளின் வடிமும் வெளிப்பாடுகளும் - சைவசித்தாந்தம் உடன்படும் நூற்பிரமாணங்களின் பரப்பு-சைவசித்தாந்தத் தத்துவ இலக்கியங்கள்-சைவசித்தாந்தத் தத்துவ இலக்கியங்கள்-சைவசித்தாந்த ஞானாசிரியர்களின் வழி மரபு என்னும் பல வகைத் தலைப்புகளில், இந்நூல் சிறப்புற இனிது அமைந்துள்ளது.

சைவசித்தாந்தத்தினைத் தமிழ் முதல்நூல்களைப் பயின்று அறிந்துகொள்ள வாய்ப்பில்லாதவர்களுக்கு, இந்நூல் சைவசித்தாந்தத்தத்துவக் கொள்கைபற்றி ஓரளவேனும் உணர்ந்து கொள்ளுதற்குத் துணைபுரியும் ஒரு சிறந்த அறிமுக நூலாக அமைந்துள்ளது. சைவசித்தாந்தத் துறையில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுச் சொற்பொழிவாற்றியும், கட்டுரைகள் வரைந்தும், சைவசித்தாந்தம் வல்ல பேரறிஞர்களுள் ஒருவராக விளங்கிவரும் ஆசிரியரின் வடமொழி தென்மொழி ஆங்கிலப் புலமையும், கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும், ஆராய்ச்சித் திறனும் இந்நூலில் நன்கினிது விளங்குகின்றன, மிகவும் சிறந்த நல்ல பயனுள்ள நூல். —ஆசிரியர்.

**3. ஸ்ரீதேவி மந்த்ராட்சர மாலை :** இந்நூல் ஸ்ரீதேவியின் மூல மந்திர எழுத்துக்களைச்செய்யுட்களின் தொடக்கத்தில் வைத்துப் பாடப்பெற்றுள்ளது. மற்றும் ஸ்ரீகற்பகாம்பிகை மந்த்ராட்சர மாலை, அருளாட்சி ஸ்துதி, சரணஸ்துதி, ஸ்ரீமுண்டகக் கண்ணி அம்மன் நவமணிச்செண்டு ஸ்ரீவெள்ளீசர் ஸ்துதி, மீனாட்சி பஞ்சரத்தின ஸ்தோத்திரம் என்பனவும் இதன்கண் அடங்கியுள்ளன. திரு. ஐ. ஜி. இராமநாதன் அவர்கள் இயற்றியுள்ள இந்நூல் ஜகத்குரு, ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் அருளாசி பெற்றது. திரு. கி. வா. ஜகந்நாதன் முதலிய பேரறிஞர்கள் சிறப்புரை வழங்கியுள்ளனர். தேவியின் பக்தர்களுக்கு மிகவும் பயன்படும். விலை ரூபா 1-60. கிடைக்குமிடம்: கணேஷ் அண்டு கம்பெனி, சென்னை-17.

**4. திரு மருதமலை முருகர் திருவாறு :** கோவைக்கு அருகேயுள்ள மருதமலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் பற்றிய ஆறு பாடல்கள் கொண்டது. பொழிப்புரையும் அரும்பதவுரையும் தரப்பெற்றுள்ளன. திரு. ஐ. ஜி. இராமநாதன் அவர்கள் இயற்றியது. ஸ்ரீஆசார்ய சுவாமிகள் அவர்களின் அருளாசி பெற்றது. திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சாற்றுக்கவி தந்துள்ள இந்நூலைத் திரு. ஜி.கே. சுந்தரம் எம்.பி. அவர்கள் பதிப்பித்துள்ளார். கிடைக்குமிடம். ஸ்ரீ தேவி பதிப்பகம். சுண்டப்பாளையம். கோவை—2.

—ஆசிரியர்

## மாசிக் கடலாட்டுவிழா

இராமேசுவரம்: என்னும் இணையற்ற பெருந்தலத்தில் விளங்கும் புனித தீர்த்தங்கள் பலவற்றுள், ஜடாதீர்த்தம் என்பதும் மிக்க சிறப்புடையது. ஸ்ரீஇராமபிரான் இங்கு நீராடி, தமது சடைமுடியைத் தூய்மை செய்துகொண்டதாக ஐதிகம். இந்தத் தீர்த்தத்தில் மாசிக் கடலாட்டுவிழா, வழக்கம்போல் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீபஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளச் செய்யப்பெற்றனர். பல்லாயிரக்கணக்கான அன்பர்கள், விழாவின்போது இத்தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டு மகிழ்ந்தார்கள். (13-3-68).

—ஆசிரியர்.

# வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழில் வெளியிடுவதற்குக் கோபுரம் - மண்டபம் - திருக்குளம் முதலிய கோயிற் காட்சிகள், சிறந்த கலைச் சிற்பங்கள், சுவாமி அம்பாள் திருவுருவங்கள், ஆகியவற்றின் அழகிய படிமங்கள் (Blocks) வரவேற்கப் பெறுகின்றன. மூவண்ணப் படிமங்கள் (Tricolour blocks) சிறப்பாகப் பெரிதும் விரும்பி வரவேற்கப் பெறுகின்றன. அவைகள் நன்றிக் குறிப்புடன் வெளியிடப்பெறும்,

—ஆசிரியர்.

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

(திரு கே. பட்சிராஜன், பி.ஏ., பி.எல்., திருநெல்வேலி)

(முற்றொடர்ச்சி)

இங்ஙனம் எழுந்தருளியிருந்த உடையவர் வைஷ்ணவன் ஒழிக்கவேண்டிய முக்கியமான அபசாரங்கள் என்று பன்னிரண்டு அபசாரங்களைக்கூறி விளக்கி, அனைவரும் இவற்றைத் தவிருங்கள் என்று உபதேசித்தார். அவையாவன :— ஒரு வைணவனிடத்திலே ஜன்ம நிரூபணம், சரீர நிரூபணம், பாகநிரூபணம், ஆச்ரம நிரூபணம், அவயவ நிரூபணம், ஆலஸ்ய நிரூபணம், வாச நிரூபணம், பந்து நிரூபணம், ப்ரகாச நிரூபணம், ப்ரகார நிரூபணம், வர்த்தன நிரூபணம், தோஷ நிரூபணம் இவை.

1. ஜன்ம நிரூபணம் :— ஒரு வைஷ்ணவன் இன்ன சாதியைச் சேர்ந்தவன் என்று விசாரம் செய்து அதனடியாகக் குறை காணல்.

2. சரீர நிரூபணம் :— ஒருவரைப் புருடன், ஸ்த்ரீ, பாம்பு, பக்ஷி, விலங்கு மனிதன், அரக்கன் என்று அவர்கள் சரீரத்தையிட்டுக் குறைகாணல்.

3. பாக நிரூபணம் :— ஒருவனது வயதையிட்டு ஏற்றத்தாழ்வுகாணல்.

4. ஆச்ரம நிரூபணம் :— நால்வகை ஆச்ரமங்களையிட்டு ஏற்றத்தாழ்வு காணல்.

5. அவயவ நிரூபணம் :— ஒருவனது உடலில் உள்ள குறைகளைக் காணல்.

6. ஆலஸ்ய நிரூபணம் :— அவன் உடல் தளர்வு, வலிமைஇவைகொண்டு நோக்கல்.

7. வாச நிரூபணம் :— அவன் வாழும் ஊரே திவ்யதேசம் எனக்கொள்ளாது அவ்விடத்தையிட்டுக் குறைகாணல்.

8. பந்து நிரூபணம் :—அவன் ஸ்ரீவைஷ்ணவன் என்று மதியாமல் தன் பந்து முறையிலே உதாசீனம் செய்கை.

9. ப்ரகாச நிரூபணம் :— வாழ்வில் அவன் ஸ்தானம் நோக்கி ஏற்றத் தாழ்வு நோக்கல்.

10. ப்ரகார நிரூபணம் :— பகவத் கைங்கர்யத்திலே செய்யும் தொழில்களை வைத்து ஏற்றத்தாழ்வு கருதுதல்.

11. வர்த்தன நிரூபணம் :— அவர்கள் இருக்கை நடக்கை முதலிய ப்ரவர்த்திகளில் குறை காணல்.

12. தோஷ நிரூபணம் :— அவர்கள் திரிகரணங்களாலும் செய்யும் செயல்களில் அநுஷ்டானக் குறை, ஞானத்தில் குறை இவை காணல்.

இங்ஙனம் உள்ள குறைகளை ஒரு வைஷ்ணவன் பார்க்கக்கடவன் அல்லன். தன் வாக்கினால் குறைகளைக் கூறக் கடவனல்லன். வாசகத்தில் செய்த அபசாரத்துக்குப் பிராயச்சித்தம் கிடையாது. இவ்வபராதங்களைத் தான்பண்ணுகையும், தனக்கு உத்தேச்யனான ஆசார்யன் பண்ணினால் அவரை ஏகாந்தத்திலே கண்டித்துத் தவிர்ப்பியா தொழிகையும், அன்னியர் செய்தால் தடுத்து விலக்காதொழிகையும்,

ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவருக்கொருவர் அபராதம் பண்ணினுல் அவர்களை வணங்கிக் கண்டித்துத் தவிர்ப்பியாதொழிகையும் அவர்கள் தவிராத அளவிலே தான்பகவத் விஷயத்தில் சரணம் புகாதொழிகையும், ஸ்ரீவைஷ்ணவர் ஏகாந்தத்தில் பண்ணின அபராதங்களை வெளியில் பறையறைகையும், அபராதக்ஷாபணம் செய்தவர்களை ஒருகால் பாகவதாபசாரம் செய்தவர்தானே என நினைத்திருக்கையும் அபசாரங்களாம். இவற்றை உணர்ந்து இவை நிகழா வண்ணம் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் முயலக்கடவன் என அறிவுறுத்தினுர் உடையவர்.

குறித்த நாள் கிட்டியது. அன்று உடையவர் சகலவாத்யங்களும் முழங்கத் திருமஞ்சனம் கண்டருளி, திரு ஒற்றுடை சாத்திப்பின் திருப் பரியட்டம் சாத்தியருளினுர். சரீரவசதி யின்மையின் ஆசமனபூர்வமாக நித்யானுஷ்டானங்களை நடத்தியருளினுர். எனினும் அர்க்கியம் கொடுக்கும் இடத்தே தமது சரீர வலுவின்மையையும் பாராதே எழுந்து நின்றே கொடுத்தருளினுர். த்வாதச நாமங்களையும் தரிப்பிக்கப்பெற்றுத் திருப்பவித்திரமாலை, திருமாலை முதலியன சாத்தியருளினுர். தீர்த்தம் ஸ்வீகரித்தார். குரு பரம்பராபூர்வமாக ரஹஸ்யத்ரயத்தையும் (திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் மூன்றையும்) பொருளோடு தமக்குள்ளே அநுஸந்தித்தருளினுர். பெரிய பெருமாள் திருவடிகளைத் திருவுள்ளத்திலே நிலை நிறுத்தித் தெண்டன் ஸமர்ப்பித்தார். பின் முதலிகள் அனைவரையும் நோக்கி அவர்களிடம் விடைகொண்டார். ஆளவந்தாரின் திவ்யமங்கள விக்கிரகத்தை மனத்திலே தியானித்துக்கொண்டு ''நாகமிசைத் துயில்வான் போல் உலகெல்லாம் நன்கொடுங்க யோகணையும்'' பரவாஸுதேவரிடத்திலே பரமபக்தி மேலிட்டவராய், உடலெல்லாம்புளகித்தவராய் எம்பார் திருமடியிலே திருமுடியும் வடுக நம்பி திருமடியிலே திருவடிகளுமாகக் கண் வளர்ந்தருளித் தம்முடைய பூர்வாவதாரமான ஆயிரம் சுடர்வாய் அரவணையோடே நம்பி மூத்தபிரானைப் போன்று எம்பெருமானுரான இவரும் கூடியருளினுர்.

இவ்விடத்திலே குரு பரம்பராப்ரபாவம் என்ற நூலில் கீழ்வரும் இரு செய்யுள்கள் காணப்பெறுகின்றன.

''பின்பும் அன்பருடன் களித்த
சீர்ப்பெரும்பூதூர் எதிராசன்
இன்பமுடனுமிசைந்தொரு
நூற்றிருபதாண்டிங்கிருந்ததற்பின்
அன்பான் ஆழ்வான் ஆண்டாள்
நற்குமரர்க்கடியாம் முடிபுனைந்து
மன்பதையை வாழ்வித்தாங்கு
அமருமென வாழ்வித்தருளா''

ஆராமஞ்சூழ் அரங்கர் தமை
அலர்மாமகளை அடி இறைஞ்சித்
தாரீர் சரணம் தனைஎன்னத்
தந்தோ மெனலும் எதிராசன்
பாரோர் பரவும் பாகவதர்
பரிவால் பிரிவில் படர்கூரச்
சீரார் திருநாடடைந்திருந்த
சீடனுடனே சேர்ந்தனனுல்''

கூரத்தாழ்வான் பிரியுங்காலை உடையவர் ''ஆழ்வான்! நாமிருக்க நீர் முன் செல்வதே!'' என்ன, ''ஆழ்வான் அப்படியாயின் அடைவுகெடும் ஸ்வாமி! தேவரீரை என்றும் எதிர் கொள்ளவேண்டியவன். அங்ஙனமாகத் தேவரீர் முன்பெழுந்தருளினுல் தேவரீரன்றோ அடியேனை எதிர்கொள்ள நேரிடும். அது இங்காகினும் அங்காகினும் முறையன்றன்றோ! அதனுல் அடியேன் முன்னம் சென்று தேவரீர் எழுந்தருளுங்காலை தேவரீரை வரவெதிர் கொள்ளச் சன்னத்தாயிருக்கவன்றோ அடியேன் முன் செல்வது.'' என்று விண்ணப்பித்தனரன்றோ. அங்ஙனமே ஆழ்வான் முன்னுக நித்ய சூரிகள் எதிர்கொள்ள உடையவர் அந்தமில்பேரின்பத் தடியவரோடு திருமாமணி மண்டபத்தை அலங்கரித்தருளினுர். நித்யசூரிகள் கூடவிருப்பதினும் அங்கும் ஆழ்வான் கூட இருக்கப் பெற்றதே உடையவர் திருவுள்ளம் உகந்தது என்பதைக்கொண்டே ''எதிராசன்'' சீரார் திரு நாடடைந்திருந்த சீடனுடனே சேர்ந்தனனுல்'' என்னப்பெற்றது.

உடையவர் திரு நாடேறப் போந்தமையை உணர்ந்த முதலிகள் உள்ளத்திலே, அதுவரை இறுகப்பிணிக்கப்பட்டிருந்த துயரம் அவர் போனவாறே கரையை உடைத்துப் பெருகலாயிற்று. கந்தாடை ஆண்டான், அருளாளப் பெருமாள் எம்பெருமானுர், எம்பார், வடுக நம்பி முதலிய முதலிகள் வேரற்ற மரம் போல் கீழ்வீழ்ந்து தாரைக் கிடை கிடந்து

வாய்விட்டு ஆற்றித் துடிதுடித்து குரல் தழுதழுக்க, பெருமூச்சின் வெம்மையால் முகம் சிவந்து கண்ணநீர்கைகளாலிறைக்க வற்ருது பெருகி அருவிபாய "இப்படி நேருவதே!'' என்று புலம்பித் தவித்தனர்.

கோயிலிலே நம்பெருமாள் இவ்விபூதி யிலே நம் உடையவரை இழந்தோமே என்று திருவுள்ளம் நொந்து அருளமுதும் அமுது செய்யாதே நாச்சிமாருடனே புறப் பட்டருளினர். அவ்வளவில் பராங்குச பர காலன் முதலான ஆழ்வார்கள் பதின்மரும் சேவித்துச் செல்ல,பெருமாள் ஆயிரக்கால் மண்டபத்தே எழுந்தருளியிருந்து தமது திருமுத்தின் பணி, காளாஞ்சி, திருவெண் சாமரம், திருவால வட்டம், திருவெண் கொற்றக்குடை, வெண்முத்தின் கலசம், திருமேற்கட்டு, முத்துத்தாமம் தொடக்க மானவற்றையும், தாம் உடுத்துக்களைந்த பீதக வாடை, சூடிக்களைந்த திருத்துழாய் மலர், எண்ணெய்ச் சுண்ணம் யாவற்றை யும் பொற்றளிகையிலே உடையவர் பால் கொண்டு போம்படி உத்தம நம்பிக்கு நிய மனமருளினர். நம்பியும் அங்ஙனமே பெருமாள் பரிகரம் அனைத்துக்கொத்தும் கொண்டு ஸகல வாத்தியங்களும் பரிமாற மடத்து வாசலுக்கு எழுந்தருளினர். அது வரை புலம்பலும் புரளலுமாகக்கிடந்த முதலிகள் இது கண்டவாறே "பெருமாள் வீடு திருத்தியருளினர். இனி நாம் புலம் புதல் நன்றன்று'' என்று தம்மைத் தேற் றிக்கொண்டனர். உடையவரது விமல விக்கிரகத்தைக் கங்கையில் புனிதமாய காவிரி நன்னீரால் திருமஞ்சனம் செய்வித் தனர். பன்னிரு திருமண்காப்பு அணி வித்தனர். பெருமாளரையில் பீதகவண்ண ஆடையை உடையவர் திருமுடியிலே சாத்தி அலங்கரித்தனர். மாலையந் தண்ணந்துழாயினைத் திருமுடியிலே சூட் டினர். பெருமாள் திருமார்பணிந்த வந மாலையை அணிவித்தனர். உடையவர் திருவடிகளைக் கண்ணிலும் மார்பிலும் நெஞ்சிலும் ஒற்றிக்கொண்டனர். அத்திரு வடிகளை ஒற்றிக்கொண்டவாறே இவ் இணையடிகளைப் பிரிய நேர்ந்ததே என்ற துக்கம் பீறிட்டு வெளிப்பட "ஐயோ! கண்ணபிரான்! அறையோ! முறையோ! அரவணைமேற் பள்ளிகொண்ட முகில் வண்ணனே! என்று கைகளை உயரத் தூக்கிப் பெருங்குரலெடுத்து ஓலமிட்டனர். துயரம் தாங்காது மீண்டும் வீழ்ந்து மூர்ச் சித்தனர்.

பின்னர் மெல்லத் தேறியவர்களாய் உடையவருக்குப் பெருமாள் வரவிட்ட எண்ணெய் சுண்ணம் திருமண், ஸ்ரீசூர்ணம் முதலியவற்றை உடையவருக்கு அணி வித்து மீதியை முதலிகள் அனைவரும் பிரஸாதமாகத் தரித்துக்கொண்டனர். பின்னர் அனைவரும் உடையவர் ஸ்ரீபாத தீர்த்தம் கொண்டு திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருக்கையாலே உடையவருக்கு பிரம்மமேத முறைப்படிசெய்யத்தக்க யாவும் செய்தனர். பின்னர் திவ்ய விமானம் ஒன்றை நிருமித்து அதிலே உடையவரது திவ்யமங்கள விக்கிரகத்தை ஏறியருளப் பண்ணி 'அவன் நாடும் நகரமும் காண நலனிடை ஊர்திபண்ணி'' என்கிறபடியே அவ்விமானத்தை அனைவரும் கண்டு சேவிக்க வாய்ப்பாக மெல்ல எழுந்தருளப் பண்ணினர். பலவித வாத்யங்களும் முழங் கின. பெருமாள் பரிகரமடைய எல்லா விருதுகளும் தெருவின் இருபுறங்களையும் அலங்கரித்துச் சென்றன. ஆட்கொண்ட வில்லி ஜீயர் முதலாக எழுநூறு ஜீயர்களும் ப்ரஹ்மவல்லி, ப்ருகுவல்லி நாராயண அநு வாகம் முதலிய உபநிடதங்களை ஓதிச் சென்றனர். ஸ்ரீவைஷ்ணவர்களில் முந் நூல் தாரிகளான ஒன்பதினாயிரவர் முன் னிரண்டடியும், அது தரியாதவரான ஸ்ரீவைஷ்ணவர் பன்னீராயிரவரும் பின்னி ரண்டடியுமாக, அருளிச் செயல்களில் திரு வாய்மொழி நீங்கலான, மூவாயிரத்தையும் உரக்க சேவித்து வந்தனர். திருவரங்கப் பெருமாளரையர், திருவாய்மொழியரையர் ஆப்பான் திருவழுந்தூரரையர், திருநறை யூரரையர் முதலான எழுநூறு திருவாய் மொழி விண்ணப்பம் செய்யும் தம்பிரான் மார் பாணியும் தூக்கும் சீரும் சிறக்கத் திருவாய்மொழிபாட, திருவரங்கத்தமு தனர் முதலியோர் ப்ரபன்ன காயத்ரியான இராமாநுச நூற்றந்தாதி ஸேவிக்க, எம் பார் பிள்ளான் முதலானோர் ஸ்தோத்திர கத்யங்களை சேவிக்க வடுக நம்பியும், கோம டத்துச் சிறியாழ்வானும் உடையவர் ப்ர பத்தியை சேவிக்க எங்கணும் பெருமுழக் காய், உடையவரது விமானம் எழுந்தருளி வந்தது. திருவரங்கத் திருவீதியெங்கும் வாழை கமுகுதோரணங்களால் சோடிக்கப் பெற்றிருந்தன. வழியெங்கும் பொரியும் பூவும் சிதறினர். தெருவின் நடுவே விமானம் செல்ல வழியெங்கும் நடை பாவாடை விரிக்கப்பெற்றிருந்தது. சுமங் கலிகள் மங்களமாக 'நிதியுநற்சுண்ணமும் நிறைகுட விளக்கமும்' ஏந்தி முன் செல்ல,

இருபுறமும் வெண் சாமரைக் கற்றைகள் வீச, மக்கள் வெள்ளை வீசி வர, "தர்சனத்தில் எம்பெருமானுர் திருநாட்டுக் கெழுந்தருளுகிருர்!" என்று ஒற்றைச் சின்னம் பணிமாறத் திருவீதிகள் தோறும் விமானம் வலம் வந்தது. பெரிய பெருமாளும் உடையவரது திருமேனியிலே மிகவும் சபலராய், நிதியை உள்ளிட்டு வைக்குமாபோலேயும், ஆழ்வாரைத் தனது ஆவரணத்துக் குள்ளேயே பள்ளிபடுத்தியது போலேயும், தனது ஆவரணத்துக்குள்ளேயே பள்ளி படுத்துமாறு நியமிக்க, முதலிகளும் துறவிகட்குரிய முறையிலே உடையவரது சரம விக்கிரகத்தைத் திருப்பள்ளிபடுத்தினர்கள்.

அப்பால், பெருமாள் நாச்சிமாரோடே திருமஞ்சனம் கண்டருளித் திருமுக மண்டலம் சோபையின்றித் தோன்ற, அருள முதும் அமுது செய்யாதே ஒழிந்தார். கந்தாடையாண்டான் பட்டர் முதலானுரைப் பார்த்து நம்முடைய அவபிருதம் கொண்டாடுமாபோலே உடையவர்க்கும் கொண்டாடுங்கோள் என்று நியமித்து, சேர்த்தியில் எழுந்தருளி உடையவருக்கு அக்கார அடிசில் தளிகை அனுப்பியருளினர்.

கந்தாடையாண்டான் தொடக்கமான அனைவரும் புதல்வர் சீடர் இவர்கள் செய்ம்முறை யாவும் செய்து அவப்ருதஸ்நானம் செய்தனர். பின்பு பெருமாள் அநுமதியுடனே எம்பெருமானுரை எக்காலும் பின்புள்ளார் எல்லோரும் சேவித்து உய்யும்படியாக உடையவர் பள்ளிபடுத்தப் பெற்ற இடத்தின்மேலே, அவரே மீண்டும் ஆவிர்ப்பவித்தது போன்று அவரது அர்ச்சாமூர்த்தம் ஒன்றை ஏறியருளப்பண்ணிப் பிரதிஷ்டை செய்வித்து மகிழ்ந்தனர்.

(உடையவர் திரு நாடேறப் போனது மாசி சுத்ததசமி மத்யான்னம் மந்தவாஸரம் என்று குருபரம்பரைகூறும். அடியேன் எழுதும் இக்கட்டுரையும் இன்று (9-3-68) எழுதி முடிக்கப்பெற்றது. கோல்விழுக்காட்டாலே இன்று மாசி சுக்லதசமியாய் சனிவாரமாயும் அமைந்தது. அதற்கும் ஒருபடி மேலாக இன்று உடையவரின் மாத ஜன்ம நக்ஷத்திரமும் கூடியது நம்பெருமாள் உடையவர் கிருபா விசேஷமே)

உலகிலுள்ள சகலரும் உய்யும் வண்ணம் மாறன் காட்டிய வழியை மாநிலமெங்கும் உணருமாறு செய்த மஹோபகாரி எம்பெருமானுர். இந்நிலவுலகிலே அவர் நூற்றிருபது ஆண்டுகள் எழுந்தருளியிருந்தார். அதிலும் துறவியாகவே வேதோக்தமான ஒரு புருஷாயுசு (நூறு வருடம்) வாழ்ந்தவர் அவ்வவதார புருஷர். அவரது பெருமை தோன்றத் தொன்மையான வைணவம் 'எம்பெருமானுர்தர்சனம்' எனப் பெற்றது. அவரது குணுதிசயங்களையும் பெருமைகளையும் அமுதனுர் அருளிய இராமாநுச நூற்றந்தாதி தெளிவாக விரிவாகப் பேசி நிற்கும். வைணவ ஸம்ஸ்காரங்களில் ஒன்ருகிய நாமகரணம் இராமாநுச தாஸன் என்றே நிலைத்தமை, லக்ஷ்மி நாதன் முதல் வந்த ஆசார்ய பரம்பரையில் இராமாநுசருக்குள்ள ஏற்றத்தைக் காட்டி நிற்கும். ஆழ்வார் பெற்ற தமிழ் மறைக்குழவியை ஊட்டி வளர்த்த செவிலியாகிய எம்பெருமானுர் தமிழ்ப் பண்பு கொண்டே இறைநிலையை ஸ்தாபித்தனர் என்பதனைத் தமிழர்கள் உணர்ந்துள்ளனரோ அறியோம். தமிழ்கொண்டே நிலைநாட்டப்பெற்றமையின் வைணவம் 'தமிழ்' என்றே வழங்கப்பெற்றது. இன்றையத் தமிழர் இதனை உணர்ந்துய்யத் தமிழன்னை என்று திருவுள்ளம் பற்றுகிருளோ!

இக்கட்டுரையோடு 'ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை' என்ற தலைப்பு முடிவு பெறுகிறது. பின்புள்ள ஆசார்யர்களின் சரிதை அவரவர் பெயரால் பின்னர் வெளிவரும். அடியேனது இக்குரு பரம்

ப்ரைத் தொகுதி சென்ற நான்கு வருஷங்களுக்கு மேலாக மாதந்தோறும் வந்தது. அதனைப் பொறுமையோடு தாங்கியுதவிய "திருக்கோயில்" நிர்வாகிகளுக்கும், குறிப்பாக அதன் ஆசிரியருக்கும் அடியேனுடைய பணிவுகலந்த நன்றி. அடியேனுடைய கட்டுரையையும் விஷய மதிப்பை உன்னி ஏற்றுவந்த அனைத்து ஆஸ்திகப்பெரியோர்களுக்கும் எனது தாழ்மையான வணக்கம்.


"சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையில் சாத்திய செந்துவராடைவாழி
ஏராரும் செய்யவடிவு எப்பொழுதும்வாழி
இலங்கியமுக்கோல் வாழி இணைத்தோள்கள்வாழி
சோராத துய்யசெய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல் வாழி துணைமலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி
இனிதிருப்போ டெழில் ஞானமுத்திரை வாழியே.

அறுசமயச்செடியதனை அடியறுத்தான் வாழியே
அடர்ந்துவரும் குதிட்டிகளை அறத்துரந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வமுற்றும் திருத்திவைத்தான் வாழியே

மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரை செய்ததமிழ் மறைவளர்த்தோன் வாழியே
அறமிகுநற் பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே.

**ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.**

[முற்றும்]



அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு ஆ. இராதாகிருஷ்ணன் M.A., B.L., அவர்கள் திருமாகறல், ஸ்ரீ மாகறலீசுவரர் தேவஸ்தானத்துக்கு வருகை தந்து சிறப்பித்தல் (13—3—68)

## மதிப்புரை

**தமிழ் இலக்கிய வரலாறு::**

இந்நூலின் ஆசிரியர், சைவசித்தாந்தப் பேரறிஞராகவும் சான்ருேராகவும் விளங்கியிருந்து, 'சிவஞான போதம்-சிவஞான சித்தியார்' முதலிய சைவசித்தாந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உதவிய பெருந்தகையாராகிய திரு ஜெ. எம். **நல்லசாமி பிள்ளை** அவர்களின் நெருங்கிய உறவினர், திரு ஜெ. எம். **சோமசுந்தரம் பிள்ளை** பி. ஏ., பி. எல்., அவர்களாவர். இவர்கள் நமது அறநிலையத்துறையில் நிர்வாக அதிகாரியாகவும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நூல் வெளியீட்டுத்துறையின் மேலாளராகவும், பல ஆண்டுகள் சிறந்த பணிபுரிந்து ஒய்வு பெற்றிருப்பவர்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த புலமை பெற்று, முன்பே பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கும் இவர்கள், தமிழிலக்கிய வரலாறு குறித்துச் சிறந்த முறையில் ஆங்கிலத்தில் இந்நூலை இயற்றியுள்ளார்கள். பொது முன்னுரை, தொல்காப்பியம், திருவள்ளுவரின் திருக்குறள், சங்ககாலப் புலவர்கள், தமிழிலக்கியத்தில் பெண்பாற் புலவர்கள், ஐங்குறுநூறு, திருமுருகாற்றுப்படை, சிறுபாணுற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், சங்க காலத்தின் சமுதாயப் பொருளியல் வாழ்க்கை, பௌத்த சமண காலம், என்னும் பல்வேறு தலைப்புக்களில், ஆசிரியர் தமிழிலக்கிய வரலாற்றினை மிகவும் சிறப்புற விளக்கியுள்ளார். திரு எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை, திரு எஸ். வையாபுரிபிள்ளை ஆகியோர் எழுதியுள்ள தமிழிலக்கிய வரலாறுபற்றிய நூல்களைப்போல, இந்நூலும் மிக்க சிறப்பும் பயனும் உடையதாகத் திகழ்கிறது.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர், இந்நூலுக்குச் சிறப்புரை வழங்கியுள்ளார். பல சிறந்த அழகிய படங்கள் இந்நூலில் சேர்க்கப் பெற்று, இந்நூலின் சிறப்பையும் பயனையும் மிகுதிப்படுத்தி நிற்கின்றன. நல்ல சிறந்த பயனுள்ள நூல். நல்ல அழகிய தாளில் திருத்தமாகச் செவ்விதிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. 450 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா பன்னிரண்டு. கிடைக்குமிடம், திரு ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., 28, விரிவுரையாளர் குடியிருப்பு, அண்ணுமலைநகர் (அஞ்சல்), சிதம்பரம், தென்னுற்காடு மாவட்டம்.

—ஆசிரியர்

## மதிப்புரை

**நெஞ்சமாலை :**

இந்நூல், கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் அவர்கள் இயற்றியது. பன்மொழி பயின்றவரும், பல கலைகளில் வல்லவரும், பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய ஸ்ரீபாரதியார் அவர்கள், யோக நெறிப் பயிற்சியில் ஆழ்ந்து, உள்ளே பூத்த கவிமலர்களையும், சிந்தனைச் சிற்பங்களையும் நூல்களாக இயற்றி, இறைவனுக்கே உரியனவாக்கி வழிபடும் இயல்பினர். அவர்கள், உலகியல் வாழ்வில் வரும் இடர்களைப் பொறுத்து, உயர்ந்த நிலையில் ஊன்றியிருக்கத் தமது நெஞ்சிற்கே அறிவுத்துவது போலப் பாடிய பாமாலையாதலின், இந்நூல் 'நெஞ்சமாலை' எனப் பெயர் பெற்றது. இதன் கண் சுத்தசக்தி வேகம், பரமாத்மதியானம், அருள்விளக்கம், இதய கீதம், முருக ஜபம், குருவாயூரப்பன் மாலை, சுத்த வேத தர்மம் என்னும் தலைப்புடைய பாடல்கள் பலவும், தனிப்பாடல்கள் பலவும் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழன்பர்களுக்கும், பக்தர்களுக்கும் பயன்படத்தக்க நல்லநூல், 72 பக்கங்கள் கொண்டது. விலை ஐம்பது காசுகள்.

கிடைக்கு மிடம் : சுத்தானந்தர் நூலகம், யோக சமாஜம், சென்னை-20.

—ஆசிரியர்

# சீவ-சிவரகசியம்

கவியோகி மகரிஷி திரு சுத்தானந்த பாரதியார்,

யோகசமாஜம், சென்னை–20.

ஓம் சுத்த சக்தி ஓம் சிவம்!
சிவோஹம்! சிவமயம்!

இந்த மந்திரத்தைச் சென்ற நாற்பதாண்டுகளாக நான் சாதனம் செய்தேன். கர்மம், பக்தி, ஞானம், விஞ்ஞானம், சச்சிதானந்தம், ஸம்யமம், ஆத்மலயம், இதயாம்பரசித்தி, அம்பலநடன சித்தி, ஸஹஸ்ராரசித்தி, துரிய நிஷ்டை, ஸஹஜ நிஷ்டை, மகாதுரிய சித்தி ஆகிய யோக ஞானப் படிகளை எட்டிப் பிடிக்க இந்த பூர்ண சிவசக்தி மந்திரமே வழி காட்டியது.

8. காற்றின் கணக்கு

ஜபாதனம் முதலில் வாக்கினல் அல்லது எழுத்தினல் தொடங்கும். சுத்தமாகக் குளித்து, நடராஜர் அல்லது சிவலிங்கத்தின் முன் அமர்ந்து, ஜபமாலையில் 108 முதல் இயன்றதைச் செய்க. இயன்றபோதெல்லாம் சித்த சுத்தியுடன் ஜபம் செய்க. ஆறு மாதத்தில் மனம் பண்படும். பிறகு வாயாற் சொல்லாமல் மனதால் ஜபிக்கவும். ஓராண்டு ஜபித்தால் மனம் அடங்கும். இதயத்துடிப்பும் ஜபத்திற்கேற்படி தாளம் போட்டுக் குதிக்கும், அதே வேகத்தில் நாடிகளும் துடிக்கும். உடல் முழுதும் ஜபத்துடிப்பாகும். பிறகு ஜபப்ராணயாமம் பழகலாம். பிராணயாமத்தில் மூச்சை இழுத்தல், அடக்கல், விடுதல் என்ற மூன்று நிலைகள் உண்டு. தொடக்கத்தில் ஒரே சீராக "ஓம் சுத்த சக்தி! ஓம் சிவம்! சிவோஹம்! சிவமயம்" என்று மூச்சை இழுத்து, அதே அளவில் விட்டுப் பழகவும். இடது மூக்கால் இழு, வலது மூக்கால் விடு; மறுபடி வலது மூக்கால் இழு; இடது மூக்கால் விடு. மீண்டும் இடதால் இழு, வலதால் விடு. இதை விரைவாகச் செய்யலாம். இதனல் நாடி சுத்தியாகும். பிறகு ஒரு மந்திர அளவு இழுத்து நான்கு மந்திர அளவு அடக்கி இரண்டு மந்திர அளவு விட்டுப் பழகவும். இதுவே கும்பகப்ராணயாமம். இவ்வளவு அடக்க முடியாவிட்டால், ஓம் சிவம் என்ற மந்திர அளவை வைத்துக்கொள்க. உயிர்ப்பு எங்கே உதிக்கிறதோ அங்கே ஆன்மா உதிக்கிறது; அது ஒடுங்குமிடம் இதுவும் ஒடுங்கும். அந்த இடமே உள்ளம்.

ஈரெட்டு நான்களவில் ஈர்த்து
அடக்கி விட்டு உயிர்ப்பின்
வேர் எட்ட உண்டாகும் விறு.

காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்தால் கூற்றையும் உதைக்கும் கொழுந்தடி காணலாம். மந்திரப் பிராணயாமத்தால் குண்டலி சக்தி எழுந்து, ஆதார கமலங்கள் மலரச் செய்யும். மந்திர சாதனம் தீவிரம் ஆகஆக மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனுஹதம், விசுத்தி, ஆஞ்ஞை, ஸஹஸ்ராரம் ஆகிய ஏழு ஆதாரங்களிலும் குண்டலி ஏறி எட்டாவதான சுத்த சக்தி நிலையத்தில் மகாகுண்டலியாகி, உடல் முழுதும் விறுவிறுப்பாகப் பரவும். அப்போது ஆனந்தத் தேன் ஊறும்.

ஆறுருவி ஏழேறி ஆனந்தத் தேன் உண்ணும்
சீறியெழும் ஆதாரத் தீ.

## 9. மனக்கோயில்

அப்போதுதான் சுத்த சக்தி சிவமயமாக ஆன்மா பொலிந்து பேரின்பமடையும். முப்பொருள் உண்மை விளங்கும். முத்தி சித்திக்கும்.

என்னை அறிவென்ருன் என்னறிவில் ஆனந்தம்
தன்னைச் சிவம்என்ருன் சந்ததமும்-என்னையுன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்ருன்; இம்மூன்றும்
ஆராய்ந்தவர் முத்த ராம்.

வாயிலார் நாயனுர் போல் மறவாது சிவனை நினைந்து, நெஞ்சந்தைச் சிவாலய மாக்கினுல், முத்தி சித்திக்கும்.

மறவாமையான் அமைத்த
மனக்கோயில் உள் இருத்தி
உறவாதி தனை உணரும்
ஒளிவிளக்குச் சுடரேற்றி,
இறவாத ஆனந்தம்
எனுந்திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்பென்னும்
அமுதமைத்து அர்ச்சனை செய்வார்.

இந்த உள் வழிபாட்டையும், ஸஹஸ்ரார சித்தியையும் விளக்கப் பாரத சசதியிலிருந்து ஒரு பாட்டைச் சொல்லுகிறேன் :

ஆயிர இதழ் மலரில் அரியணை அமைத்தனன்;
அறிவொளி விளக்கேற்றினேன்;
ஆர்வத்தில் ஊறிவரும் அன்புப் பெருக்கால்
அகங்குளிர நீராட்டினேன்;
தூயமனமே நல்ல துகிலாய் உடுத்தினேன்;
சுகுணத்தை அணியாக்கினேன்;
துரியபரநாதகண் டாமணி முழக்கினேன்;
சுகந்த சாந்தம் பூசினேன்;
வாயார வரகவியின் மலர்மாலை சூட்டினேன்;
வாழ்வெலாம் அர்ச்சித்தனன்;
மன்னுயிர்த் தொண்டுதரும் மாசற்ற பலனையே
மாண்புற நிவேதித்தனன்;
ஆயா உனக்கிந்த ஞானவழி பாட்டையே
அனவரதம் ஆற்றி மகிழ்வேன்
அதுவென்றும் அவனென்றும் அவளென்றும்
அகநாடகப் பரமனே. [அன்பர்தொழும்

## 10. சீவ தத்துவ ரகசியம்

இவ்வாறு பல படிகளைக் கடந்து கடவுளை அடைய வேண்டியிருக்கிறது. உலகோர் பதிஞானமேயில்லாமல், முப்பொருள் அறிவேயில்லாமல், வெறும் ஊனுடலையும், மண்ணுலகையும் கண்டு மயங்குகிருர்கள். ஊனே, உடையே, வீடே, பொன்னே, பெண்ணே, மண்ணே என்று திரியும் மாக்கள், கடவுள் இல்லை, வேதமில்லை, ஆகமம் இல்லை, ஆன்மா இல்லை, எல்லாம் புரட்டு என்ருல் நாம் நகைக்க வேண்டியதுதான். இவர்கள் செருக்காடும் விஞ்ஞானம், தூல ஞானம்; அவ்யக்த மாயையிலிருந்து பிரிந்த பூத பௌதீக ஞானம். மாயா சக்தி ஆகாசத்தில் மின் சக்தியைச் சுழற்றுகிறது. அதனுல் இங்கே மின்பொறி நடக்கிறது. அது சக்தி பொழியாவிட்டால் எடிசன் விளக்கைக் காண்பானு? மார்க்கோனி வானெலி காண்பானு? டாக்டர் ஹாஹின் அணுசக்தி காண்பானு? லாரென்ஸ் அணு முறி (ஸைக்ளட்ரோன்) காண்பானு? சிற்றறி மாக்கள், மண்ணுடல் மாக்கள், முற்றறி நித்தியனை இல்லையென்பது, நீர்க்குமிழிகள் வெள்ளத்தையும், கடலையும் வெறுத்து இல்லை யென்பது போலாகும்.

வெள்ளமிலை என்னும் வெறுங்குமிழி போல்வாரே
உள்ளபொருள் உள்ளறியா தார்.

நம்மவருள் சிலர் இப்படி நாத்திகம் பேசுகிருர்களே என்று என்னிடம் பலர் வருந்துகிருர்கள். அவர்களுக்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன். வெள்ளரிக்கொடியில் இனிய காய்கள் காய்க்கும்; இடையே இரண்டொன்று கசக்கும். கசந்த காயை விலக்கி, நல்ல காயை நுகர்கிருேம். அதுபோல் வாதாடாமல், வம்பரை விலகி நம்பரைப்பற்றி வாழ்க.

அநித்தியத்தை நித்தியம்என்று ஆதரிக்கும்
பொல்லா
மநித்தருடன் கூடி மருவார்—தனித்திருந்து
மோனந்தமாம் சிவத்தின் மூழ்கி, மலத்தை அறுத்து
ஆனந்த மாய்முந்து வார்.

(சிவபோக சாரம்)

11. அன்பின் உரு :

பட்டினத்தார் காலத்திலும் தெய்வ நிந்தை செய்வோர் இருந்தனர். அவர் களை அவர் எப்படி மதித்தார்?

கல்லார், சிவகதை; நல்லோர்
தமக்குக் கனவிலும் மெய்
சொல்லார்; பசித்தவர்க்கன்னங்
கொடார்; குருசொன்னபடி
நில்லார்; அறத்தை நினையார்;
நின்நாமம் நினைவிற்சற்றும்
இல்லார் இருந்தென்ன
போயென்னகாண் கச்சி ஏகம்பனே,

இறைவன் அருளே மாயா சக்தியால் உலகை ஆட்டுகிறது. அந்த அருளே இறைவன் உரு. தாயின் அன்பு தாய்ப்பா லாக உருவாகிக் குழந்தையை ஊட்டுகி றது. இறைவன் கருணை, அருட்பெரும் சோதியாக விளக்கமாகி, உயிர்களை மாச றுத்து ஈடேற்றுகிறது.

அருவாம் சிவனருளும் அன்னைமுலைப் பால்போல்
உருவாகும் அன்பா உளம்.

ஒன்றேயான கடவுள் சக்தியால் பலவாகத் தோற்றமளிக்கிறது. உள்ளம் குவிந்து ஒன்ருனல் ஒன்றைக் காணலாம்.

இருப்பது ஒரு பொருளே எல்லாம் அதுவே
பிரிப்பது பொய் மாயப் பிணி.
ஒன்றே உயிருலகம்; ஒன்றே உலகிறைவன்
ஒன்றே இறைவன்உறை யுள்.

சிவவாக்கியர் சொல்லுகிருர் :

ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே அனுதியாகத்
தோன்றுமே
கன்னல் நின்ற செம்பொனைக் களிம்பறுத்து
நாட்டினுல்
அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயவே.

12. அருள் மின்சாரம் :

படிப்படியாகச் செல்வோம் : ஒரு மின் சார விளக்கிற்குக் குமிழ், கம்பி இருந்தால் போதுமா? பொத்தானை அமுக்கினுலும் ஒளி வராது. மின்சார ஓட்டம் இருந்தாலே வெளிச்சம் வரும். மின் ஓட்டம் எங்கிருந்து வரும்? மின் பொறியிலிருந்து. பொறிக்கு மின்சாரம் ஆகாசத்திலிருந்து வருகிறது. அங்கே மின் சக்தி ஓடாவிட்டால் இங்கும் ஓடாது. ஒரு பேசும் படம் பார்க்கிருேம். படமா பேசுகிறது? முதலில் ஆள் பேசி, பதிவு செய்தே படம் பேச வேண்டும், ஆட வேண்டும். அதுபோல் இந்த உடம்பும் உயிரால் ஆடும். உயிரும் உயிர்க்குயி ரான பரம்பொருளால் ஆடுகிறது.

12. உடம்பின் நுட்பம் :

நாம் உடம்பைப் பார்க்கிருேம். கிரேஸ் அனுடமி படித்தால் இந்தத் தூல தேகத் தின் நுட்பங்களை அறியலாம். நம் உட லில் 206 எலும்புகள், 25,00,000 வேர்வைக் கோளங்கள், 33 அடி உணவுக்குழாய், 250 கன அங்குலம் உயிரி, 670 அங்குலம் விரியும் மூளை, ஆயிரக்கணக்கான நரம்பு கள், பல நாடிகள் உள்ளன. இவையா நாம்? பிணத்திற்கும் இந்த உறுப்புகள் உண்டு. உறுப்புக்கள் உணரா, முகரா, கேளா, பேசா. பிணவுடலுக்கு இரத்த ஓட் டம் இயலுமா? உயிருடலில் இரத்தம் சிவப்பது எதனுல்? நெஞ்சம் துடிப்பது எதனுல்? உயிர்ப்பது எதனுல்? உடலுள் ஏதோ ஒன்று உயிர்க்கிறது அதனுல், உடம்பு ஐம்பூதக் கூட்டுறவு. அந்த உயி ருள்ளமட்டும் ஐம்பூதங்கள் கூடி நிற்கும். உயிர் பிரிந்தால் பூதங்கள் பிரியும். எலும்பு, நரம்பு, தசை, தோல், மயிர் இவை மண்ணுகும். விந்து, ரத்தம், மூளை, கொழுப்பு இவை நீராகும். ஊண், உறக் கம், அச்சம், புணர்ச்சியாகிய உணர்வுகள் தீத்தன்மையாகும். இருப்பது, நிற்பது, நடப்பதெல்லாம் வாயுவால். காமக்குரோதி கள் ஆகாயத்தால் இயங்கும். இடை, பிங் கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, அலம் புடை; ஜிஹ்வை, புருஷன், குகு, சங்கினி ஆகிய நாடிகள், சுரப்பிகள், ஜீவ சத்துக் கள் எல்லாம் உயிர் இருந்தாலே நடக்கும். பிராணன், அபானன், வியானன், உதா னன், சமானன், நாகன், கூர்மன், கிரி தரன், தேவதத்தன், தனஞ்ஜயன் ஆகிய தச வாயுக்களும் உயிருடலில் சஞ்சரிக்கும்

நரம்புகளை இயக்கும். பிணவுடலில் தொழில் புரியாவாம். வசனம், கமனம், தானம், விசர்ச்சனம், ஆனந்தம் ஆகிய வசனாதிகளும், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆகிய வாக்குகளும் உயிர் இருந்தாலே நிகழும். இவையெல்லாம் புறக் கருவிகள். இவற்றிற் சிலவே உடற்கூறு நூலார் அறிவர். இவற்றிற்கும் உள்ளே சென்றால் **அசுத்த தத்துவம்** உள்ளது. அது மொத்தம் 24 : ஐம்பூதம், ஐந்து தன் மாத்திரை, ஐந்து ஞானேந்திரியம், ஐந்து கன்மேந்திரியங்கள், நான்கு அந்தக்கரணங்கள் எல்லாம் சேர்ந்தே இயற்கையுடல், பிரகிருதி, க்ஷேத்ரம், நிலம் என்பர். இவற்றிற்குமேல் **வித்யா தத்துவம்** ஏழுள்ளன : புருஷன், மாயை, காலம், நியதி, அராகம், வித்தை, கலை இவை ஆன்ம தத்துவம்- வேதாந்திகள் பிரகிருதி புருஷன் ஆகிய இருபத்தைந்து தத்துவங்களையே கொள்வர். சித்தாந்தம் இன்னும் ஆழச் சென்று, ஜீவனை இயக்கும் சிவம் ஒன்று உண்டு என்றறிகிறது. சிவதத்துவம் ஐந்து : சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம், நாதம், விந்து. தத்துவ வழி அத்துவா : ஆறு அத்துவாக்கள் உண்டு : தத்துவம், கலை, புவனம், வன்னம், பதம், மந்திரம்.

13. தத்துவ விளக்கம் :

ஒரு கடிகாரத்தில் உள்ள விசைகளும், சக்கரங்களும் போன்றவை தத்துவங்கள். அவை ஊழிகாலம் வரையில் நின்று உலகையும், உயிர்களையும் இயக்கும். பூதம், தன்மாத்திரை, ஞான கன்மேந்திரியங்கள், அந்தக்கரணங்கள், வித்தை, சிவம் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் **அகக்கருவிகள்** பஞ்சபூத காரியங்கள் 25, வாயு 10, நாடி 10, வாக்கு, 4, ஏஷணை 3, வசனாதி 5 ஆக அறுபதும் **புறக்கருவிகளாம்**. வித்திலிருந்து மரம் கிளைப்பது போலவே, இவையெல்லாம் இறைவனிடமிருந்து கிளைக்கும். எல்லாம் ஆன்மாக்களை ஈடேற்றித் தன்மயமாக்க இறைவன் அருளிய கருவிகளேயாம். சுத்த பரமாத்மன் இருந்தபடி இருக்கிறான். தனது குடிலையான மாயா சக்தியைச் சிறிது அசைக்கிறான். மேக வானில் மின் இடிப்பது போல நாதம் எழுகிறது. **நாதம்** சிவதத்துவம், அறிவைத் தருவது. அதிலிருந்து **விந்து** உண்டாகும்; இது கர்ம சக்தி, **லயதத்துவம்**. விந்துவிலிருந்து **சாதாக்கியம்**, அல்லது சதாசிவ தத்துவம் உண்டாகும். இதில் நாத விந்துக்கள் சமமாகக் கூடி நிற்கும். இதிலிருந்து ஈஸ்வர தத்துவம் உண்டாகும். அதிலிருந்து கிரியை குறைந்து ஞானம் மிகுந்த **சுத்த வித்தை உண்டாகும்**. நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை ஆகிய இவை சிவனருளால் இயங்கும் **சுத்தசிவ தத்துவங்கள்**. இவற்றிற்கு சிவம், சக்தி, ருத்ரன், மகேசன், சதாசிவன் ஆகிய ஐவரும் அதிதேவதைகள். ஞானம், கிரியை இரண்டும் இவற்றால் ஆகும். காரிய மாயையிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்து **கஞ்சுகிகள்** தோன்றும். இவையே சுத்தாத்ம புருஷனுக்கு உடைகளாகும். கலாதத்துவத்திலிருந்து பிரகிருதி தத்துவம் உண்டாகும். பிரகிருதியிலிருந்து சத்வம், ராஜஸம், தாமதம் ஆகிய முக்குணங்களும் உண்டாகும். குணத்திலிருந்து புத்தி அதினின்று அகங்காரம். அதிலிருந்து மனம், சித்தம் ஆகிய அந்தக்கரணங்கள் உண்டாகும். இதனால் உலகுடன் தொடர்பு கொண்டு உயிர் வாழ்க்கை நடக்கிறது. இந்தத் தத்துவங்களை ஒரு மானிட உருவில் பாவித்தால், நெற்றி நாதவிந்து, மூக்கு சாதாக்கியம். கழுத்து ஈசுரம், மார்பு சுத்தவித்தை, மார்புக்குழி மாயை, வயிறு காலம், நியதி, கலை, அராகம், புருஷன்; இடுப்பு சித்தம், புத்தி; குறிமனம், அகங்காரம்; தொடை தசேந்திரியம், முழங்கால் தன் மாத்திரை, கால் பஞ்ச பூதாதிகளாகும்.

இத்தத்துவ வாழ்விற்குப் பரிணாமம் உண்டு. சாக்கிரத்தில் எல்லாத் தத்துவங்களும் வேலை செய்யும்; சொற்பனத்தில் மனமாதி சூக்கும சரீரம் இயங்கும். சுழுத்தியில் காரண சரீரமான ஆன்மா சித்தச் சுழலால் இயங்கும். துரியத்தில் பிராண சக்தியும் புருஷனும் இயங்கும். துரியா தீதத்தில் எல்லாம் அமைதி சேரும், பரிணாமம் இல்லை.

15. மூன்று நிலைகள்

ஆன்மாக்கள் மூன்று பக்குவ நிலையில் பரிணாமப் படுகிறார்கள். புல், மரம், பூச்சி,

புழு, பறவை, விலங்குப் படிகளிலிருந்து மானிடமான ஆன்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மாசுகள் நிறைந்தவர்கள். இவர்கள் சகலர், தூல சூக்கும தேகிகள். இவர்கள் ஒரு குருவைப் பணிந்து நடந்தே இருவினை ஒப்பும் மலபரிபாகமும் அடைந்து ஈடேறலாம். இரண்டாவது பக்குவிகள் ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங் கொண்டவர்கள், இவர்கள் பிரளயாகலர்; பூதம், தன்மாத்திரை, ஞானகர்மேந்திரியங்கள், அந்தக்கரணம், முக்குணம், பிரகிருதி, கலாபஞ்சகம் ஆகிய எட்டும் கொண்ட புரியஷ்டகர். இவர்களுக்கு இறைவனே அந்தர்யாமியாயிருந்து முத்தி தருவான். மூன்றுவது ஆணவமேகொண்ட விஞ்ஞான கலர், இவர்கள் சுத்த வித்யா, ஈஸ்வர தத்துவங்களில் வசிப்பவர்கள். இவர்களை இறைவனே நேராக நடத்தி ஜீவன் முத்தராக்குவான். இந்த மூன்று பரிணமைப் படிகளையும் தாண்டியவர்களே சுத்த சைதன்யர். இவர்களுக்கே அருட்சோதி உள்ளும் புறமும் நிலவும், சிவ சைதன்ய தேகமும் சித்திக்கும்.

இவ்வாறு திருவருளால் பக்குவம்அடைய வேண்டும். இத்தெய்வ நிலை உள்ளறிவால் விளங்கும். இந்த உண்மையை உடலறிவும் மட்டமாயிருக்கும் சிலர் மறுத்தால், அறியாமை என்று ஒதுக்கித் தள்ளி, நாம் சிவயோக சாதனங்களைத் தீவிரமாகச் செய்து சுத்த சிவத்வம் பெறவேண்டும். அதற்கு அப்பர் சாதன முறை சொல்லுகிறுர் கேளுங்கள் :

உடம்பெனும் மனையகத்தில்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் அட்டி.
உயிர்எனும் திரி மயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே.
மெய்ம்மையாம் உழவுசெய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையுள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையும் அன்றே.

16. சிவகதி

உள்ளன்பர்காள்! இப்படிப்பட்ட சுத்த சிவகதிக்குச் சாதனமான மந்திர ஜபத்தையும், நியமங்களையும், தத்துவ ரகசியங்களையும் இன்று சொன்னேம். இந்தப் பிரசங்கத்தைக் கேட்ட பயன் என்ன? இன்று முதல் இயன்றபோதெல்லாம் அமைதியாக உள்ளாழ்ந்து, ஓம் சிவம், சிவோஹம், சிவமயம் என்று ஜபியுங்கள். நமச்சிவாய, சிவாயநம என்று பரமனை வணங்குங்கள். ஓம் சுத்த சக்தி, ஓம் சிவம், சிவோஹம், சிவமயம் என்று நாமாவளி பாடுங்கள். கூட்டமாகப் பாடுங்கள். ரகுபதி ராகவ ராஜாராம் பாடிக் காந்தியடிகள் சுயராஜ்யத்தை நாட்டினர். நாம் ஓம் சுத்த சக்தி, ஓம் சிவம் சிவோஹம், சிவமயம் என்ற மந்திரத்தால் சிவராஜ்யம் நாட்டுவோம். தமிழகத்தைச் சுத்த சிவ சன்மார்க்க நிலையமாக்குவோம். அன்பினல் காரியசித்தி பெறுவோம். அருளால் சக்தி பெறுவோம்.

அன்பான நெஞ்சிலே அருளான சாட்சியாய்
ஆனந்த நடனமிடுவாய் ;
அரகர சிவாயநம எனும்அடியார் வாக்கில்இசை
அருவியெனவே பெருகுவாய்
உன்பாத மலரன்றி வேறென்றும் அறிகிலேன்
ஒருமையுடன் உன் பெருமையை
உயர்வான தமிழ்பாடி உலகெலாம் புகழவே
ஓதநான் காதல்கொண்டேன்
என்பால் இரங்கியருள் இரவுபகல் இல்லாமல்
இதயகுகை ஒளிர் இரவியே
எண்ணியதை இந்தா எனத்தரும் தந்தையே
எனையூட்டி வளர் அன்னையே
இன்பான ஜோதியே ஏகாந்த மோனத்தில்
இனிதுவரும் அனுபூதியே
இதந்தரு சுதந்தர பதந்தரு திகம்பர
சிதம்பர பரப்பிரமமே.

—சுத்தானந்த பாரதி.

# செய்திக் குறிப்புகள்

## பங்குனி உத்திர லட்சார்ச்சனை விழா

**வடபழநி:** வடபழநியாண்டவர் கோயில் (3-4-68 — 11-4-68)

தெப்பத் திருவிழா. (12-4-68 — 14-4-68)

## பங்குனிப் பெருவிழா

| | | | |
|---|---|---|---|
| 1. | நாச்சியார் கோயில் (கும்பகோணம் வட்டம்) | .... | ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் (4-4-68 — 13-4-68) |
| 2. | சோளிங்கபுரம் | .... | லட்சுமி நரசிம்மசுவாமி (30-4-68 — 10-6-68) |
| 3. | பழநி | .... | தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானப் (5-4-68 — 14-4-68) |
| 4. | திருஇந்தளூர் | .... | பரிமள ரெங்கநாதர் திருக்கோயில் (3-4-68 — 21-4-65) |
| 5. | திருநகரி (சீர்காழி வட்டம்) | .... | ஸ்ரீ கல்யாண ரெங்கநாதசுவாமி தேவஸ்தானம் (3-4-68—13-4-68) |
| 6. | திருவாலங்காடு | .... | பண்டார் குழலியம்மை சமேத வடா ரணியேசுவர சுவாமி தேவஸ்தானம் (1-4-68—12-4-68) |
| 7. | அம்பாசமுத்திரம் | .... | அகஸ்தியர் கோயில் (4-4-68 — 14-4-68) |
| 8. | நீடாமங்கலம் | .... | சந்தான ராமசுவாமி கோயில் (5-4-68 — 17-4-68) |

## குரு பூசை விழா

காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருமடத்தில், *21, 22-4-68* ஆகிய தேதிகளில் சிறப்புற நடைபெற்றது. உயர்நீதிமன்ற நீதிபதி திரு ஆர். சதாசிவம் அவர்களும், காஞ்சிபுரம் கோட்ட ஆட்சித் தலைவர் திரு **சக்ரபாணி** அவர்களும், இரு நாட்களிலும் முறையே தலைமை வகித்தார்கள். அறிஞர்களின் சொற்பொழிவுகளும், சிறந்த இன்னிசை அரங்குகளும் விமரிசையாக நடைபெற்றன,

—ஆசிரியர்.

## அருள் நீராட்டு மங்கல விழா

பூம்புகார் மேலையூர் ஸ்ரீமாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் அவர்களின் தவராஜயோக மடத்தில், ஸ்ரீ சரபமூர்த்தி புதிய நிறுவன கும்பாபிஷேகம், 25-5-68 **வியாழன் அன்று** காலை, மிகவும் சிறப்புற நடைபெற்றது. தீமைகளையும் இடர்களையும் அகற்றி, அருள் புரிதலில் ஸ்ரீ சரப மூர்த்தி மிகவும் ஆற்றல் வாய்ந்தவர். மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. *1178-1218*) அமைத்த திரிபுவனம் கோயிலிலும், ஸ்ரீ சரபமூர்த்தியின் திருவுருவம் மிக்க சிறப்புடன் அமைந்து விளங்குவது, அன்பர்கள் தரிசித்து மகிழ்தற்கு உரியது.

—ஆசிரியர்.

## பங்குனி உத்திரப் பெருவிழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரிசிராமலே | .... | தெப்பத் திருவிழா (1-4-68—11-4-68) |
| 2. | கோவை | .... | பேரூர்பட்டிப் ஸ்ரீ பெருமான் திருக்கோயில் (26-3-68 — 10-4-68) |
| 3. | கரூர் | .... | ஸ்ரீகலியாண பசுபதீசுவரர் கோயில் (3-4-68 — 14-4-68) |
| 4. | செட்டிகுளம் | .... | ஏகாம்பரேசுவரர் தண்டபாணி சுவாமி கோயில் (2-4-68 — 15-4-68) |
| 5. | காஞ்சிபுரம் | .... | ஏகாம்பரநாதர் கோயில் (1-4-68 — 12-4-63) |
| 6. | வடுவூர் | .... | கோதண்டராமசுவாமி கோயில் (6-4-68 — 15-4-68) |
| 7. | திருவாரூர் | .... | தியாகராச சுவாமி கோயில் (17-3-68 — 20-4-68) |
| 8. | திருஆனைக்கா | .... | அகிலாண்டநாயகி திருக்கோயில் (25-3-68 — 15-4-68) |





விருத்தாசலத்திற்கு அருகேயுள்ள ஸ்ரீ கொளஞ்சியப்பர் கோயிலுக்கு, நமது அறநிலைய ஆணையர் திரு ஆ. இராதாகிருஷ்ணன் M. A., B. L., அவர்கள் வருகை தந்து, விழுப்புரம் மேற்பார்வை மின் பொறியாளர் திரு பி. நாராயணன் B. E., அவர்கள் தலைமையில், மின்குழல் விளக்குகளை ஏற்றி வைத்தல். *(31-3-68)*.